Follow us:

வாரவெளியீடு

# தமிழன்

THAMILAN WEEKLY

තමිලන් සතිඅන්තය

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 01, இதழ் : 05 சார்வரி வருடம், ஆடி மாதம், 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (26.07.2020) ஹிஜ்ரி - 1441 துல்ஹஜ் பிறை-04, 0115886187 பக்கங்கள் 16


விலை ரூ.30

## நக்கல்நமசிவாயம்

கொஞ்சம் வாய்க்கு ருசியா சாப்பிடலாமெண்டு கடைக்குப் போனா...

என்ர வீட்டுச்சாப்பாடு போல ரேஸ்ட்டா இருக்கும் எண்டு கடைக்காரன் சொல்லுறான்...

பேசாம திரும்பி வந்துட்டன் ஹாஜியார்...




அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் முழுமையான சுகாதார பாதுகாப்புத்தன்மை கொண்டது.

பிரத்தியேகமான விசேட கிருமி எதிர்ப்புத் தன்மை கொண்ட இரசாயன கலவை மற்றும் இயற்கை மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட நறுமணம் மிக்க சிறப்பு நிறப்பூச்சைக் (பெயின்ட்) கொண்டு நமது பத்திரிகை அச்சிடப்படுகின்றது என்பதை வாசகர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.




## 'வெடி'மணியம்



மாவை சேனாதிராசா அரசியல் கைதிகளை விடுவிக்கச்சொல்லி மகிந்தவுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

தமிழ்நாட்டில் கருணாநிதிதான் உந்த கடிதம் எழுதுறதில வலு விண்ணர்...

இப்ப எங்கட நாட்டில இப்ப மாவை சேனாதிராசர்...

கையில பலமும் சந்தர்ப்பமும் இருக்கும் போது;
ஆவெண்டு முகட்டைப்பாத்துகொண்டு இருந்துவிட்டு....

இப்ப எலெக்சன் வந்ததும் புலுடாக்கதைகளுக்கு குறைவில்லை எண்டு "கோப்பிறேசனில்" கதைச்சவங்களாம்...

"புலுடா" எண்டதும் இன்னொரு கதை நினைவுக்கு வருகுது..

கொஞ்ச நாளுக்குமுதல் சஜித் பிரேமதாச வன்னிக்கு வந்து கால்பந்து விளையாடினவர்...

"சேர் அடிக்கும் போது விட்டமாதிரி ஒரு கோலை விடுடா" எண்டு ஒருத்தர் சொல்ல;

சஜித் ஓங்கி அடிப்பார் ஒரு "அடி"...

"என்னா அடி... கோல்" எண்டு ஒரு கூட்டம் கத்தினதை பாத்து சிரிச்சு வயிறு நொந்து அழுதனாங்கள்....

"13 ஐ தாண்டுவன்" எண்டு கையோட கையா சஜித் சொல்லிப்போட்டு போனதா பேப்பரில செய்தி வந்தது.

வவுனியா தாண்டி கொழும்பு வந்த கையோட;

"13 பிளஸ் எண்ட பேச்சுக்கே இடமில்லை" எண்டு குத்துக்கரணம் அடிச்சிருக்கிறார்....

எங்கட சனத்தை கால்பந்தாக நினைச்சு அடிச்சு விளையாடுறார் சஜித்...

சனாதிபதி தேர்தலில் உவருக்கு போடச்சொல்லி கனபேர் கூவித்திரிஞ்சவை...

சஜித்தான் உப்பிடி எண்டு மகிந்தவிட்ட போனால்;

"பிரபாகரன் துவக்கால வெருட்டிக்கேட்டும் கொடுக்காத தமிழீழத்தை பேனையால கேக்கும் போது தூக்கிக்கொடுக்க எனக்கு விசரோ?" எண்டு கேட்டிருக்கிறார் மகிந்த....

உண்மை தானே!

"சுதந்திரம் என்பது பிச்சையெடுப்பதல்ல. போராடிப்பெறுவது"...

இண்டைக்கு சந்திக்கு சந்தி நிண்டு வெட்டுவம் புடுங்குவம் எண்டு முக்குற அரசியல்வாதிகளுக்கு;

"ரோசநரம்பு" எண்டு ஒண்டு

03 »



வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ பெருவிழா சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ள நிலையில் சம்பிரதாய பூர்வமாக கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை எடுத்துவரும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. செங்குந்தர் பரம்பரையினரால் நல்லூர் ஆலயக் கொடியேற்றத்திற்கான கொடிச்சீலை சம்பிரதாயபூர்வமாக ஆலயத்தில் ஒப்படைக்கப்படுவது பாரம்பரிய வழக்கமாகும்.

## விருப்பு வாக்குச்சண்டையை நிறுத்த ஆளுங்கட்சிக்கு

# எச்சரிக்கை!

### அவசர கடிதம் அனுப்பினார் மஹிந்த தேசப்பிரிய

நமது அரசியல் செய்தியாளர்

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் விருப்பு வாக்குகளை அதிகரித்துக்கொள்வதற்காக தேர்தல் விதிமுறைகளை மீறி ஆளுங்கட்சி உறுப்பினர்கள் நடந்து கொள்வதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும், இதனால் ஒழுங்குமுறையாக நடந்து கொள்ளுமாறும் வலியுறுத்தி தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய ஆளுங்கட்சிக்கு அவசர கடிதம் ஒன்றை...

02 »



## அகதி அந்தஸ்து கிடைக்காததால் தற்கொலை!

## ரயில் முன் பாய்ந்த இலங்கைத் தமிழ் இளைஞர்!

### அவுஸ்திரேலியாவில் பரிதாபம்



அவுஸ்திரேலியாவில் அகதி தஞ்சம் பெறுவதற்கு போராடி வந்த தமிழ் இளைஞர் ஒருவர் புகையிரதத்தின் முன் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

சுப்ரமணியம் தவப்புதல்வன் (வயது 36) என்ற இளைஞரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டதாக அகதிகள் செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். இவர் இலங்கை மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியை சொந்த இடமாகக் கொண்டவர் ஆவார்.

அவுஸ்திரேலியாவுக்கு படகு மூலம் சென்று அகதி தஞ்சம் கோரிய இவர், 4 வருடங்கள் பிரிஸ்பேர்னிலும் அதன் பின்னர் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக சிட்னியிலும்

02 »

## நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் தமிழர் பொங்கல் திருவிழா உற்சவம்



(முல்லைத்தீவு)

பௌத்த பிக்குவால் ஆக்கிரமிக்கப்பட்டு விகாரை அமைக்கப்பட்டுள்ள முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் 2020ஆம் ஆண்டுக்கான தமிழர் திருவிழா...

02 »

## நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதிகள் - பிரதமர்கள் - புத்திரர்கள்

முன்னாள் ஜனாதிபதிகள் இருவர், முன்னாள் பிரதமர் மற்றும் பிரதமர்கள் நால்வருடைய புத்திரர்கள் இடம்பெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளராக களமிறங்கியுள்ளனர்.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 5ஆம் திகதி இடம்பெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ குருநாகல் மாவட்டத்திலும், மைத்திரிபால சிறிசேன....

02 »

## 11, 12, 13ஆம் தரங்களுக்கான கற்றல் திங்கட்கிழமை ஆரம்பம்

அரச பாடசாலைகளின் 11, 12 மற்றும் 13ஆம் தரங்களுக்கான கற்றல் நடவடிக்கைகள் 27 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

இந்நிலையில், நாடாளுமன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் அதிபர்களை எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய் தொடக்கம் 31ஆம் திகதி வரை பாடசாலைகளுக்கு சமூகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

02 »

## தேர்தலில் நூறு வேட்பாளர்கள் ஆயிரம் கோடி ரூபா நிதி செலவு

### கொழும்பு - அநுராதபுரம் - குருநாகல் - மாத்தறை மாவட்டங்களில் அதிக விதிமீறல்கள்

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் நூறு வேட்பாளர்கள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக பெருமளவு நிதியை செலவு செய்துள்ளதாக தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த ஜனாதிபதித் தேர்தல், இடம்பெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் ஆகியவற்றின் பிரசார நடவடிக்கைகளுக்காக செலவு செய்யப்பட்டுள்ள நிதி...

02 »






## உங்கள் விளம்பரங்களுக்கு நாடுங்கள்

"தமிழன்" பத்திரிகையில் தேர்தல் பிரசார விளம்பரங்கள், வர்த்தக மற்றும் இன்னோரன்ன விளம்பரங்களை பிரசுரிப்பதற்கு தொடர்புகொள்ளுங்கள்.

தொ.பே.இலக்கம் : **077 693 0739** மின்னஞ்சல் : **aslam@liberty.lk**

இணையம் : **www.thamilan.lk**


## முதலாம் பக்கத்தொடர்ச்சி

### நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில்...





பொங்கல் உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. ஆக்கிரமிப்புக்குள்ளாகி வரும் எல்லை கிராமமான கொக்குத்தொடுவாய் கோட்டைக்கேணி பிள்ளையார் ஆலயத்திலிருந்து வெள்ளிக்கிழமை அதிகாலை பாரம்பரிய முறைப்படி மடப்பண்டம் எடுத்துவரப்பட்டு கச்சு நேருதல், வளர்ந்து நேருதல் சடங்குகள் இடம்பெற்று சிறப்பு பூஜைகளுடன், மதியம் அபிஷேகத்துடன் அடியவர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

இந்த பொங்கல் நிகழ்வு நடைபெற்றுகொண்டிருந்த நேரம் நூற்றுக்கணக்கான பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் ஆலய சுழலில் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்ததோடு, பொலிஸார் மற்றும் அரச புலனாய்வாளர்கள், ஆலயத்திற்கு வழிபாட்டுக்காக வந்த மக்களையும் பூசாரி மற்றும் ஆலய நிர்வாகத்தினரையும் புகைப்படம் எடுத்து அச்சுறுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தனர்.

கொரோனா பரவல் காரணமாக மட்டுப்படுத்தப்பட்டவர்களுக்கான அனுமதியுடன் சுகாதார விதிமுறைகளை பேணியவாறு பொங்கல் நிகழ்வு இடம்பெற்றது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் நீராவியடி பிள்ளையார்ஆலயத்தில் இடம்பெறுகின்ற முதலாவது பெரிய நிகழ்வாக இந்த பொங்கல் விழா இடம்பெற்றிருந்தது. அத்தோடு, நீராவியடி பிள்ளையார் ஆலயத்தை அபகரித்து அங்கிருந்த பௌத்த பிக்கு இறந்த பின்னர் இடம்பெறுகின்ற நிகழ்வாகவும் இது அமைந்திருந்தது. அளவுக்கதிகமான பொலிஸார் மற்றும் இராணுவ புலனாய்வாளர்களின் கண்காணிப்பை தவிர எந்தவிதமான இடையுறுகளும் இன்றி பொங்கல் நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

பிரதான பானைகளில் பொங்கல் வைக்கப்பட்ட நேரத்தில் ஏனைய பானைகளில் மக்கள் பொங்கல் வைத்து பொங்கி வழிபாடுகளில் ஈடுபட்டனர். இந்தப் பொங்கல் நிகழ்வில் செம்மலை கிராம மக்கள், கொக்குத்தொடுவாய் கிராம மக்கள் முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் லோகேஸ்வரன் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

### அகதி அந்தஸ்து...

இவரது அகதி தஞ்சக் கோரிக்கை குடிவரவுத் திணைக்களத்தினாலும் மீளாய்வு மையத்தினாலும் நிராகரிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் நீதிமன்றத்தின் உதவியை நாடியிருந்தார். இவரது மனு மீதான தீர்ப்பு எதிர்வரும் நவம்பர் மாதமளவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்டிருந்த வேளையில் இவர் சில தினங்களுக்கு முன்னர் சிட்னி (Blacktown) பிளக் டவுன் பகுதியில் புகையிரதத்தின் முன் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

அகதி அந்தஸ்து கிடைக்காத விரக்தியில் அவர் இருந்ததாகவும், அதனாலேயே இந்த முடிவை எடுத்திருக்கலாமென்றும் அவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவிக்கின்றனர்.

மரணவிசாரணை அதிகாரியினால் இவரது சடலம் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கையளிக்கப்பட்ட பின்னர் இறுதிக்கிரியைகள் நடத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

### நாடாளுமன்ற...

பொலநறுவை பிரதேசத்திலும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பு மாவட்டத்திலும் போட்டியிடுகின்றனர். முன்னாள் பிரதமர்களாகிய ரணசிங்க பிரேமதாஸவின் மகன் சஜித் பிரேமதாஸ கொழும்பு மாவட்டத்திலும், ரத்னசிறி விக்ரமநாயக்கவின் மகன் விதுர விக்ரமநாயக்க களுத்துறை மாவட்டத்திலும், டி.எம். ஜயரத்னவின் மகன் அநுராத ஜயரத்ன கண்டி மாவட்டத்திலும், தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷ ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் போட்டியிடுகின்றனர். இவர்களில் அநேகமானவர்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### தேர்தலில்...

தொடர்பில் தேர்தல் வன்முறை கண்காணிப்பு மத்திய நிலையம், கண்காணிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

சமூக வலைத்தளங்களில் விளம்பரங்களை வெளியிடுதல், இணையத்தளங்களில் விளம்பரங்களை வெளியிடுதல், வாக்காளர்களுக்கு நிதி பகிர்தல், பொருட்களை கொள்வனவு செய்வதற்காக வாக்காளர்களுக்கு டோக்கன்களை பகிர்தல் ஆகிய செயற்பாடுகளுக்காக இந்த நூறு வேட்பாளர்களும் பெருமளவு நிதியை செலவு செய்துள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பு, அநுராதபுரம், குருநாகல், மாத்தறை ஆகிய மாவட்டங்களில் போட்டியிடும் வேட்பாளர்களே நிதி வழங்குதல் மற்றும் டோக்கன்களை வழங்குதல் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக அண்ணளவாக ஆயிரம் கோடி ரூபா நிதியை செலவு செய்துள்ளதாகவும் அந்த அமைப்பின் தேசிய ஒருங்கிணைப்பாளர் மஞ்சுல கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது 35 வேட்பாளர்கள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக 3 ஆயிரத்து 976 மில்லியன் ரூபாவை செலவு செய்துள்ளதாகவும் ஜனாதிபதித் தேர்தலின்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆயிரத்து 826 மில்லியன் ரூபாவையும், புதிய ஜனநாயக முன்னணி ஆயிரத்து 737 மில்லியன் ரூபாவையும், தேசிய மக்கள் சக்தி 169 மில்லியன் ரூபாவையும் செலவு செய்துள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

### 11, 12...

கொவிட் - 19 வைரஸ் பரவலின் தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு பாடசாலைகளை ஆரம்பிக்கும் தினம் மற்றும் பரீட்சையை நடத்தும் தினம் தொடர்பாக திருத்தம் முன்னெடுக்கப்பட்டு இருக்கிறது. அதற்கமைய 11, 12 மற்றும் 13ஆம் தர மாணவர்களுக்கான கற்றல் நடவடிக்கைகள் முற்பகல் 7.30 மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரை இடம்பெறும். ஒகஸ்ட் மாதம் 10ஆம் திகதியிலிருந்து ஏனைய வகுப்புகளுக்கான கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேலும், மாணவர்களை பாடசாலைகளுக்கு அழைக்கும்போது சுகாதார அதிகாரிகளால் வழங்கப்பட்டுள்ள சுகாதார வழிமுறைகள் மற்றும் கல்வி அமைச்சினால் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள விசேட ஆலோசனைகள் ஆகியவற்றுக்கமைவாக பாடசாலைகளின் நிர்வாகச் செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு சகல பாடசாலைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலுக்காக பாடசாலைகளை தயார்ப்படுத்தல் தொடர்பாகவும் தேர்தல் நடவடிக்கைகளுக்கான விழிப்புணர்வுகளை வழங்குவதற்காகவும் எதிர்வரும் 28, 29, 30 மற்றும் 31ஆம் திகதிகளில் பாடசாலைகளுக்கு சமுகமளிக்குமாறும் தேர்தல் நடவடிக்கைகளுக்காக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள சகல பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் உப அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த காலவரையறைக்குள் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், உதவி ஆணையாளர்களுடன் கலந்துரையாடியதன் பின்னர் தேர்தல் செயற்பாடுகளுக்கு தேவையான வசதிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### விருப்பு...

அனுப்பியுள்ளாரென அறியமுடிந்தது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர ஆகியோருக்கு இவ்வாறு கடிதமொன்றை அனுப்பியுள்ள தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர், விருப்பு வாக்கு சண்டையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அவ்வாறில்லாத பட்சத்தில் அவை தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலைமை ஏற்படுமெனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொலனறுவை மாவட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் எம்.பி.ரொஷான் ரணசிங்க ஆகியோருக்கிடையிலான விருப்பு வாக்குச் சண்டை உச்சத்தை அடைந்து பலரின் விமர்சனங்களுக்குள்ளாகியுள்ள நிலையில் தேர்தல் ஆணைக்குழு இந்த எச்சரிக்கையை விடுத்ததுள்ளமை குறிப்பிடத்தக்கது.



அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



# “போராட்டமே எனது அரசியல் வாழ்வாக மாறிவிட்டது”

## முன்னாள் அமைச்சர் ரிஷாட்!



‘‘போராட்டக் காலத்தில்தான் எனது அரசியல் வாழ்வு ஆரம்பிக்கப்பட்டது. எனினும், போராட்டங்களே எனது அரசியல் வாழ்வாக மாறிவிட்டது’’ என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

வன்னி மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, நகர சபைத் தலைவர் நஹுஸீன் தலைமையில், மன்னார், உப்புக்குளத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்று, உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய முன்னாள் அமைச்சர் ரிஷாட்,

“19 வருட அரசியல் பயணத்தில், எல்லாக் காலமும் போராட்டத்துடனேயே நீச்சலடித்து வருகிறேன். உங்கள் ஊரான உப்புக்குளத்தில் ஓர் ஆர்ப்பாட்டம் நடந்தபோது, அது முடிந்த பின்னரேயே கொழும்பிலிருந்து நான் இங்கு வந்தேன். என்னுடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக்கும் வந்திருந்தார். பிரச்சினைகள் முடிந்த பின்னர், நாம் இங்கு வந்தபோதும், நடந்த அனைத்துப் பிரச்சினைகளையும் என்தலையில் கட்டி, நீதிமன்றப் படிக்கட்டுகளை ஏற வைத்தார்கள். அங்கு கைகட்டி நிற்கும் நிலையை ஏற்படுத்தினார்கள் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

அதேபோன்று, ‘வில்பத்துப் பிரச்சினை’ என்ற போர்வையில் என்னை பாடாய்ப்படுத்தி வருகிறார்கள். முசலி பிரதேசத்திலுள்ள கரடிக்குளி, பாலைக்குளி, மறிச்சுக்கட்டியில் முன்னர் வாழ்ந்த மக்களை மீண்டும் அவர்களது சொந்தக் காணிகளில் குடியேற்றம் செய்ததற்காக, “வில்பத்துவை அழிக்கின்றேன்” என பிரசாரத்தைக் கட்டவிழ்த்துவிட்டார்கள். இனவாதத் தேரர்களால் ஆரம்பித்துவைக்கப்பட்ட இந்தப் பிரசார நாடகம், இன்றுவரை என்மீதான வழக்குகளாக மாறி நீதிமன்றத்தில் உள்ளன. இவைதான் எங்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள்.

எனது 19 வருட அரசியல் வாழ்வில், இதுவரை எந்த தனிப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பிலும், பொலிஸிலோ, நீதிமன்றத்திலோ முறைப்பாடோ வழக்குகளோ இல்லை. இந்த அரசாங்கம் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி, பயங்கரவாதச் சம்பவத்துடன் என்னையும் தொடர்புபடுத்தி, விசாரணைகள் என்ற போர்வையில் அடிக்கடி அழைக்கின்றனர். இது தொடர்பில் பல நாட்கள், பல தடவைகள் விசாரிக்கப்பட்டும் பின்னர், இறுதியாக 10 மணித்தியாலம் விசாரிக்கப்பட்டேன். இப்போது மீண்டும் 27ஆம் திகதி விசாரணைக்கு வருமாறு நீதிமன்ற உத்தரவு பெற்றிருக்கின்றார்கள்.

இவ்வாறுதான் எனது சகோதரர் ரியாஜ் பதியுதீனை “இரண்டு நாட்களில் விடுவித்து விடுவோம்” எனக் கூறி அழைத்துச் சென்றவர்கள், 100 நாட்கள் வரை நியாயமின்றி தடுத்துவைத்துள்ளனர். அதேபோன்று, எனது மற்றைய சகோதரர் ரிப்கான் தொடர்பில் பொய்யான வாக்குமூலமொன்றை வழங்கிய முன்னாள் புலனாய்வு அதிகாரி ஒருவர், சஹ்ரான் தப்பிச்செல்வதற்கு அவர் உதவியதாகக் கூறினார். வாக்குமூலம் அளித்த அடுத்தநாள் மீண்டும் அந்த அதிகாரி சென்று, “அது ரிப்கான் அல்ல ரியாஜ் பதியுதீன்” என்று வாக்குமூலம் ஒப்புவிக்கின்றார். ஆனால், இந்தியாவுக்கு சஹ்ரான் போகவே இல்லை என்று இந்திய உளவுப்பிரிவு அறிவித்ததாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் கூறியுள்ளார்.

“உயிர்த்த ஞாயிறு தாக்குதலிலோ, வேறெந்த பயங்கரவாத சம்பவத்துடனோ ரிஷாட் பதியுதீனுக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை” என தற்போதிருக்கும் பொலிஸ்மா அதிபரே அப்போது நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு தனது கையெழுத்திட்டு அறிக்கை வழங்கினார். இப்போது 15 மாதங்கள் கடந்த பின்னர், மீண்டும் என்னை விசாரணைக்கு வருமாறு தேர்தல் காலத்தில் அழைப்பதன் நோக்கம்தான் என்ன?” என்றார்.

இந்தக் கூட்டத்தில் வேட்பாளர்களான சட்டத்தரணி ஹுனைஸ் பாரூக், பகீரதன், ரஞ்சன் குரூஸ் ஆகியோரும் உரையாற்றினர். கட்சியின் கண்டி மாவட்ட அமைப்பாளர் ஹம்ஜாட், கண்டி மாவட்ட இணைப்புச் செயலார் ரியாஸ் இஸ்ஸதீன். குருநாகல் மாநகர சபை உறுப்பினர் அசார்தீன் உட்பட ஊர்ப்பிரமுகர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

## ‘வெடி’மணியம் தொடர்ச்சி

*இருந்தால்.... மஹிந்த சொன்னது அவைக்கு உறைச்சிருக்கவேணும்!*

*ரோசநரம்பு எண்டதும் சம்பந்தன் ஐயாவிட நினைப்பு வந்திட்டுது....*
*“அமைச்சுப்பதவி கேக்குறாராம் உங்கட பேச்சாளர்” எண்டு சம்பந்தன் ஐயாட்ட கேக்க;*

*“உது பழைய கதை. அது அவற்ற தனிப்பட்ட கருத்து. ஆற்றவேண்டிய கருமம் கனக்க இருக்கு” எண்டு ஐயா கோவத்தோட கத்தியிருக்கிறார்....*
*கத்தி நாலு நாளால....*
*“ஆட்சிக்கு வரும் கட்சியோட இணக்கமாய் பேசி அரசியல் தீர்வை காணுவம்” எண்டு சம்பந்தர் திருவாய் மலர்ந்திருக்கிறார்...*

*“அது என்ன இணக்கம்?” எண்டு கேட்டியள் எண்டால் ஐயாக்கு மறுபடியும் மூலக்கொதி வந்திடும்.*
*மூலக்கொதி எண்டதும் கம்பவாரிதி ஜெயராச்சின் அரசியல் கட்டுரைகளும் கவிதைகளும்தான் நினைவுக்கு வருகுது.*

*பொதுபலசேன அமைப்பின் ஆமத்துறு ஞானதாசதேரர் போலவே கம்பவாரிதியையும் பாக்கவேண்டியிருக்கு...*
*தேர்தல் வந்தால் அவற்ற “கச்சேரி” களைகட்டும்...*

*இந்தமுறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காய்;*
*வாங்கின காசுக்கு மேல கூவுறார் எண்டு இளம்பொடியள் நக்கலடிக்கிறாங்கள்.*

*ஆன்மீகத்தை முழுநேரத்தொழிலாக கொண்ட கம்பவாரிதி ஜெயராஜ்;*
*தேர்தல் காலங்களில் தொழிலை மாத்தி அரசியலில் முழுநேரமாக இறங்கிவிடுவார்...*

*ஆன்மீகவாதிகள் ஆன்மீகவாதிகளாகவே இருப்பதே இந்த சமூகத்துக்கும் நல்லது. அவைக்கும் நல்லது...*

*ஆன்மீகவாதி எண்டதும் எங்கட பட்டை தாடி விக்கி ஐயான்ர முகம்தான் கண்ணுக்கு முன்னால வருகுது.*
*“பிரபாகரன் கூட்டமைப்பை உருவாக்கினார். நான் கூட்டணியை உருவாக்கினன்” எண்ட கருத்துப்பட சொற்பொழிவு ஆத்தியிருக்கிறார் ஐயா!*

*ஐயாவுக்கு எலெக்சன் வாற நேரம் தான் பிரபாகரன் நினைவுக்கு வருவார். எலெக்சன் முடிய மறந்திடுவார். ஒரு வகை வியாதி இது...*

*வியாதி எண்டதும் நாட்டில நடக்கும் கொடுமைகளை சொல்லவேணும்!*
*இந்தவருசம் இன்னும் முடியவில்லை. ஆனால் நாடுமுழுக்க 5500 இக்கும் அதிகமான சிறுவர் துஷ்பிரயோகங்கள் நடந்திருக்கு எண்டு முறைப்பாடு செய்யப்பட்டிருக்கு.*

*பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகள் 1600 இக்கும் மேல!*

*நாடு நாசமாகப்போய்க்கொண்டிருக்கு என்பதை இதைவிட தெளிவா சொல்லமுடியாது.*

*ஆனால் ஒரேயடியா அப்பிடிச்சொல்ல முடியாது. காரணம், வெகுவிரைவில் இன்னும் 10 புதிய பல்கலைக்கழகங்களை உருவாக்க திட்டம் ஒண்டு போட்டிருக்கினமாம்.*

*பல்கலைக்கழகங்கள் இல்லாத மாவட்டங்களில் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்படுமாம்.*
*அப்பிடியெண்டால் எங்கட தமிழ் ஆக்களுக்கு இன்னும் ரண்டு பல்கலைக்கழகங்கள் உருவாகலாம்.*

*முல்லைத்தீவிலும் மன்னாரிலும் கம்பஸ் வந்தால் வலு சந்தோசம்.*

*கிளிநொச்சியில கம்பஸ் வாறதுக்கு வாய்ப்பில்லை. காரணம், அங்க யாழ்ப்பாண கம்பசின் வளாகம் ஒண்டு இருக்குதல்லோ!*
*இருந்தாலும் தெண்டிச்சு கதைச்சுப்பாத்தால் வர வாய்ப்பிருக்கு...*

*கிளிநொச்சி எண்டதும் சிறிதரனின் சினிமாத் தியேட்டரும் பெரிய ஹோட்டலும் தான் கண்ணில தெரியுது. அதைவிட கோடிக்கணக்கில் பெறுமதியான பெரிய வீடு ஒண்டும் யாழ்ப்பாணத்தில இருக்காம்.*

*“பத்து வருசத்தில உது எல்லாத்தையும் எப்பிடி சுருட்டினவர்?” எண்டு சுரேஸ் பிரேமச்சந்திரன் புறுபுறுத்திருக்கிறார்.*

*கள்ளவோட்டு சிக்கலுகள் மற்றும் உப்பிடியான காசுப்பிரச்சினைகள் வந்தால்;*
*சட்டச்சிக்கலை தீர்க்கத்தான் சிறிதரன் சுமந்திரனோட சுத்துறார் எண்டு கிளிநொச்சி சந்தையில கதைச்சவையாம்.*
*மலிஞ்சா சந்தைக்கு வரும்தானே!!!*

*“வீரசிங்கம் மண்டபத்துக்கு ஏலுமெண்டா வா” எண்டு கஜேந்திரகுமாரை சுமந்திரன் சண்டைக்கு கூப்பிட்டவராம்.*

*கஜேந்திரகுமார் ஏதோ அலுவல் எண்டு எங்கட “வட்டுக்கோட்டை சிங்கம்” சுகாஸை அனுப்பினவராம்.*
*“சின்னப்பொடியளோடையெல்லாம் என்னால சண்டை பிடிக்கேலாது. ஏலுமெண்டால் கஜேந்திரகுமார் வரட்டும் பாப்பம்” எண்டு சவால் விட்டிருக்கிறார் சுமந்திரன்.*

*“நாங்கள் பயப்பிடேல்லை. சுமந்திரன் தான் சுத்துமாத்தா கதைக்கிறார். வரட்டும் பாப்பம்” எண்டுறார் கஜேந்திரகுமார்.*
*உப்பிடியே ஆளாளுக்கு சாவல் விட்டுக்கொண்டிருந்தால் எப்ப புதினம் பாக்குறது?*
*எலெக்சன் முடியமுதல் ஒரு இடத்தில கூடி அ[க]டிபட்டியள் எண்டால் சனத்துக்கு பம்பலா இருக்கும்....*

*பம்பல் எண்டதும் இன்னொண்டு நினைவுக்கு வருகுது.*
*உங்க கன அரசியல்வாதிகள் தேர்தலுக்கு எண்டு “பாட்டு” விடுகினம்.*
*சிலர் “குறும்படம்” விடுகினம்!*
*அதுகளைப்பாத்தியள் எண்டால் வாய்விட்டு சிரிக்கலாம். உடம்புக்கு நல்லது.*

*எலெக்சனுக்கு முதல் “ரிசாட் பதியுதீனை” உள்ளுக்க தள்ளி கம்பி எண்ண வைக்க சதி நடக்குது எண்டு காத்தான்குடியில் கதைக்கினம்....*
*ஈஸ்ரர் குண்டு சஹ்ரானோடை தொடர்பு எண்டு சொல்லி அவரை உள்ள தள்ள அலுவல் நடக்குது.*
*“குண்டுவெடிப்புக்கும் தனக்கும் சஹ்ரானுக்கும் சம்பந்தம் இல்லை” எண்டு தன்ர பிள்ளைகளின் தலையில அடிச்சு சத்தியம் பண்ணுறார் றிசாட்.*
*ஆனாலும் பொலிசும் சி.ஐ.டியும் சும்மா விடுகிறமாதிரி தெரியவில்லை! எலெக்சனுக்கு முதல் றிசாட்டை கைதுசெய்தால் காத்தான்குடியில் சலசலப்பு ஏற்படலாம்...*

*சலசலப்பு எண்டதும் ஜீவன் தொண்டமானின் வீடியோ ஒண்டு டக்கெண்டு நினைவுக்கு வருகுது.*
*மலையகத்தில் நடந்த நிகழ்வொன்றில் ஜீவன் தொண்டமான் ஓடிப்போய்;*
*கூட்டத்தில் இருந்த புத்தபிக்குகளின் முன்னே குனிஞ்சு வளைஞ்சு கும்பிடுவார். குனியுறதெண்டால் அப்பிடி ஒரு “குனிவு”!*

*அது முடிய பக்கத்தில் முஸ்லிம், சைவ மதகுருக்கள் இருப்பினம். அவையைப்பார்த்து ஏனோ தானோ எண்டு கும்பிடு போட்டுவிட்டு போய்விடுவார்....*
*கொஞ்சத்தூரம் தள்ளி அவரின் எடுபிடி ஒருத்தர் ஓடி வந்து;*
*“ வீடியோ எடுக்கிறாங்கள். எல்லாருக்கும் குனியவேணும்” எண்டு காதுக்குள்ள குசுகுசுப்பார்...*
*உடன ஜீவன் திரும்பவும் ஓடிப்போய் குனிஞ்சு எல்லாரையும் கும்பிடுவார்.*
*என்ன “நடிப்புடா” சாமி!*
*மலையக மக்களை அந்த மாத்தளை முத்துமாரியம்மன் தான் காப்பாத்தவேணும்.*

*கடைசியா ஒரு முக்கியமான விசயத்தை மறந்திட்டன்....*
*இந்தா வருகுது! அந்தா வருகுது!! எண்டு ஆர்வத்தை தூண்டிய கூட்டமைப்பு கடைசியா “தேர்தல் விஞ்ஞாபனத்தை” வெளியிட்டது.*
*மாவை சேனாதிராசா எழுத்துக்கூட்டி வாசிச்சும் அவருக்கே அதில என்ன எழுதியிருக்கு எண்டு விளங்கையில்லை....*

*விஞ்ஞாபனத்தை ஒரு நாளுக்கு முதல் குடுத்து மாவை சேனாதிராசாவை வாசிக்க பழக்கியிருக்கலாம். அதை அவர்கள் செய்யவில்லை. நேரமில்லைப்போல கிடக்கு!*
*சேனாதிராசா வாசிக்க வாசிக்க பக்கத்தில் இருந்த சித்தார்த்தன்;*
*விஞ்ஞாபனத்தை புரட்டி புரட்டி எதையோ தேடினார். கடைசிவரை அவர் என்னத்தை தேடினார் எண்டு அவரும் சொல்லவில்லை. சனமும் கேக்கேல்ல !*
*சரி பறுவாயில்லை விஞ்ஞாபனத்தை வெளியிட்ட முதலாவது தமிழ்க்கட்சி எண்டு பெருமையா நான் சொல்ல;*
*“எணை அப்பு உது போனமுறை வெளியிட்ட அதே விஞ்ஞாபனம். அங்கின இங்கின மானே தேனே எண்டு நாலு சொல்லை மாத்தியிருக்கினம்” எண்டுறான் என்ர பேரன்.*

*குறுக்காலபோவார்!*

*வயது போன கண்தெரியாத காலத்திலை எங்களை இப்பிடி ஏமாத்துறது பிழையான வேலை....*

*அடுத்தகிழம சந்திப்பம்...*


# AIA இன்ஷுவரன்ஸ்
# நிதியியல் ஸ்திரத்தன்மை - நிலையான சேவை.




எங்கள் மீது நம்பிக்கை வைத்த அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். AIA குழுமத்தில் அங்கம்வகிப்பதுடன், **100 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தினைக் கொண்ட, உலகின் பாரிய ஆயுள்காப்புறுதி நிறுவனமாக** தேகாரோக்கியமான, நீண்ட, சிறப்பான வாழ்க்கையை உங்களுக்கு தொடர்ந்தும் வழங்க அர்பணிப்புடன் பணியாற்றுவோம். உங்கள் அன்புக்குரியவர்களின் நிதியியல் பாதுகாப்பினை உத்தரவாதப்படுத்தவே, நீங்கள் காப்புறுதியினை கொள்வனவு செய்கின்றீர்கள் என்பதனை நாம் நன்கு புரிந்துகொள்கின்றோம். AIA இன் பலம் மற்றும் ஸ்திரத்தன்மை மூலமாக, AIA உங்கள் வாழ்க்கைக்கு சிறந்ததை வழங்கும் என நாம் உறுதியளிக்கின்றோம்.

- இலங்கையின் காப்புறுதித் துறையில் பாரிய மூலதன விகிதத்தினைக் கொண்டிருத்தல்.
- 30 வருடங்கள் தொடர்ச்சியாக இலாபப்பங்கினைப் பகிர்ந்ததில் சாதனை (2019 ஆம் ஆண்டு 9.99% ஐ பகிர்ந்துள்ளது).
- உயர் தரத்திலான முதலீடுகளை மேற்கொண்டிருத்தல்.
- ஓய்வூதியம் மற்றும் தேகாரோக்கியம் போன்ற ஆயுள் காப்பீட்டுத் திட்டங்களின் முன்னோடி.

*12 மார்ச் 2019 ஆண்டின் சந்தை மூலதன மதிப்பின் அடிப்படையில், உலகின் பாரிய ஆயுள்காப்புறுதி நிறுவனம்

**ஓய்வூதியம், தேகாரோக்கியம் மற்றும் ஆயுள் காப்புறுதி**

AIA இன்ஷுவரன்ஸ்

HEALTHIER, LONGER, BETTER LIVES

AIA Insurance Lanka Limited (Co.No.PQ 18 PB) இனால் வெளியிடப்பட்டது. 07/13/2020

TBWA\SRI LANKA

# தேர்தலை நடத்த மேலதிகமாக 50 கோடி ரூபா




எதிர்வரும் பொதுத் தேர்தலை சுகாதார விதிமுறைகளுக்கமைய நடத்துவதாயின் மேலதிகமாக 50 கோடி ரூபா செலவாகும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, வாக்களிக்கும் மத்திய நிலையங்களின் பாவனைக்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ள கைக்கழுவும் கிருமிநாசினி திரவம், முகக்கவசம் மற்றும் கைகளில் மை தடவுவதற்கு பயன்படுத்தப்படும் மெழுகு குச்சிகள் என்பன குறித்த மாவட்டங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், வாக்கெண்ணும் மத்திய நிலையங்களின் பயன்பாட்டிற்காக உடல் வெப்பநிலையை அளக்கும் 60 வெப்பமானிகளை கொள்வனவு செய்வதற்கு தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

தேர்தல்கள் செலவுக்காக 100 கோடி ரூபா மத்திய திறைசேரியினால் தற்போது பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, அச்சிடும் செலவுகளுக்காக 10 கோடி ரூபாவை அரச அச்சகத்திற்கு வழங்கியுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையின் பூர்வீகக்குடிகள் தமிழர்களா? விக்னேஸ்வரனிடம் சி.ஐ.டி. விசாரணை!



இலங்கையின் மூத்த குடிகள் தமிழர்களே என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் வெளியிட்ட அறிக்கை தொடர்பாக வெள்ளிக்கிழமை சி.ஐ.டி.யினரால் அவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நல்லூரிலுள்ள அவரது அலுவலகத்துக்குச் சென்ற சி.ஐ.டி.யினர் விக்னேஸ்வரனிடம் விசாரணை நடத்தினர்.

அண்மையில் விக்னேஸ்வரன் வெளியிட்ட அறிக்கையொன்றில், இலங்கையின் பூர்வீகக்குடிகள் தமிழ் மக்களே என வரலாற்றாதாரங்களுடன் தெரிவித்திருந்தார். இது தொடர்பாகவே விசாரணை நடத்தப்பட்டது. விக்னேஸ்வரனின் அறிக்கை இனங்களுக்கிடையில் முறுகலை ஏற்படுத்தும் எனக் குறிப்பிட்டு, அவர் அவ்வாறான அறிக்கையை வெளியிட்டாரா என்பதை உறுதிசெய்யவே வந்ததாக விசாரணைக்கு வந்த சி.ஐ.டி. அதிகாரி தெரிவித்தார்.

இலங்கையின் மூத்தகுடிகள் தமிழர்களே என்பதை சி.ஐ.டி. அதிகாரிக்கும் தெரிவித்த விக்னேஸ்வரன், தான் அவ்வாறு அறிக்கை வெளியிட்டது உண்மையெனக் குறிப்பிட்டு, அறிக்கையின் பிரதியொன்றையும் வழங்கியுள்ளார்.

# சிங்களவர், தமிழர், முஸ்லிம் என்ற வேறுபாடின்றி முழு நாட்டுக்கும் சமமான அபிவிருத்தி செய்வோம்!

## பிரதமர் மஹிந்த கல்முனையில் தெரிவிப்பு





நாம் சிங்களம், தமிழ், முஸ்லிம் என்று இனம், மதம், மொழி பார்ப்பதில்லை. யாழ்ப்பாணம் தொடக்கம் அம்பாந்தோட்டை வரைக்கும் கொழும்பு தொடக்கம் கல்முனை வரைக்கும் முழு நாட்டு மக்களுக்கும் சமமான அபிவிருத்தியை செய்வதே எமது நோக்கமாகும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் கட்சியின் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளர் சாந்தலிங்கம் தலைமையில் கல்முனை நற்பிட்டிமுனை விளையாட்டு மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து இங்கு உரையாற்றும்போது கூறியதாவது;

மக்களுக்கு நாம் பொய் சொல்வதில்லை. செய்ய முடியும் என்பதை மட்டுமே சொல்லுவோம். சொல்வதை மட்டுமே செய்வோம். இது உங்களுக்கு நன்றாக தெரியும். முன்னைய அரசாங்கம் காசு இல்லை, காசு இல்லை என்று நான்கு வருடத்தைக் கடத்தியது. ஆனால், மத்திய வங்கியில் பில்லியன் கணக்கான பணத்தைக் கொள்ளையடித்தார்கள். இதுவும் உங்களுக்கு நன்றாக தெரியும். முப்பது வருடமாக புரையோடிப்போயிருந்த யுத்தத்தை இல்லாமல்செய்து மக்களுக்கு சுதந்திரத்தை நாமே பெற்றுக்கொடுத்தோம். அப்போது காசில்லை என்று நாம் சொல்லவில்லை. மக்களுக்கு அபிவிருத்திகளையும் செய்தோம்.

நாம் சிங்களம், தமிழ், முஸ்லிம் என்று இனம், மதம், மொழி பார்ப்பதில்லை. யாழ்ப்பாணம் தொடக்கம் அம்பாந்தோட்டை வரைக்கும் கொழும்பு தொடக்கம் கல்முனை வரைக்கும் முழு நாட்டு மக்களுக்கும் சமமான அபிவிருத்தியை செய்வதே எமது நோக்கமாகும். தாமரை மொட்டின் வெற்றி உங்களின் வெற்றியாகும். உங்களின் வெற்றி எமது நாட்டின் வெற்றியாகும் என்று தெரிவித்தார்.

இந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கட்சியின் வேட்பாளரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான விமலவீர திசாநாயக்க மற்றும் வேட்பாளர்களாக றிஸ்லி முஸ்தபா, கீர்த்திஸ்ரீ வீரசிங்க, கல்முனை மாநகர சபையின் உறுப்பினர் எம்.றபீக் உட்பட அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

பிரதமர் மக்கள் மத்தியில் தமிழில் உரையாற்றும்போது கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழ் பேசும் மக்கள் பிரதமருக்கு அமோக வரவேற்பளித்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

# ஐ.டி.எச். வைத்தியசாலையிலிருந்து தப்பிச்சென்ற நோயாளரால் பரபரப்பு

## ஏற்றிச்சென்ற ஓட்டோ சாரதி தனிமைப்படுத்தப்பட்டார்



முல்லேரியா ஐ.டி.எச். வைத்தியசாலையிலிருந்து தப்பிச்சென்ற கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நபர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

முல்லேரியா ஐ.டி.எச். வைத்தியசாலையிலிருந்து வெள்ளிக்கிழமை காலை 41 வயதான மொஹமட் காசிம் மொஹமட் நசீம் என்பவரே இவ்வாறு தப்பிச்சென்றார். இதனையடுத்து தப்பிச்சென்ற கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நபரை தேடிக் கண்டுபிடிக்கும் நோக்கில் பல குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டன.

குறித்த நபர் தொடர்பில் தகவல் தெரிந்தால் பொலிஸாருக்கு உடன் தகவல் வழங்குமாறும் பொதுமக்களிடம் பொலிஸார் வேண்டுகோள் விடுத்திருந்தனர். இதனையடுத்து குறித்த நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலை பகுதியிலிருந்து கைது செய்யப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐ.டி.எச். வைத்தியசாலையிலிருந்து தப்பிச்சென்ற குறித்த நபர் கோட்டை, பிரதான வீதியிலிருந்து ஓட்டோ ஒன்றின் மூலமே கொழும்பு தேசிய வைத்தியசாலை பகுதிக்குச் சென்றுள்ளார். அந்தச் சந்தர்ப்பத்திலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், குறித்த நபர் பயணித்த ஓட்டோ சாரதி கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# நல்லூர் கந்தசுவாமி ஆலய மகோற்சவம் ஆரம்பம்





(யாழ் நிருபர்)

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ பெருவிழாவில் சம்பிரதாயபூர்வமாக கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை எடுத்துவரும் நிகழ்வு வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

செங்குந்தர் பரம்பரையினரால் நல்லூர் ஆலயக் கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை சம்பிரதாயபூர்வமாக ஆலயத்தில் ஒப்படைக்கப்படுவது பாரம்பரிய வழக்கமாகும்.

நல்லூரிலுள்ள செங்குந்த மரபினர் வருடா வருடம் கொடியேற்றத்துக்கான கொடிச்சீலையை வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதன்படி யாழ். சட்டநாதர் சிவன் ஆலயத்திற்கு அருகிலுள்ள வேல் மடம் முருகன் ஆலயத்தில் காலை 9 மணிக்கு நடைபெற்ற விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து அங்கிருந்து கொடிச்சீலை சிறிய ரதத்தின் மூலம் பருத்தித்துறை வீதி ஊடாக எடுத்துச் செல்லப்பட்டு காலை 9.30 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை வந்தடைந்தது.

அங்கு ஆலயத்தின் வெளிவீதி உலாசென்று சுபநேரத்தில் பூஜைகள் இடம்பெற்று கொடிச்சீலை நல்லூர் ஆலய பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ பெருவிழா தொடர்ந்து 25 நாட்கள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நல்லைக் கந்தன் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா:

# ஆலயத்திற்கு வருவோருக்கு அடையாள அட்டை கட்டாயம்

## யாழ். மாநகர சபை தெரிவிப்பு

(யாழ் நிருபர்)



சுகாதார நடைமுறைகளுக்கமைய அடியவர்கள் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திற்கு வருகை தரும்போது தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது வாகன அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவதொன்றைத் தங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கண்டிப்பாக எடுத்துவரவேண்டும். இவற்றில் ஏதாவதொன்று ஒவ்வொரு தடவையும் வீதித் தடையில் பதிவுசெய்யப்பட்ட பின்னரே அனைவரும் உட்செல்ல அனுமதிக்கப்படுவர் என யாழ். மாநகர சபை தெரிவித்துள்ளது.

நல்லைக் கந்தன் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா ஆரம்பமாகும் நிலையில், ஆலயத்திற்கு வருகைதரும் அடியவர்கள் கடைப்பிடிக்கவேண்டிய சுகாதார நடைமுறைகளை யாழ். மாநகரசபை கடந்த வியாழக்கிழமை பிற்பகல் முதல் நல்லூர் ஆலயச் சுற்றாடலில் ஒலிபெருக்கிகள் மூலம் அறிவுறுத்தல்களாக அறிவித்துவருகிறது.

அந்த அறிவித்தலிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அறிவுறுத்தல்களாவன:

வீதித் தடைகள் ஊடாக ஆலயத்திற்கு வருகை தரும் அடியவர்கள் எப்போதும் முகக்கவசம்(மாஸ்க்) அணிந்திருத்தல் கட்டாயமானதாகும். ஆலயத்துக்கு உட்செல்வதற்கு முன்னர் கைகளைச் சுத்தம் செய்தல் வேண்டும். அடியவர்கள் ஆலயத்திற்கு வருகை தரும்போது ஆசார சீலர்களாக வருகை தருவதுடன், தேவையற்ற பொருட்களை எடுத்துவருவதையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

ஆலயச் சூழலில் பாதணிகளுடன் நடமாடுவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அடியவர்கள் ஆலயத்தினுள் நீண்டநேரம் தரித்து நிற்பதைத் தவிர்த்துக்கொள்ளவும்.

கொரோனாத் தொற்று காரணமாக உயர் தனிமைப்படுத்தல் அல்லது கட்டாய தனிமைப்படுத்தலுக்குட்பட்டவர்கள் ஆலயத்திற்கு வருகைதரும் பட்சத்தில் தனிமைப்படுத்தல் சான்றிதழ்களை தம்முடன் கொண்டுவருதல் வேண்டும். முக்கியமாக வெளிநாட்டிலிருந்து வருகைதந்தவர்கள் எப்போதும் தனிப்படுத்தல் மருத்துவச் சான்றிதழ்களைத் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜூலை கலவரத்தை நினைவுபடுத்தியும் நீதிகோரியும் பிரித்தானியாவில் கவனயீர்ப்புப் போராட்டம்



(வவுனியா)

இலங்கை அரசினால் 1983 ஜூலை 23ஆம் திகதி திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட தமிழின அழிப்புக்கு எதிரான தினத்தை நினைவூட்டும் முகமாகவும் தொடர்ச்சியான தமிழின அழிப்புக்குமான கண்டனத்தை இலங்கை அரசாங்கத்துக்கு தெரிவிக்கும் வகையிலும் பிரித்தானியாவில் கவனயீர்ப்பு போராட்டமொன்று இடம்பெற்றது.

பிரித்தானியாவின் ஹைட்பார்க் கார்டன்ஸ், இலக்கம் 13 இல் அமைந்திருக்கும் இலங்கை தூதரகத்திற்கு முன்பாக குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற்றது.

தமிழ்மக்கள் படுகொலைசெய்யப்பட்டு 37 வருடங்களான பிறகும் சர்வதேசம் இதனை இனப்படுகொலையென ஏன் இன்னும் பிரகடனப்படுத்தவில்லை என்பதை இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் வலியுறுத்தினர்.

இந்த அசாதாரன சூழலிலும் தமிழ் மக்களுக்கு ஓர் நிரந்தர தீர்வு வேண்டியும், இனப்படுகொலை செய்த இலங்கை அரசாங்கத்தை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தக் கோரியும் பிரித்தானிய அரசாங்கத்தின் கொவிட் - 19 வழிகாட்டுதலின்படி ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியாவின் தமிழ் பொதுமக்களும், பல்வேறு அமைப்புகளும் சேர்ந்து ஏற்பாடுசெய்த இந்த ஆர்ப்பாட்டத்தில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் சொக்கலிங்கம் யோகலிங்கம், தமிழ் இனச் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# குடும்பஸ்தரொருவரின் சடலம் மீட்பு



(வவுனியா)

வவுனியா, கிடாச்சூரி பகுதியிலிருந்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

செட்டிகுளம் மெனிக்பாம் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் கிடாச்சூரி பகுதியிலுள்ள வீடொன்றில் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வந்திருந்தார்.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை காலை வீட்டின் பின்பகுதியிலிருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் வீட்டின் முதலாம் மாடியிலிருந்து தவறி விழுந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சம்பவத்தில் செட்டிகுளம் மெனிக்பாம் பகுதியைச் சேர்ந்த மோகன் சிவகுமார் (வயது - 35) என்ற நபரே உயிரிழந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சடலம் மீட்கப்பட்டு உடற்கூற்று பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



# சரியான ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்களை நாம் அடையாளம் கண்டுவிட்டோம்





## பொத்துவிலில் ரணில் விக்ரமசிங்க உரை

எமது நாட்டையும் மக்களையும் பாதுகாக்கின்ற ஒரு கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமே இருக்கின்றது. எங்களின் கடந்த ஆட்சிக்காலத்தில் எல்லா இன மக்களையும் இன, மத வேறுபாடுகளின்றி ஓரணியின் கீழ் ஒரே பார்வையில் பார்த்து வந்தோம்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொத்துவில் தொகுதிக்கான பிரதான தேர்தல் காரியாலய திறப்பு விழா நேற்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொத்துவில் தொகுதி அமைப்பாளரும் வேட்பாளருமான லொயிட்ஸ் யூ.கே.ஆதம்லெப்பை தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்ரமசிங்க கலந்துகொண்டு திறந்துவைத்த பின்னர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த ஆட்சியாளர்கள் மக்களை குழப்பிவிடும் செயற்பாடுகளில் இருக்கின்றார்கள். நாங்கள் எல்லா இன மக்களையும் அரவணைத்துச் செல்லும் ஒரு ஆட்சியாளர்களாகவே இருந்துவந்தோம். அதுமாத்திரமல்லாமல், எமது நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளையும் அபிவிருத்தித் திட்டங்களையும் நீண்டகால நோக்கில் முன்னெடுத்தும் வந்தோம்.

இம்முறை சரியான ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்கள் யார் என்று அடையாளம் காணக்கூடியதாக இருந்தது. கட்சியை விட்டு விலகிச் சென்றவர்களின் கடந்த கால செயற்பாடுகள் யாவும் ஐக்கிய தேசியக் கட்சியை அழிக்கின்ற செயற்பாடாகவே இருந்துவந்தன. இக்கட்சியை யாராலும் அழித்துவிட முடியாது.

சரியான ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்களை யார் என்று அடையாம் காணக்கூடியதாக அமைந்துள்ளது. அத்தகையவர்களையே வேட்பாளர்களாக களமிறக்கியுள்ளோம். நீங்கள் அவர்களை ஆதரித்து உங்களின் வாக்குகளை வழங்குங்கள் என்றார்.

இந்நிகழ்வில், முன்னாள் அமைச்சர்களான தயா கமகே, அனோமா கமகே உள்ளிட்ட அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களும் கலந்துகொண்டனர்.




# கடந்த தேர்தலில் கடமை தவறிய 44 பேருக்கு தேர்தல் பணித் தடை





2 0 2 0 பொதுத் தேர்தலில் ஒரு மீற்றர் இடைவெளி பேணுதல், முகக்கவசம் அணிதல் மற்றும் தொற்றுநீக்கிகளால் கைகளை சுத்தம்செய்தல் போன்ற மூன்று பிரதான விடயங்கள் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப் படவேண்டுமென்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தல் விடுத்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தல் ஏற்பாடு தொடர்பான விசேட கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் அரசாங்க அதிபருமான திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த விசேட கூட்டத்தில் தேர்தல் கடமையில் சிரேஷ்ட தலைமைதாங்கும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது கொரோனா தடுப்பு சுகாதார வழிமுறைகளைப் பேணி நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்த இம்முறை விசேட ஏற்பாட்டின்கீழ் நடைபெறவுள்ள தேர்தலில் சிரேஷ்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தர்கள் பின்பற்றவேண்டிய வழிமுறைகள் தொடர்பாக விரிவாக விளக்கப்பட்டது.

இங்கு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் ஆர். சசீலன் கருத்து வெளியிடுகையில்,

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்கெடுப்பு நிலைய கடமையில் கவனயீனமாக இருந்த 44 தலைமைதாங்கும் தேர்தல் கடமை உத்தியோகத்தர்கள் ஐந்து வருடங்களுக்கு தேர்தல் கடமையில் இணைத்துக் கொள்ளாதவாறு தேர்தல் கடமை தடைசெய்யப்பட்டிருப்பதாகவும் இத்தேர்தலிலும் இந்தத் தவறுக்கு இடமளிக்கப்படக்கூடாதெனவும் அறிவுறுத்தல் வழங்கினார்.

# மட்டு. மாவட்டத்தில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பணிப்பகிஷ்கரிப்பில்

## சுகாதார நடவடிக்கைகள் ஸ்தம்பிதம்




**(மட்டக்களப்பு)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் பூரண பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவருகின்றனர்.

இப்பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக மாவட்டத்தில் 14 பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுகளிலும் சுகாதார நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

மாவட்டத்தில் கடமை புரியும் 62 பொதுச் சுகாதார பரிசோதகர்களும் இப்பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். இதனால் டெங்கு மற்றும் கொவிட் – 19 தொடர்பான நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லை.

தமது தாய்ச் சங்கம் நாடளாவிய ரீதியில் மேற்கொண்டுவரும் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு வழங்கியே மட்டக்களப்பு மாவட்டத்திலும் பணிப்பகிஷ்கரிப்பு இடம்பெறுவதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்க மட்டக்களப்பு கிளைத் தலைவர் எஸ்.சிவகாந்தன் தெரிவித்தார்.

பகிஷ்கரிப்பு காரணமாக மாவட்டத்திலுள்ள அனைத்து பொதுச் சுகாதார பரிசோதகர்களின் அலுவலகங்களும் மூடப்பட்டிருந்தன.

# குற்றம் இழைத்திருந்தால் தகவல் அறியும் சட்டத்தின்மூலம் அவற்றை நிரூபித்துக் காட்டட்டும் பார்க்கலாம்

## வீண் பழிசுமத்தலை நம்பாதீர்கள் – த.தே.கூட்டமைப்பு வேட்பாளர் உதயகுமார்



தேர்தலில் தாங்கள் எப்படியாவது வெல்லவேண்டும் என்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அதன் கீழ் போட்டியிடுகின்ற எனக்கும் எதிராக பல போலியான குற்றச்சாட்டுகளை எதிரணியினர் தேர்தல் பரப்புரையின்போது கூறி வருகின்றனர். அவ்வாறு கூறுவதை விடுத்து தங்களிடம் ஆதாரங்கள் இருந்தால் அவற்றை பொதுமக்களின் பார்வைக்காக வெளியிடலாம் அல்லது எனக்கெதிராக சட்டநடவடிக்கை எடுக்கலாம். அதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு எனத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் மா.உதயகுமார்.

களுதாவளையில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரையின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுவாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக செயற்படுகின்ற சிங்கள பேரினவாத அரசின் அடிவருடிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகவே கருத்துகளை வெளியிடுவது வழமை, இப்போது தேர்தல் காலம் என்றபடியால் இன்னுமொரு படி மேல் சென்று கூட்டமைப்பில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கு எதிராகவும் போலியான பல குற்றச்சாட்டுகளை கூறுவது வழமையான விடயம்தான்.

இருந்தும் இம்முறை நான் தேர்தலில் போட்டியிடுவதால் அரசாங்க அதிபராக கடமையாற்றிய போது தமிழ் மக்களுக்கு எதிராக செயற்பட்டு பல அபிவிருத்தித் திட்டங்களை நிறுத்தி பணத்தை திருப்பியனுப்பியதாக போலியான பல குற்றச்சாட்டுகளை தேர்தல் பரப்புரைகளின்போது சிலர் கூறி வருகின்றார்கள்.

களுதாவளையைச் சேர்ந்த தன்னை இப்பவே ஒரு அமைச்சராக எண்ணியுள்ள மொட்டு கட்சியில் போட்டியிடுகின்ற ஒருவர், சில தினங்களுக்கு முன்னர் இங்கு வந்திருந்தபோது, வீட்டுத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட 500 மில்லியன் ரூபாவை நான் திருப்பியனுப்பியதாக போலியான ஒரு குற்றச்சாட்டை தெரிவித்துள்ளார்.

அவர் உண்மையிலேயே தமிழ் மக்களுக்கு சேவை செய்பவராயின் குறித்த குற்றச்சாட்டுக்கான ஆதாரங்களையும் அவர் வெளியிட வேண்டும். அவரிடம் ஆவணங்கள் இல்லையாயின், தகவல் அறியும் சட்டத்தின் மூலமாக குறித்த திணைக்களத்திலிருந்து அல்லது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். இதனைவிடுத்து தேர்தலில் எப்படியாவது வெல்ல வேண்டும் என்பதற்காக போலியான குற்றச்சாட்டுகளைக் கூறி தமிழ் மக்களை ஏமாற்றப் பார்க்கிறார்.

வெளிநாட்டுக்கு ஆட்கடத்தல் செய்து பணம் சம்பாதித்தவர் அரசியல் நாகரீகம் தெரியாமல் தற்போது அரசியல் ஊடாக சம்பாதிக்கப் பார்க்கின்றார். இப்படிப்பட்டவர்களிடத்தில் தமிழ் மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

எனவே, மக்களே பேரினவாத கட்சிகளின் போலியான பிரசாரங்களை நம்பி ஏமாறாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து கூட்டமைப்பை அமோக வெற்றிபெறச் செய்வது உங்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும் – என்றார்.

# கிழக்கு பல்கலைக்கழக அழகியல் கற்கைகளுக்கான நேர்முகத் தேர்வுகள் ஆரம்பம்

**(மட்டக்களப்பு)**



கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்திற்கு புதிய மாணவர்களை இணைப்பதற்கான நேர்முகத் தேர்வுகள் கடந்த வெள்ளியன்று ஆரம்பமாகி திங்கள் வரை நடைபெறுகின்றன.

தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெறும் இந்நேர்முகத் தேர்வில் நாடகமும் அரங்கியலும், இசை, நடனம், கற்புல தொழில்நுட்பக் கலை ஆகிய நான்கு கற்கைநெறிகளுக்குமாக புதிய மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் நேர்முகத் தேர்வுக்காக சுமார் 1,600 மாணவர்கள் விண்ணப்பித்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேர்முகத் தேர்வுக்குத் தோற்றும் சகல மாணவர்களும் 'கொவிட் – 19' தொற்று தொடர்பான சுகாதார நடைமுறைகளின்கீழ் உள்வாங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று 'அரசியல் முகவராக' மாறி 'வாக்குப்பெட்டி' அரசியல்வாதிகளை உருவாக்கியுள்ளது

## பொதுஜன பெரமுன மட்டு. மாவட்ட வேட்பாளர் சே.ஜெயானந்தமூர்த்தி

**( பாண்டிருப்பு )**

தமிழ்த் தேசியத்திற்கு நான் எதிரானவன் அல்ல. ஆனால், போலி தமிழ்த் தேசியம் பேசிக்கொண்டு தமிழ்த் தேசிய அரசியல் போர்வையில் சுயலாப அரசியலை மேற்கொள்ளும் ஆசாமிகளை முற்றாக நிராகரிக்கிறேன் –என கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மட்டு. மாவட்ட வேட்பாளருமான சே.ஜெயானந்தமூர்த்தி தெரிவித்தார்.

மட்டு. தேற்றாத்தீவு, மாங்காடு ஆகிய கிராமங்களில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தனிநபர், கட்சி நலன்களை முதன்மைப்படுத்தி அதற்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படுகிறார்களே தவிர, தனிநபர் மற்றும் கட்சி நலன்களுக்கு அப்பால் மக்கள் நலன் சார்ந்த அர்ப்பணிப்புடனான அரசியல் செயற்பாடுகளை கூட்டமைப்பினர் முன்னெடுக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று ஓர் அரசியல் 'முகவர்' ஆக மாறி 'வாக்குப்பெட்டி' அரசியல்வாதிகளை உருவாக்கிக்கொண்டிருக்கிறது.



இனப்பிரச்சினைக்கு அதி குறைந்தபட்ச தீர்வாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த ஒரு மொழிவாரி அதிகாரப்பகிர்வு அலகுதான் அமையவேண்டும்.

அதற்கான அடித்தளத்தை இந்திய – இலங்கை சமாதான ஒப்பந்தம் 1987இல் ஏற்படுத்தித் தந்தது. 13ஆவது அரசியல் சட்டதிருத்தத்தின் மூலம் தற்காலிகமாகவேனும் இணைக்கப்பெற்ற வடக்கு, கிழக்கு மாகாண அரசும் நிறுவப்பட்டது. ஆனால், அச்சந்தர்ப்பத்தை விஞ்ஞானபூர்வமாகவும் அரசியல் உபாயங்களுடனும் பயன்படுத்த தமிழர் தரப்பு தவறிவிட்டது. அதன் விளைவு 1990இல் ஜனாதிபதி ஆர்.பிரேமதாச காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாண அரசு கலைக்கப்படவும் பின்னர் 2007இல் ராஜபக்ஷ காலத்தில் நீதிமன்றத் தீர்ப்பொன்றின் மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தனித்தனியாகப் பிரிக்கப்படவும் ஏதுவாயிற்று.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தனித்தனி மாகாணங்களாகப் பிரிக்கப்பட்ட பின்னர் கிழக்கு மாகாணத் தமிழர்களின் சமூக, பொருளாதார அரசியல் விடயங்களில் மேலும் பல மறைத்தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக, 2012 ஆம் ஆண்டின் மாகாண சபைத் தேர்தலுக்குப் பின்னர் கிழக்குத் தமிழர்களின் சமூக, பொருளாதார அரசியல் இருப்பும் பாதுகாப்பும் பேண்தகைமையும் நாளாந்தம் கேள்விக்குள்ளாகி வருகிறது. இதனைத் தடுத்துநிறுத்தி மாற்றுவழியைத் தேடும் ஆத்மார்த்தமான அக்கறையோ அரசியல் வல்லமையோ கூட்டமைப்பிடம் இல்லை –என்றார்.

# 16 இலட்ச சமுர்த்தி பயனாளிகளுக்கு நிறுத்தப்பட்டுள்ள ஜூன் மாத கொடுப்பனவை வழங்க சஜித் உறுதி




(நோட்டன் பிரிட்ஜ்)

16 இலட்சம் சமுர்த்தி பயனாளிகளின் குடும்பத்திற்கும் இப்போதைய அரசாங்கம் அநீதி இழைத்துவிட்டது. நிறுத்தப்பட்டுள்ள ஜூன் மாத சமுர்த்தி கொடுப்பனவை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுப்பேன் - என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ நாவலபிட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

"கடந்த நான்காம் ஐந்தாம் மாதங்களில் சமுர்த்தி பயனாளிகளுக்கு இரண்டு தடவை ஐந்தாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டது. இவ்வாறு வழங்கிய நிவாரண கொடுப்பனவில் ஒரு தொகையை பயனாளிகளிடமிருந்து மீண்டும் மீள் அறவிட தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இது எந்தவகையில் நியாயம்? இது 16 இலட்சம் சமுர்த்தி பயனாளிகளின் குடும்பங்களுக்கு இந்த அரசாங்கம் செய்யும் அநீதியாகும். அது மட்டுமல்ல, ஜூன் மாதத்திற்கான சமுர்த்தி கொடுப்பனவை பயனாளிகளுக்கு வழங்காது இப்போது இருக்கின்ற அரசாங்கம் நிறுத்திவைத்துள்ளது.

இது பாரதூரமான செயலாகும். எனவே, அமையப்போகின்ற ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் 16 இலட்சம் சமுர்த்தி பயனாளிகளின் ஜூன் மாத சமுர்த்தி கொடுப்பனவையும் உடனடியாக அவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பதுடன், தற்போதைய அரசாங்கம் சமுர்த்தி பயனாளிகளிடமிருந்து மீள அறவிடப்படும் சமுர்த்தி நிவாரண கொடுப்பனவை மீளவும் பயனாளிகளுக்கு திருப்பிச் செலுத்த நடவடிக்கை எடுப்பேன்" - என்று கூறினார்.

# சுயேச்சைக்குழு வேட்பாளர்கள் செந்தில் தொண்டமானுக்கு ஆதரவு



எதிர்வரும் பொதுத் தேர்தலில் பதுளை மாவட்டத்தில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த வேட்பாளர்கள், செந்தில் தொண்டமானைச் சந்தித்து தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர். பண்டாரவளையிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்த வேட்பாளர்கள், செந்தில் தொண்டமானின் வெற்றி உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவரது கரங்களைப் பலப்படுத்துவதற்காக உழைப்பதாகவும் தெரிவித்துள்ளனர். அவரது வெற்றி மூலமாக எமது சமூகத்துக்கு ஊவா மாகாணத்தில் பாதுகாப்பும் அபிவிருத்தியும் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

இது குறித்து சுயேச்சைக்குழு வேட்பாளர்கள் கருத்து வெளியிடுகையில்,

"பதுளை மாவட்டத்தில் சிறுபான்மை இனத்தவர்களின் வாக்குகளை சிதறடிப்பதற்காகவும், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தோரின் தரகர்களாகவுமே சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுகின்றன. நான்கு இலட்சம் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தோருக்கு 2 சுயேச்சைக் குழுக்களும் ஒரு இலட்சம் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தோருக்கு 10 சுயேச்சைக் குழுக்களும் பதுளையில் போட்டியிடுகின்றன. சுமார் 14 ஆயிரம் வாக்குகளைப் பெற்றுக்கொண்டால் நாடாளுமன்றம் செல்லலாம் என எமக்குச் சொல்லப்பட்டது.

அதில் நாம் ஆயிரத்து 500 வாக்குகளைப் பெற்றால் போதும் என்றார்கள். அதனால் நாங்கள் சூட்சுமமாக ஏமாற்றப்பட்டோம். தேர்தல்கள் ஆணைக்குழுவால் பதுளை மாவட்டத்தில் 9 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒதுக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் சொல்வது போன்று 14 ஆயிரம் அல்லது 15 ஆயிரம் வாக்குகளால் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் இந்த மாவட்டத்தில் 30 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாவார்கள். கடந்த காலங்களில் நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணி 25 ஆயிரம் வாக்குகளைப் பெற்றுக்கொண்டது. ஆனால், நாடாளுமன்றத்துக்கு ஓர் உறுப்பினரை அவர்களால் தெரிவுசெய்ய முடியாமல் போனது.

அவ்வாறான சூழ்நிலையில் சிறுபான்மை இனத்தவர்கள் அதிக வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்கு தெரிவாகக்கூடாது என்பதற்காக பெரும்பான்மை இனத்தவர்கள் எங்களை கருவிகளாகப் பயன்படுத்தினர்.

எனவே, செந்தில் தொண்டமான் சக்தி வாய்ந்த அரசாங்கத்தில் முக்கிய பதவியை வகிப்பார். அனைவருக்கும் சேவையாற்றுவார். அவரிடம், இன, மத, குல வேறுபாடுகள் கிடையாது. பதுளை மாவட்டத்தில் அவர் சாதனை படைப்பார். அதற்கு நாமும் ஒத்துழைப்பு வழங்குவோம்." – என்றனர்.

# போலி வைத்தியர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்க தீர்மானம்

-சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(மஸ்கெலியா)

நுவரெலியா மாவட்டத்திலுள்ள போலியான வைத்தியர்கள் மற்றும் போலி வைத்தியசாலைகளை இனங்கண்டு சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக நுவரெலியா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

போலி வைத்தியர்கள், போலி வைத்தியசாலைகள் தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்துவதுடன், அவர்கள் பற்றிய முழுமையான தகவலை பெற்று அவர்களை இல்லாதொழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவ்வாறு போலி வைத்தியசாலைகள் நடத்துவோர் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் நுவரெலியா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் தலகல தெரிவித்தார்.

பெருந்தோட்டப் பகுதியை அண்டிய நகர் மற்றும் கிராமப்புறங்களில் இவ்வாறான போலி வைத்தியர்கள் உள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. அவர்களை இனங்கண்டு அவர்கள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ள வுள்ளதுடன், இம்மாவட்டத்தில் வறுமைக்கோட்டிலுள்ள மக்கள் நலன் பேணவுள்ளதாகவும் கூறினார்.




# சாராயத்தை கொடுத்து சாதித்துக்கொள்ளும் அரசியல்வாதிகள்

## இச்சமூக சீரழிவை வன்மையாகக் கண்டிக்கிறார் தினேஷ்குமார்



மலையக சமூகம் மாற்றத்தை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கும் நிலையில் அதன் பிரதான பங்குதாரர்களாக இருக்கும் எமது இளைஞர்களிடமிருந்து வாக்குகளைப் பெறுவதற்காக சிலர் அன்பளிப்பாக மதுபானம் வழங்கி பிரசாரம் முன்னெடுப்பது துரோக அரசியலின் உச்சகட்டமாகும் என்பதுடன், இவ்வாறான சமூக சீரழிவுச் சம்பவங்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம் –என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் வேலாயுதம் தினேஷ்குமார் தெரிவித்தார். இளைஞர் பிரதிநிதிகள் சிலருடன் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

நாட்டிலிருந்தும் குறிப்பாக, மலையகத்திலிருந்தும் போதைப்பொருட்களையும், மதுபானத்தையும் முற்றாக துடைத்தெறியவேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். எமது முன்னேற்றத்துக்கு ஏதோவொரு விதத்தில் இவை தடையாக இருக்கின்றன என்பது தெளிவு. குறிப்பாக, உழைக்கும் பணத்தில் சிலர் பெரும்பகுதியை மதுபானத்துக்கு செலவிடும் அவலநிலையும் காணப்படுகின்றது என புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

எனவே, மதுவற்ற நாட்டை – மலையகத்தை உருவாக்குவதற்காக இளைஞர்கள் பலர் இன்று முன்வந்துள்ளனர். எமது பெண்களும் இதற்கு முழு பங்களிப்பையும் வழங்கிவருகின்றனர். முன்னர் சாராய போத்தலையும், சாப்பாட்டுப் பார்சலையும் வழங்கினால் வாக்குகளைப் பெற்றுவிடலாம் என்றதொரு நிலை இருந்தது என நினைத்துக்கொண்டு இன்றும் அவ்வாறு செய்வதற்கு முயற்சிக்கின்றனர். ஆனால், அந்த காலம் மலையேறிவிட்டது. எமது இளைஞர்கள் மாற்றத்தை நோக்கி பயணிக்க ஆரம்பித்துவிட்டனர். மக்கள் மத்தியிலும் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது.

எனினும், சில நயவஞ்சக அரசியல்வாதிகள், எப்படியாவது வாக்குகளைப் பெற்றுவிட வேண்டும் என்பதற்காக அன்பளிப்பாக சாராயம் வழங்கும் சதிகார வலையை விரித்துள்ளனர். ஆசைவார்த்தைகளைக்கூறி இளைஞர்களை எப்படியாவது அந்த வலைக்குள் வீழ்த்தி சாராயம் வழங்கியேனும் சாதித்துக்கொள்வதற்கு முயற்சிக்கின்றனர். இப்படியான அரசியலை நாம் வெறுக்கின்றோம். அதனை கைவிடுமாறு சம்பந்தப்பட்ட தரப்புகளிடமும் கேட்டுக்கொள்கின்றோம். ஏனெனில், எல்லாவற்றைவிடவும் மக்கள் நலம்தான் எமக்கு முக்கியம்.

சமூகத்தை சீரழித்துவிட்டு வாக்குகளைப் பெற முயற்சிப்பது அரசியல் அல்ல, இன்று நுவரெலியா மாவட்டத்தில் சந்திக்கு சந்தி சாராயக்கடைகள் உள்ளன. எமது சமூகம் முன்னேறக்கூடாது என்பதற்காக போடப்பட்ட தடைகளில் இந்த சாராயக்கடைகளும் ஒன்று. இதனை இளைஞர்களின் துணையுடன் மாற்றுவோம் –என்றார்.

# போகவந்தலாவையில் சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது

(மஸ்கெலியா)

போகவந்தலாவ கெசல்கமு ஓயா வனப் பகுதியான மோரா தோட்டப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக் கற்கள் அகழ்ந்த இருவரை போகவந்தலாவ பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

போகவந்தலாவ பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலைத் தொடர்ந்து போகவந்தலாவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் உத்தரவின்பேரில் அந்த வனப் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது அங்கு சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கற்கள் அகழ்வில் ஈடுபட்டிருந்த 2 பேரை கைது செய்ததுடன், அகழ்வுக்கு பயன்படுத்திய உபகரணங்களையும் கைப்பற்றினர். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் ஹட்டன் மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# கருத்து முரண்பாடு காரணமாகவே கட்சியிலிருந்து விலகினோம்

## தொழிலாளர் தேசிய சங்கத்தில் இணைந்த வேட்பாளர் தெரிவிப்பு



(நோட்டன் பிரிட்ஜ்)

தலைவருடனான கருத்து முரண்பாடுகளினாலேயே தமிழ் முற்போக்கு கூட்டணியுடன் இணைந்ததாக இலங்கை தொழிலாளர்கட்சியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் பொன்னுசாமி ஞானசேகரன் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நுவரெலியா மாவட்ட வேட்பாளர் முத்தையா பிரபாகரனின் ஆதரவாளர்கள் 300 பேர்வரை தமிழ் முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து வேட்பாளர் பழனி திகாம்பரம் முன்னிலையில் நேற்று இணைந்துகொண்டனர்.

இதன்போது இலங்கை தொழிலாளர் கட்சியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர்களான பொன்னுசாமி ஞானசேகரன், எம்.சஞ்ஜித் எடோசன் ஆகியோர் இணைந்துகொண்டு தமிழ் முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களின் வெற்றிக்கு பலம் சேர்ப்பதாக தெரிவித்தனர்

இதன்போது ஊடகத்திற்கு கருத்துத் தெரிவித்த பொன்னுசாமி ஞானசேகரன், இலங்கை தொழிலாளர் கட்சியின் தலைவரான கிஷானுக்கும் எங்களுக்கும் மக்கள் நலன் சார்ந்த விடயத்தில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டதன் காரணமாக அக்கட்சியின் வேட்பாளராக களமிறங்கிய நாங்கள் அதிலிருந்து விலகி தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரத்துடன் இணைந்துகொண்டோம்,

நாங்கள் தாய் கட்சியான தொழிலாளர் தேசிய சங்கத்தில் இணைவதை அறிந்த இலங்கை தொழிலாளர் கட்சியின் தலைவர் எனக்கு மிரட்டல் விடுத்தார். ஆனாலும் அதையும் மீறி தலைவர் திகாம்பரம் மீதான நம்பிக்கையில் மக்களுக்கு சேவைசெய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் இணைந்துகொண்டதாக தெரிவித்தார்.

# தொழிலுக்காக வெளிமாவட்டங்களுக்குச் செல்லும் மலையக இளைஞர், யுவதிகளின் எதிர்காலம் கேள்விக்குறி

– அனுஷா



(கினிகத்தேனை)

பெருந்தோட்டத்துறையில் மூடிக்கிடக்கும் தொழிற்சாலைகளில் சுயதொழில் திட்டங்களை ஆரம்பிப்பதன்மூலம் இங்குள்ள இளைஞர், யுவதிகள் அதிகளவில் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்ளும் நிலையை உருவாக்கலாம் - என்று மலையக மக்கள் முன்னணியின் பிரதிச் செயலாளர் நாயகமும் சட்டத்தரணியும் நாடாளுமன்ற வேட்பாளருமான அனுஷா சந்திரசேகரன் சாமிமலை பகுதியில் இளைஞர்களையும் யுவதிகளையும் சந்தித்து தெரிவித்தார்.


தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

மலையகத்தில் கல்விகற்ற இளைஞர், யுவதிகளுக்கேற்ற வேலைவாய்ப்புகள் கிடைக்காததால் எமது இளைஞர்கள் வெளி மாவட்டங்களுக்கு இடம்பெயர்ந்து செல்கிறார்கள். இது அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையிலும் மட்டுமல்ல, எமது சமூக கட்டமைப்பிலும் பாரிய சிக்கல்களையும் சவால்களையும் தோற்றுவிக்கின்றன.

தேயிலை பயிர்ச்செய்கையில் ஆர்வமில்லாத இளைஞர், யுவதிகளும் கூட அன்றாட வேலைக்காக வளிமாவட்டங்களுக்கும் நகர்ப்புறங்களுக்கும் இடம் பெயர்ந்து செல்கிறார்கள் இவ்வாறானவர்களின் எதிர்காலம் எவ்விதமான உத்தரவாதமுமின்றி கேள்விக்குறியாகிறது. இவர்களை சுயதொழிலில் ஈடுபடுத்துவதற்கேற்ற அனைத்து சாத்தியக்கூறுகளையும் ஆராய்ந்து பயன்படுத்த வேண்டும்.

இதன் ஒரு கட்டமாக மூடிக்கிடக்கும் தொழிற்சாலைகளில் பல்வேறு சுயதொழில் திட்டங்களை உருவாக்கலாம். இதில் முதலீடு செய்யுமளவுக்கு தொழிலதிபர்களுக்கு நாம் நம்பிக்கையான செயற்றிட்டங்களை முன்வைக்க வேண்டும். புலம்பெயர்ந்து வாழும் மலையகத்தவர்களின் உதவிகளையும் மலையகம் சார்ந்த தொழிலதிபர்கள் மட்டுமன்றி, எம் சமூகவளர்ச்சியில் அக்கறைகொண்ட ஏனைய முதலீட்டாளர்களின் பங்களிப்பையும் இதில் பெற்றுக் கொண்டால் இவ்வாறான திட்டங்களை அமுல்படுத்துவதில் எந்தப் பிரச்சினையுமே ஏற்படாது எனவும் தெரிவித்தார்.

# மத்திய மலைநாட்டில் கடும் மழை: வாகனச் சாரதிகளுக்கு பொலிஸார் எச்சரிக்கை



(மஸ்கெலியா)

மத்திய மலைநாட்டின் பல பகுதிகளிலும் கடந்த சில நாட்களாக கடும் மழை பெய்து வருவதுடன், பல இடங்களில் பனிமூட்டமும் நிலவிவருகின்றது. இதனால் வாகனப் போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மத்திய மலைநாட்டில் மழையுடனான காலநிலை காணப்படுவதால், மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியிலும், மஸ்கெலியா - நோட்டன், நோட்டன் - தியகல, தியகல - கினிகத்தேன, கினிகத்தேன - ஹட்டன், அட்டன் - தலவாக்கலை ஆகிய பிரதான வீதிகளில் அதிகளவு பனிமூட்டம் நிலவிவருவதால் வாகனச் சாரதிகளை மிகவும் அவதானமாக வாகனங்களை செலுத்துமாறு ஹட்டன் பிராந்திய போக்குவரத்துப் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# அபிவிருத்தி மற்றும் உரிமைசார் அரசியலை முன்னெடுத்தது தமிழ் முற்போக்குக் கூட்டணியே

- உதயா பெருமிதம்



பொதுத் தேர்தலில் 8 அல்லது 9 ஆசனங்களை கைப்பற்றி ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாக நாம் மாறுவோம் - என ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் உதயகுமார் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

மலையகத்தில் கடந்த நான்கரை வருடங்களில் தலைவர் திகாம்பரம் தலைமையில் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை நாம் முன்னெடுத்துள்ளோம். அபிவிருத்தி மற்றும் உரிமைசார் அரசியலை தமிழ் முற்போக்குக் கூட்டணியே முன்னெடுத்தது.

எமது மக்களின் பல அரசியல் உரிமைகளை நாம் வென்று கொடுத்துள்ளோம். எதிர்காலத்திலும் உரிமைசார் அரசியலுக்கான எமது பயணம் முழுவீச்சுடன் இடம்பெறும். அதே போன்று இளைஞர், யுவதிகளுக்கான வேலை வாய்ப்புகளை நாம் உருவாக்குவோம்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் வெற்றியிலேயே மலையக மக்களின் எதிர்காலம் தங்கியுள்ளது. எனவே, தமிழ் பிரதிநிதித்துவத்தை இல்லாதுசெய்ய முன்னெடுக்கப்படும் சூழ்ச்சிகளுக்கு அகப்படாது சிந்தித்து அனைவரும் வாக்களிக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

# சீ.பி.ரத்னாயக்கவின் தொடர்பாளர் அதிகாரியின் சாரதியை தாக்கிய ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் கைது!

(மஸ்கெலியா)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளரும் முன்னாள் அமைச்சருமான சீ.பி.ரத்னாயக்கவின் தொடர்பாளர் அதிகாரியின் சாரதியை தாக்கியதாக ஐக்கிய மக்கள் சக்தி நுவரெலியா மாவட்ட வேட்பாளர் ஜயல திசாநாயக்கவை கடந்த வியாழக்கிழமை ஹங்குராங்கெத்த பொலிஸார் கைதுசெய்தனர்.

தொடர்பாளரின் சாரதியான பிரதீப் அத்தநாயக்க என்பவர் ஹங்குராங்கெத்த தேசிய நீர்வடிகால் திணைக்கள காரியாலயத்திற்கு தனது சுயவேலைக்கு சென்று திரும்புகையில் சீ.பி.ரத்னாயக்கவுக்கு தேர்தல் பிரசாரத்திற்கு உதவி வழங்கவேண்டாமென கூறி ஜயல திசாநாயக்க என்பவர் தன்னை தாக்கினார் என ஹங்குராங்கெத்த பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவுசெய்திருந்தார்.

தாக்குதலுக்குள்ளான சாரதி பிரதீப் அத்தநாயக்க ஹங்குராங்கெத்த அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கண்டி ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார். சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட ஜயல திசாநாயக்க கடந்த வெள்ளிக்கிழமை வலப்பனை நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார் என ஹங்குராங்கெத்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.



# தமிழ்ப் பிரதிநிதித்துவத்துக்கு ஐ.தே.க. உரிய இடத்தை வழங்கும்

## சண். குகவரதன் கருத்து

பொதுத் தேர்தல் குறித்து ஐக்கிய தேசிய கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் சண். குகவரதன் "தமிழன்" வார இதழுக்கு வழங்கிய செவ்வி.

**கட்சியின் தேர்தல் நடவடிக்கைகள் எவ்வாறு உள்ளன?**

**பதில்:-** கடந்த 2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின்னரும் அதன் வடுக்கள் இன்னும் மாறாது ஒரு பாரிய பொருளாதார அபிவிருத்தியை நோக்கிய தெரிவு இருக்கின்றவேளையில், கடந்த வருடம் ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது. இதன்பின்னர் இலங்கையின் பொருளாதாரம் அதலபாதாளத்துக்குள் தள்ளப்பட்டது.

அதன்பின்னரான கொவிட் – 19இனையும் தாண்டிவந்த இந்தத் தேர்தல் தினம் என்பது மக்கள் மீது திணிக்கப்பட்ட பாரிய வாழ்வாதார சுமையாகும். கொவிட் – 19இற்குள்ளும் தேர்தல் நடத்துவதென்பது மக்களால் சுமக்கமுடியாத சுமையாகவே உள்ளது.

என்னைப் பொறுத்தமட்டில் தற்போது நிலவுகின்ற கொரோனாவின் இரண்டாவது அலையையும் கட்டுப்படுத்தி சுமுகமான ஒரு நிலையை உருவாக்கி மக்களுக்கான நிவாரணங்களை வழங்கிக்கொண்டு தேர்தலை நடத்தியிருந்தால் நாங்கள் வரவேற்றிருப்போம்.

அப்படி நடக்காது, கொரோனா அச்சத்துக்கு மத்தியில் மக்கள் இருக்கின்ற வேளையில், கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என அழுத்தம் கொடுக்கமுடியாத ஒரு சூழலில் நாம் இம்முறை தேர்தலில் களம் கண்டிருக்கிறோம்.

'கொவிட் – 19'இன் இரண்டாம் அலையை கட்டுப்படுத்துவதற்கான முழு நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டும்.

ஐக்கிய தேசிய கட்சி, நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும். அதற்காக வெளிநாடுகளின் நிதியுதவிகளைப் பெற்று அதனூடாக நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான திட்டம் எமது தலைவரிடம் உள்ளது.

**தற்போதைய தேர்தல் நடவடிக்கைகள் யாவும் அரசு அறிவுறுத்தியுள்ள சுகாதார வழிமுறைகளுக்கேற்பவே இடம்பெறுகின்றன என நினைக்கிறீர்களா?**

**பதில்:-** பிரசார நடவடிக்கைகளைப் பொறுத்த மட்டில் பொலித்தீன் பாவனையற்ற மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில்தான் இம்முறை சண். குகவரதனின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் கொழும்பில் இருக்கும் என நான் கூறியிருந்தேன்.

அதேபோல் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுப்பதற்காக மக்களை சந்திப்பதற்காக செல்கின்ற வேளையில் சுகாதார அறிவுரைகளுக்கமைவாக ஐந்து பேருக்கு உட்பட்ட அதாவது, ஒரு வேட்பாளருடன் மூன்று நான்கு பேர் கொண்ட குழுவாகவே நாங்கள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

துண்டுப்பிரசுரங்கள், பொலித்தீன், மீள்சுழற்சி செய்யமுடியாத பொருட்களை எமது பிரசார நடவடிக்கையின்போது தவிர்த்துள்ளோம். காரணம், இதனால்கூட கொவிட் – 19 பரவலாம் என உலக சுகாதார அமைப்பு வலியுறுத்தியுள்ளது. அதனால் நாம் அவற்றையும் தவிர்த்துவிட்டோம். மக்களுக்கு சேவை செய்பவர்கள் அவர்களிடம் நேரடியாக சென்று வாக்கு கேட்கலாம். அதற்கான உரிமையும் அவர்களுக்கு உண்டு.

**எதிர்த்தரப்பினரின் பிரசார நடவடிக்கைகளுக்கு உங்களால் ஈடுகொடுக்க முடியுமானதாய் இருக்கின்றதா?**

**பதில்:-** தற்போதைய சூழலில் முன்னாள் அமைச்சர்களாக இருக்கட்டும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கட்டும் எவரும் களத்தில் இறங்கி வாக்கு கேட்பதை நான் பார்க்கவில்லை.

இந்த இடத்தில் நான் ஒன்றை கூறவேண்டும். நான் மாகாண சபையில் இருந்த காலப்பகுதியில் மக்கள் பணிகள் காரணமாக எங்களின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக நாங்கள் களத்திற்கு செல்கின்றபோது மக்களிடம் அமோக வரவேற்பிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. ஐக்கிய தேசிய கட்சிக்கான வரவேற்பு எப்போதுமே மக்களிடம் உள்ளது என்பதை மறுக்கமுடியாது.

கடந்த கால தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியவில்லை. கொவிட் – 19 பரவல் காரணமாக நாம் இம்முறை தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசிக்கவில்லை. எனினும், நாங்கள் குறிப்பிட்ட பகுதிகளை தெரிவுசெய்து அதாவது, நாங்கள் மக்களுக்காக சேவைசெய்த பகுதிகளை தெரிவுசெய்து எங்களின் நோக்கத்தை மக்களிடம் எடுத்துச்செல்கின்றோம்.

**தேசிய கட்சிகளுக்குள் ஏற்பட்டுள்ள பிளவுகளால் வாக்குச் சிதறல்கள் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கின்றதாக தெரிவிக்கப்படுகின்றதே?**

**பதில்:-** தேசிய கட்சிகளுக்குள்ளான பிளவுகளென்பது நேற்று, இன்றில்லை. சுதந்திரக் கட்சியில் பாரிய பிளவு அடைந்து. அக்கட்சி இரண்டாக பிரிந்து பொதுஜன பெரமுனவாக செயற்பட்டது. இன்று வடக்கு, கிழக்கிலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இரண்டு கட்சிகள் பிரிந்து சென்றுள்ளன.

ஐ.தே.க. ஒரு பழம்பெரும் கட்சி. டீ.எஸ்.சேனநாயக்க, டட்லி சேனாநாயக்க, கொப்பேகடுவ, டீ.பி. விஜேதுங்க, ஜே.ஆர்.ஜயவர்தன தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட அதன் பயணத்தில் கட்சியின் வளர்ச்சியோடு ஒப்பிடுகையில் பாரிய சவாலை எதிர்நோக்கியிருந்தனர்.

இன்று இலங்கையில் தேர்தல் களத்தில் இருக்கின்ற பல தேசிய கட்சிகள் பிளவுபட்டே உள்ளன. இன்று தேசிய கட்சிகள் பல உடைந்து வெவ்வேறு சின்னங்களிலேயே வாக்குக் கேட்கின்றன. ஆனால், ஐ.தே.க. மட்டுமே ஒரே சின்னத்தில் அதுவும் யானை சின்னத்தில் ஒரு கட்டமைப்பாக துணிந்துநின்று வாக்குக் கேட்கின்ற பழைமைவாய்ந்த ஒரு கட்சியாக திகழ்கின்றது.

ஆரம்ப காலத்தில் காமினி திஸாநாயக்க, லலித் அத்துலத் முதலி போன்றவர்கள் கூட கட்சியிலிருந்து வெளியேறி வேறு கட்சிகளை ஆரம்பித்தார்கள். அதன்பின்னர் ஐக்கிய தேசிய கட்சிக்குள் இணைந்துகொண்டார்கள். இவ்வாறான வெளியேற்றங்கள் உள்வாங்கல்கள் ஏற்பட்டிருக் கின்றனவே தவிர, ஐ.தே.கவுக்குள் என்றுமே பிளவடையவில்லை.

ஐ.தே.கவுக்குள் இருந்த இனவாதிகள் அதாவது, ஐ.தே.கவை காட்டிக்கொடுத்தவர்கள் கட்சிக்குள் இருந்துகொண்டு மதங்களையும் இனங்களையும் தூசித்தவர்கள் விமர்சித்தவர்கள் இந்தக் கட்சிக்குள் இல்லை.

**தமிழ்த் தரப்பு ஐ.தே. கவுக்கு உரிய இடத்தை கொடுக்கும் என்று எதிர்பார்க்கின்றீர்களா?**

**பதில்:-** இவ்வளவுகாலமும் ஐ.தே.க. என்ன செய்ததென்றால், தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை காப்பாற்றவேண்டும் என்பதற்காக ஆங்காங்கே இருக்கின்ற தமிழ்க் கட்சிகளை அரவணைத்துச் சென்றது.

ஐ.தே.கவினூடாகவே தமிழ்ப் பிரதிநிதித்துவம் என்பதை உணரவேண்டும். தமிழ்ப் பிரதிநிதித்துவம் வளரவேண்டும் என்பதற்காக கட்சி செயற்படுகிறது. இதனை நாம் உணரவேண்டும். ஆகவே, ஐ.தே. கவுக்குள் பிளவு என்று எண்ணக்கூடாது. கட்சிக்குள் வெளியேற்றம் உள்நுழைவு ஏற்பட்டதே தவிர, கட்சிக்குள் பிளவு ஏற்படவில்லை. அவ்வாறே தமிழ்ப் பிரதிநிதிகளுக்கும் எப்போதும்போல் உரிய இடத்தை ஐ.தே.க வழங்கும் என்று நம்புகின்றேன்.

**ஆனால், ஐ.தே.க. குறித்து பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளனவே?**

**பதில்:-** அதற்குக் காரணம் ஐ.தே.க. நல்லாட்சிக் காலத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து சென்றமையாகும். அவருடன் பயணிக்கும்போது ஆசனத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் பொய்யான வாக்குறுதிகளையும் பரிந்தரைகளையும் செய்துவிட்டு ஆசனத்துக்கு வந்த பின்னர் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை.

அவர்கள் அவ்வாறு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றியிருந்தால் ஐ.தே.க. மீதான அந்த விமர்சனங்கள் எழுந்திருக்காது. ஆனால், இனிவரும் காலத்தில் அவ்வாறான நிலை ஏற்படாது. மக்கள் இதனை நம்பவேண்டும். மக்கள் தொடர்ந்தும் எமக்கான ஆதரவை வழங்கவேண்டும். வழங்குவார்கள்.

**உங்களுடைய அரசியல் பிரவேசம் இன்னுமொரு கட்சியிலிருந்து ஆரம்பித்து தற்போது வேறொரு அதாவது, ஐ.தே. கவுடன் இணைந்து செயற்படுவதாக அமைந்திருக்கின்றதே?**

**பதில்:-** சண். குகவரதன் என்ற ஒரு தனிமனிதனை இன்று நேற்று அல்ல 1997ஆம் ஆண்டிலிருந்து மக்களுக்குத் தெரியும். 2004 கொழும்பு லயன்ஸ் கழகத்தின் ஊடாக எனது சமூக பணியை நான் ஆரம்பித்தேன். எனது சமூக பணிக்காக 2007ஆம் ஆண்டு 41 விருதுகளை பெற்றிருந்தேன்.

எனது சொந்த நிதியிலிருந்தே சமூக – மக்கள் பணியில் ஈடுபட்டிருந்தேன்.

மாநகரசபையில் 4 வருடங்களும் மாகாணசபையில் 5 வருடங்களும் இருந்திருக்கின்றேன். ஆரம்பத்தில் எனக்கு அரசியலில் வருவதற்கான எந்த நோக்கமும் இருக்கவில்லை. எனது சமூக சேவையை பார்த்து பல அரசியல் கட்சிகள் எனக்கு அழைப்பு விடுத்தன. அவ்வாறிருந்தும் தமிழர் உணர்வுள்ள ஓர் அரசியல் கட்சியில் இணைந்து பணியாற்றவேண்டும் என்ற கோட்பாட்டில் இருந்தேன்.

2010ஆம் ஆண்டு கொழும்பு மாநாகர சபைக்கு தெரிவுசெய்யப்பட்டேன். 2014ஆம் ஆண்டு மேல் மாகாண சபைக்கு தெரிவுசெய்யப்பட்டேன்.

தமிழ் மக்களின் தொடர்ச்சியான ஆதரவால் தேசிய பட்டியல் ஊடாக தமிழ்ப் பிரதிநிதியாக தெரிவாகி தலைநகரிலேயே தமிழ் மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்தமையால் தமிழர் பிரதிநிதித்துவத்தை ஆதரிக்கின்ற கட்சியாக இருக்கின்ற ஐ.தே.க வுடன் இணைந்து எனது அரசியல் பயணத்தை தொடர்கின்றேன்.

**வாக்குறுதிகளை நம்பியே மக்கள் வாக்களிக்கின்றனர். எனினும், அந்த வாக்குறுதிகள் தேர்தல் முடிந்ததும் நிறைவேற்றப் படுவதில்லை என்கின்ற விமர்சனம் மக்கள் மத்தியில் இருக்கின்றதே?**

**பதில்:-** சண். குகவரதனை பொறுத்தமட்டில் பொய்யான வாக்குறுதிகளை கொடுப்பவரல்லர். வாக்குறுதிகளை கொடுக்காமலேயே மக்கள் சேவையை முன்னெடுக்கக்கூடிய ஒருவர். நடைபெறாத ஒன்றிற்காக வாக்குறுதியளிப்பவன் நானல்ல. மக்கள் தேவைகளை நன்குணர்ந்து செயற்படக்கூடிய மக்கள் சேவகன் நான். எனது மக்கள் சேவைகள் எப்போதும் தொடரும்.

நேர்காணல்:-கே.சுபானி



தமிழன்
THAMILAN WEEKLY
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42, தொலைபேசி : 0115 88 61 87
விளம்பரம் : 077 693 0739
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com

# மாறவேண்டும் வழமை நிலை!

பொதுத் தேர்தலுக்கான நாட்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன. தேர்தல் பிரசாரம் களைகட்டி தீவிரமாக நடந்துகொண்டிருக்கின்றது. அரசியல் கட்சிகள் தேர்தல் மேடைகளில் சளைக்காமல் வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்றன.
மறுபுறம் ஆளாளுக்கு சேறு பூசும் கலாசாரம் அரங்கேறிக்கொண்டிருக்கிறது.

பெரும்பாலான வேட்பாளர்கள் பணத்தை வாரியிறைத்துக் கொண்டிருக்கிறார்கள். தேர்தலில் போட்டியிடும் சுயேட்சை குழுக்கள் பல தரமானவையாக இருந்தாலும் அதில் திறமையானவர்கள் இம்முறை போட்டியிட்டாலும் அவர்களின் குரல் வெளியில் வருவதில்லை. முதலாளித்துவ வலையமைப்புக்குள் கட்டிப்போடப்பட்டிருக்கும் ஊடகங்கள் அவர்களுக்கு இடமளிக்க மறுக்கும் துயரமும் இருக்கிறது.

இவற்றுக்கப்பால் தமிழர் பகுதிகளில் தேர்தல் செயற்பாடுகளை பார்க்கும்போது அங்கேயும் இதே நிலைமைதான். வழமைக்கு மாறாக இம்முறை, தமிழர் செறிந்து வாழும் பகுதிகளில் நிலைமை சற்று மோசமாக இருக்கிறது. பல அரசியல் கட்சிகளாக தமிழர் பிரதிநிதிகள் பிரிந்து நிற்கும் அதேசமயம், இன்னும் பலர் பெரும்பான்மை கட்சிகளுடன் சேர்ந்து தேர்தலில் நிற்கின்றனர். தமிழர் வாக்குகள் சிதறும்போது தமிழர் பிரதிநிதித்துவம் சிதறும் வாய்ப்பும் இருக்கிறது என்பதை நினைவிற்கொள்ள வேண்டியிருக்கிறது.

எனவேதான், தமிழர்கள் இம்முறை வழமைக்கு மாறாக நிதானமாகவும் யோசித்தும் வாக்களிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தேசிய அரசியல் கட்சிகள் இந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கான தத்தமது விஞ்ஞாபனங்களில் தமிழர் பிரச்சினையை கவனத்திற் கொள்ளவில்லை. ஆளுங்கட்சியை பொறுத்தவரை, கடந்த தேர்தலில் சிங்கள வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியை தெரிவுசெய்த இறுமாப்பு அவர்களிடம். ஐக்கியத் தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஆளுங்கட்சிக்கு சற்றும் சளைத்தவைகள் அல்ல. தமிழர் பிரச்சினைக்கு அல்லது முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு ஆக்கபூர்வமான தீர்வை புதிய நாடாளுமன்றத்தின் ஊடாக வழங்குவதற்கான எந்தவித உத்தரவாதங்களும் இவர்களிடம் இல்லை.

ஆக, தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை இந்தத் தேர்தல் அவர்களுக்கு ஒரு சத்திய சோதனை தான். பிரச்சினைகளுக்கான தீர்வு யோசனைகளை இவர்கள் சரியாக சொல்லவில்லை என்று கருதி எந்தக் கட்சியையும் புறந்தள்ளிவிடமுடியாது. ஜனநாயகத்தின்பால் நம்பிக்கைகொண்டு தேர்தலில் வாக்களிக்கவேண்டும் . அது எப்படியாக இருக்க வேண்டுமென்பதையே அவர்கள் இப்போது சிந்திக்க வேண்டும்.

தேசியக் கட்சிகளில் இருந்தாலும் சரி, தனியே தமிழ்க் கட்சிகளில் இருந்தாலும் சரி, சுயேட்சை குழுவில் இருந்தாலென்ன - என்றெல்லாம் ஆராய்ந்து தகுதியான மக்கள் குரலை நாடாளுமன்ற மேடையில் ஓங்கி ஒலிக்கச் செய்யும் பிரதிநிதிகளை மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். குறிப்பாக, இந்த தேர்தலில் போட்டியிடும் பெண்கள் தொடர்பில் வாக்காளர்கள் அதீத கவனம் செலுத்தவேண்டும். தமிழ் பேசும் சமூகங்களின் அரசியல் பெண் பிரதிநிதித்துவம் குறிப்பாக, நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் என்பது மிகக் குறைவாகவே உள்ளது. அந்த நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

எனவே, கொரோனா வைரஸ் அச்ச நிலைமையில் நடைபெறும் இந்தத் தேர்தலில் சளைக்காது நமது வாக்குரிமையை பயன்படுத்தத் துணியவேண்டிய மக்கள் அதனை சரியான முறையில் பயன்படுத்த வேண்டியது அவசியமாகும். வழமையாக ஒவ்வொரு தேர்தலிலும் பிரதிநிதிகளை தெரிந்தெடுக்க வழிசெய்துவிட்டு பின்னர் அவர்கள் தகுதியற்றவர்கள் என்று புறம் சொல்லி இருப்பதைவிட ஆரம்பத்திலேயே சரியானவர்களை அடையாளம் கண்டு வாக்களிக்க வேண்டியது மக்களின் தலையாய கடமை.

அவர் இதை செய்தார், இவர் அதைச் செய்தார் என்ற காழ்ப்புணர்வு கதைகளை கூறுவோரை புறந்தள்ளி தாம் என்ன செய்யப் போகிறார்? அதற்கான திட்டங்கள் என்ன? அவை நடைமுறைச் சாத்தியமான திட்டங்களா? என்பவற்றை அவதானித்து அவர்களுக்குரிய ஆதரவை வழங்க வேண்டியதே முக்கியமானது.

அரசியல் மேடைகளுக்காக உணர்ச்சிபொங்க பேசுவதும், நடைமுறைக்கு ஒவ்வாதவற்றை உளறுவதும் வழமைதான். அந்த வழமை நிலை மாற்றப்படவேண்டுமென்பதே எமது அவா.

**“தமிழன்” பத்திரிகை தொடர்பான உங்கள் கருத்துக்களை news@liberty.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**

# தமிழ் மக்கள் சமஷ்டியை கோரவில்லை
# இம்முறை ஆளுங்கட்சிக்கு அமோக வெற்றி



**நேர்காணல் : நா.தினுஷா**
**படப்பிடிப்பு : ஏஷான் தஸநாயக்க**

***தமிழ் மக்கள் சமஷ்டியை கோரவில்லை. சமஷ்டி ஆட்சிக்குச் செல்ல எந்த அவசியமும் இல்லை என்று தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சரத் அமுனுகம, 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த சகல கட்சிகளும் ஒத்துழைக்கவேண்டும் என்றும் தெரிவித்தார். ‘தமிழன்’ பத்திரிகைக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.***

**கேள்வி : நீங்கள் சீரேஷ்ட அரசியல்வாதி, அதேபோன்று உங்களுக்கு நாடாளுமன்ற நடவடிக்கைகளில் நீண்டகால அனுபவம் இருக்கிறது. ஏன் இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவில்லை?**

**பதில் :** தற்போது எனக்கு 80 வயதாகிறது. அரசியல்வாதியொருவர் 60 – 65 வயதடையும்போது நாடாளுமன்ற செயற்பாடுகளிலிருந்து ஓய்வுபெறவேண்டியது அவசியமென்று நான் கருதுகிறென். ஓய்வுபெற்றதன் பின்னர் சமூகசேவை, அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும். இளைஞர், யுவதிகளுக்கு வாய்ப்பளிக்க வேண்டியதும் கட்டாயமாகும். அதேபோன்று, ஓய்வுபெற்றதன் பின்னர் கட்சியின் பின்னாலிருந்து அவர்களின் அரசியல் செயற்பாடுகளுக்கு ஒத்தழைப்பு வழங்கவேண்டுமெனக் கருதுகிறேன்.

**கேள்வி : கொரோனா நோய்த்தொற்றை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் திருப்திகரமானதாக அமைந்துள்ளதா? அது தொடர்பாக விளக்கமளிக்க முடியுமா?**

பதில்: கொரோனா நோய்த்தொற்றை கட்டுப்படுத்தும் விடயத்தில் எமது அரசாங்கம் மிகச்சிறப்பாக செயற்பட்டுள்ளது. ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது எமது நாட்டின் கொரோனா கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் திருப்தியடையக்கூடிய நிலையில் உள்ளன. அதேபோன்று, வெளிநாடுகளிலிருந்து வருகை தந்தவர்களினூடாகவே இந்த நோய்த்தொற்று இங்கு பரவியுள்ளது. வெளிநாடுகளில் தொழில்புரிபவர்கள், சர்வதேச பேச்சுவார்த்தைகளுக்காக சென்று நாடு திரும்பியவர்கள், வர்த்தக நடவடிக்கைக்காக வெளிநாடுகளுக்குச் சென்று வந்தவர்களினூடாகவே கொரோனா நோய்த்தொற்றின் தாக்கம் இலங்கையிலும் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தது.

‘கொரோனா’ நோய்த்தொற்று எமது நாட்டில் உருவாகவில்லை. ஆனால், வெளிநாடுகளில் கிராமம், நகரம் என சகல பிரதேசங்களுக்கும் விரைவாக பரவ ஆரம்பித்ததன் காரணமாகவே நோய்த்தாக்கத்தின் வீரியத்தன்மை அதிகரித்தது. வெளிநாடுகளில் கொரோனா நோய்த்தொற்று நிலைமை அதிகரித்திருந்தாலும் எமது நாட்டிலுள்ள சிறந்த சகாதார சேவையின் காரணமாக அதனை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக்கூடியதாக இருந்தது.

வெளிப்படையாக கூறுவதானால், நாட்டில் இலவச சுகாதார சேவையை உருவாக்கியது நீயா, நானா என்று கட்சிகளுக்கிடையில் போட்டிப்போடுவது அவசியமற்றதொன்றாகும். இதுவரைகாலமும் நாட்டை ஆட்சிசெய்த ஒவ்வொரு அரசாங்கமும் கல்விக்காகவும் சுகாதாரத்துக்காகவும் பெருமளவு நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

ஆகவே, எமது நாட்டில் சிறந்த சுகாதார சேவை உள்ளது. அதனூடாகவே இந்தக் கொரோனா நோய்த்தொற்றை எம்மால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக்கூடியதாக இருக்கிறது. குறிப்பாக, மத்திய மாகாணத்தை எடுத்துக்கொண்டால், அங்கும் நோய்த்தொற்று கட்டுப்பாட்டுக்குத் தேவையான சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அதனையும் மீறி வெளிநாட்டுக்குச் சென்று வந்தவரினூடாகவே அந்தப் பிரதேசத்தில் மீண்டும் நோய்த்தொற்று தாக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உருவாகின. இருப்பினும், அதனை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளோம்.

திருவிழா போன்ற கொண்டாட்ட நிகழ்வுகளின்போது மக்கள் மிக அவதானமாக செயற்படவேண்டியது அவசியமாகும்.

**கேள்வி: இருப்பினும், கொரோனா நோய்த்தொற்றை கட்டுப்படுத்தும் விடயத்தில் அரசாங்கம் முறையாக செயற்படவில்லை என்று எதிர்த்தரப்பினர் குற்றஞ்சாட்டுகின்றனரே?**

**பதில்:** எதிர்த்தரப்பினர் குற்றஞ்சாட்டுக்களை முன்வைப்பது தவறான விடயமாகும். கொரோனா நோய்த்தொற்று மாத்திரமல்ல, எந்த நோய் அச்சுறுத்தல் வந்தாலும், அரசாங்கம் நாட்டின் செயற்பாடுகளை இரண்டு கோணங்களிலும் அவதானிக்கவேண்டும். அந்த நோய்த்தொற்று பரவலடைவதை தடுப்பதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேபோன்று சாதாரண மக்கள் தமது நாளாந்த செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குத் தேவையான பொருளாதாரச் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் கவனம் செலுத்தவேண்டியது அவசியம்.

தினந்தோறும் வீட்டுக்குள் இருப்பதற்கு மக்கள் விரும்புவதில்லை. விசேடமாக ஏழ்மையில் உள்ளவர்களுக்கு தொழில்வாய்ப்புகள் இல்லாமல்போகும். பெருந்தோட்டங்களில் வாழும் தமிழ் மக்களை எடுத்துக்கொண்டால் அவர்களின் அன்றாட தேவைகளுக்காக நாட்சம்பளத்துக்கு தொழில் செய்பவர்கள் இருக்கிறார்கள்.

தொடர்ச்சியாக சகல செயற்பாடுகளையும் நிறுத்திவிட்டால் இவ்வாறாக சுகாதாரப் பின்னணியில் இருப்பவர்களுக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். ஆகவே, எந்த அரசாங்கம் ஆட்சியிலிருந்தாலும் சகல விடயங்கள் குறித்தும் சிந்தித்தே நாட்டில் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தும். நோய்த்தொற்றின் பரவல் அதிகரிக்கும் என்ற அச்சுறுத்தல் இருக்கும்போது இந்த அரசாங்கம் நாடுபுராகவும் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தியிருந்தது. ஆயினும், மக்களின் தேவைகளுக்கேற்ப ஊரடங்குச் சட்டத்தை நீக்குவதற்கு படிப்படியாக நடவடிக்கை எடுத்தது.

**கேள்வி : இந்தக் கொரோனா நோய்த்தொற்று அச்சுறுத்தல் நிலைமையோடு, நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதற்கு உங்களின் ஆலோசனைகள் யாவை?**

**பதில் :** இந்த கொவிட் - 19 நோய்த்தொற்றினால் எமது நாட்டுக்கு பொருளாதார ரீதியில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. ஆயினும், இந்த நோய்த்தொற்றுக்கு காரணமான வைரஸை நாட்டிலிருந்து முழுமையாக ஒழிக்கவேண்டிய கட்டத்தில் நாம் இருக்கிறோம். இந்த நோய்த்தொற்றை கட்டுப்பாட்டுக்கு கொண்டுவந்ததன் பின்னர் பொருளாதார நடவடிக்கைகளை பரந்தளவில் முன்னெடுக்க முடியும். மீண்டும் வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக்கொண்டு மீண்டும் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்கு முன்னர் கொவிட் - 19 வைரஸை ஒழிக்கவேண்டும்.

**கேள்வி : கண்டி மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் எவ்வாறு இருக்கின்றன?**

**பதில் :** ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது கண்டி மாவட்டம் சகல செயற்பாடுகளிலும் முற்றிலும் மாறுபட்ட தன்மைகளுடைய பிரதேசம். இங்கு சகல இன மக்களும் பரம்பரை பரம்பரையாக ஒற்றுமையாக வாழ்ந்துவருகின்றனர். ஆகவே, இந்தப் பிரதேசத்தில் வாழும் சிங்கள், தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடையே காணப்படும் சகோதரத்துவத்தை பாதுகாத்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

இப்பிரதேச மக்கள் ஒரு நூற்றாண்டுகாலமாக புரிந்துணர்வுடன் வாழ்ந்து வருகிறார்கள். பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு பொருளாதாரப் பிரச்சினை இருந்தாலும் அவர்களின் பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை. சௌமியமூர்த்தி தொண்டமானின் காலத்திலிருந்த ஒவ்வொரு அரசாங்கமும் அந்த மக்களின் முன்னேற்றத்துக்காகவும் அவர்களுக்கான நிவாரணங்களை வழங்கவும் பெரும் பணியாற்றியுள்ளது. பெருந்தோட்ட மக்கள் நாட்டின் பொருளாதாரத்துக்கு பெரும் பங்காற்றுபவர்கள். ஆகையால் அவர்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

எனது தேர்தல் செயற்பாடுகளின்போது தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தியுள்ளேன். அதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எமக்குப் பெரும் ஒத்துழைப்பை வழங்கியிருந்தது. கட்டாயமாக பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு சகலரும் முயற்சிக்க வேண்டும். இம்முறை தேர்தலில் நான் களமிறங்காவிட்டாலும், கண்டி மாவட்டத்தில் திலும் அமுனுகம போட்டியிடுகிறார்.

கண்டி மாவட்டத்திலுள்ள ஏழைமக்களுக்கு நிவாரணங்களை வழங்கி அவர்களை பொருளாதார ரீதியில் பலப்படுத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே திலும் அமுனுகம இருக்கிறார். அவர் தமிழ், முஸ்லிம் மக்களிடையே சகோதரத்துவத்துடனும் அவர்களின் பிரச்சினைகளுக்காகவும் செயற்பட்டு வருகிறார்.

**கேள்வி : பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பொருளாதார பிரச்சினை தொடர்பில் பேசியிருந்தீர்கள். தற்போது பெருந்தோட்ட மக்களின் 1,000 ரூபா சம்பளக் கொடுப்பனவு பேசுபொருளாக மாறியுள்ளது. இது தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன?**

**பதில் :** பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபா சம்பளக் கொடுப்பனவை வழங்கவேண்டும் என்று நிதி அமைச்சர் என்ற அடிப்படையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தார். இதுவே, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிலைப்பாடாக இருக்கிறது. எந்தவொரு உற்பத்தியாளரையும் பொருளாதார ரீதியில் நெருக்கடி நிலைக்குத் தள்ளாமல் அவர்களுக்குத் தேவையான நிவாரணங்களை பெற்றுக்கொடுப்பதே எங்களின் பிரதான கொள்கை.

அதேபோன்று எதிர்காலத்துக்குத் தேவையான முதலீடுகளையும் வலுப்படுத்திக்கொள்வதும் அவசியமாகும். ஆகவே, பெருந்தோட்ட மக்களின் இயல்பு வாழ்க்கைக்குத் தேவையான சம்பள உயர்வை பெற்றுக்கொடுப்பதே எங்களின் நோக்கமாகும். சம்பளக் கொடுப்பனவு மாத்திரமல்லாமல், அவர்களுக்கான போக்குவரத்து வசதி உள்ளிட்ட சகல அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுப்பதும் அவசியமாகும்.

நான் அமைச்சராக கடமையாற்றிய காலத்தில் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி லயன் அறைகளுக்குப் பதிலாக தனிவீட்டுத் திட்டங்களை வழங்க நடவடிக்கை எடுத்திருந்தோம். மேலும், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான வீடுகளை அமைத்துக்கொள்வதற்குத் தேவையான காணிகளையும் வழங்கியிருந்தோம். அதற்கு மேலதிகமாக தொழில்வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். அதேபோன்று, அவர்களின் வாக்குரிமைகளை பாதுகாப்பதற்கும் பாரிய நடவடிக்கை எடுத்துள்ளோம். பெருந்தோட்ட மக்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்க நாங்கள் தயாராகவே இருக்கிறோம்.

**கேள்வி : மக்களை பொருளாதார ரீதியில் பலப்படுத்துவதற்கு ஒவ்வொரு குடும்பத்துக்கும் நிவாரணம் வழங்கப்படுமென்று ஒவ்வொரு கட்சிகளும் வாக்குறுதிகளை வழங்கி வருகின்றன. ஒருசிலர் 20 ஆயிரம் ரூபா நிவாரணம் வழங்குவோம் என்கிறார்கள். இன்னும் சிலர் 10 ஆயிரம் ரூபா நிவாரணத்தை பெற்றுத்தருவோம் என்கிறார்கள். இவ்வாறான யோசனைகள் எந்தளவுக்கு சாத்தியப்படும் எனக் கருதுகிறீர்கள்?**

**பதில்:** பொருளாதாரம் முழுமையாக தடைப்படும் சந்தர்ப்பங்களிலேயே இவ்வாறான நிவாரணங்கள் வழங்கப்படும். ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தும் சந்தர்ப்பம், தொழில்வாய்ப்புகள் இல்லாமல் போகும் சந்தர்ப்பங்களில் இதேபோன்று நிவாரணங்கள் வழங்கப்படும்.

தொடர்ச்சி 9ஆம் பக்கம்...

8ஆம் பக்கத்தொடர்ச்சி...

ஒரு நெருக்கடி நிலையிலிருந்து நாடு மீண்டும் சாதாரண நிலைக்குத் திரும்பும் வரையில் இவ்வாறான நிவாரணங்களை உலகிலுள்ள சகல அரசுகளும் பெற்றுக்கொடுக்கின்றன. இதற்கு மேலதிகமாக சமுர்த்தி போன்ற நிவாரணங்களும் வழங்கப்படுகின்றன.

ஆனால், இந்த நிவாரணத் தொகை சகலருக்கும் தொடர்ச்சியாக வழங்கப்படுவதில்லை. பொருளாதார நடவடிக்கைகளை இயல்பு நிலைக்கு திருப்பவேண்டியதே எமது தற்போதைய பிரதான கடமையாகும். அதேபோன்று, நிரந்தர தொழில் இல்லாமல் நாளாந்த சம்பளத்துக்காக தொழில்புரிபவர்களுக்கு நிச்சயமாக அரசாங்கத்தரப்பிலிருந்து நிவாரணத்தொகை வழங்கவேண்டியது அவசியமாகும். அதற்காகவே இவ்வாறான நிவாரணத்தொகை வழங்கப்படுகிறது.

**கேள்வி : கொரோனா நோய்த்தொற்றுத் தாக்கம், ஐக்கிய தேசிய கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவு ஆகியவற்றின் மத்தியில் இம்முறை நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் எவ்வாறு இருக்குமென்று கருதுகிறீர்கள் ?**

**பதில் :** ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இம்முறை நாடாளுமன்றத் தேர்தலிலும் நிச்சயமாக பாரிய வெற்றியடையும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

**கேள்வி: எதிர்த்தரப்பில் பிளவுகளின் அடிப்படையில் தேர்தல் முடிவுகள் எவ்வாறு இருக்குமென்று கருதுகிறீர்கள்? ரணில் – சஜித் தரப்பில் எந்த அணி பிரதான இடத்தைப் பிடிக்கும் ?**

**பதில் :** அதனை உறுதியாக என்னால் கூறமுடியாது. தற்போதைய நிலைமையை பார்க்கும்போது சஜித் அணியே முன்னிலையில் இருக்கிறது.

**கேள்வி : அதேபோன்று மத்திய மாகாணத்தின் தேர்தல் முடிவுகள் எவ்வாறு இருக்குமென்று நீங்கள் கருதுகிறீர்கள்?**

**பதில் :** மத்திய மாகாணத்தில் பெரும்பாலும் பொதுஜன பெரமுனவுக்கே வெற்றி கிடைக்குமென்று நான் நம்புகிறேன். மத்திய மாகாணத்திலிருந்து மொத்தமாக 12 பிரதிநிதிகள் நாடாளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்படுவார்கள். இம்முறை 8 பிரதிநிதிகள் ஆளுங்கட்சிக்கு தெரிவாவார்கள் என்பது எனது எதிர்பார்ப்பாகும்.

**கேள்வி : சமஷ்டி முறையில் அரசியல் தீர்வை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன?**

**பதில்:** சமஷ்டி முறையில் அரசியல் தீர்வுக்கு செல்வது எங்களின் எதிர்பார்ப்பில்லை. அவ்வாறான அரசியல் தீர்வொன்றை வழங்கவும் முடியாது. அதற்கு இடமளிக்கவும் முடியாது. தற்போது 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் நடைமுறையிலுள்ளது. இந்திய – இலங்கை சமாதான உடன்படிக்கையினூடாவே இந்த 13ஆவது அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது. பிரதான கட்சிகள் இரண்டும் சமஷ்டி தொடர்பாக கலந்துரையாடுவதற்கு பதிலாக 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திலுள்ள விடயங்களை முழுமையாக நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும்.

13ஆவது அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களே இந்தியாவிலுள்ள சகல மாநிலங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. அதற்கப்பால் செயற்படவும் முடியாது. இந்தியாவும் அதற்கு இடமளிக்காது.

**கேள்வி : ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமஷ்டியை கோருகிறதே?**

**பதில் :** தேர்தலில் வாக்குகளை பெற்றுக்கொள்வதற்காகவே அவர்கள் இவ்வாறான கோரிக்கைகளை முன்வைக்கிறார்கள். இம்முறை மாத்திரமல்ல, ஒவ்வொரு தேர்தல் காலகட்டத்திலும் அவர்கள் இதனையே கூறிவருகிறார்கள். நாடாளுமன்றத்துக்கு தெரிவானதும் அவற்றை நடைமுறைப்படுத்த முயற்சிப்பதில்லை.

**கேள்வி : மக்களின் பிரச்சினைகளுக்கு நீங்கள் வழங்கும் தீர்வு என்ன?**

**பதில் :** ஜனநாயக கொள்கையைப் பின்பற்றும் நாடு என்றவகையில் ஜனநாயக சுதந்திரத்தைப் பாதுகாத்தல், மக்களுக்கான நிவாரணங்களை வழங்குதல் போன்ற விடயங்களுக்கு பிரதான இடமளிக்கவேண்டும். ஏழை மக்களுக்கே அந்த நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும். சிறந்த கல்வி, சுகாதார வசதி போன்ற அடிப்படை வசதிகளே ஏழை மக்களுக்கு அவசியமாக இருக்கிறது. மேலும் சாதாரண வாழ்வாதாரத்துக்குள் மக்கள் வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். இதுவே எங்களின் பிரதான நோக்கமாக இருக்கிறது. அதனடிப்படையில் சகல மக்களுக்கும் சமமான நிவாரணங்கள் வழங்கப்படும்.

**கேள்வி : வடக்கு, கிழக்கு பிரதேசங்களிலுள்ள அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன?**

**பதில்:** சகல கட்சிகளும் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவு வழங்கியுள்ளன. ஆகவே, அந்த அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது அவசியமாகும். சகல அரசியல் பிரதிநிதிகளதும் ஒத்துழைப்புடனேயே இந்த திருத்தம் கொண்டுவரப்பட்டது. இதற்கு மாறாக சமஷ்டி தொடர்பில் பேசி எந்தப் பலனும் கிடைக்கப்போவதில்லை. மக்களும் சமஷ்டியை கோரவில்லை.

**கேள்வி : கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்தாலும் அதற்கு பாரிய எதிர்ப்பு வெளியாகியிருந்ததே?**

**பதில் :** அது தொடர்பில் அரசாங்கம் கலந்துரையாடலை முன்னெடுத்து வருகிறது. அரசாங்கத்தின் கொள்கை, எமது அரசியல் தன்மைகளுக்கமைய வெளிநாட்டு உறவுகள் எவ்வாறு இருக்கிறது, எதிர்காலத்தில் வர்த்தக நடவடிக்கைகள் என்பவை தொடர்பில் அதிக கவனம் செலுத்தவேண்டும். துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்படும் சகல பொருட்களும் இலங்கையின் வியாபார நடவடிக்கைகளுக்காக மாத்திரம் கொண்டுவரப்படுவதில்லை.

அவை இங்கிருந்து ஒவ்வொரு நாடுகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. ஆகவே, எதிர்காலத்தில் எமது நாட்டை வர்த்தக மையமாக மாற்றியமைக்க வேண்டுமாயின், முதலீடுகள் தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும். எதிர்காலத்தில் அரசாங்கம் இது தொடர்பில் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கும்.

**கேள்வி : இந்தச் சந்தர்ப்பத்தில் மக்களுக்கு என்ன கூற நினைக்கிறீர்கள்?**

**பதில் :** கொரோனா நோய்த்தொற்றுக்கு மத்தியிலும் தேர்தல் நடவடிக்கைகள் சுகாதாரப் பாதுகாப்புடன் இடம்பெற்றே வருகின்றன. 5ஆம் திகதி இடம்பெறுவுள்ள தேர்தலில் மக்கள் தமது பிரதிநிதிகளை தெரிவுசெய்ய தயாராக வேண்டும்.

# கடந்த வார அரசியல்



நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் சில நாட்களே இருக்கும் நிலையில் தேர்தல் கள நிலைவரங்கள் சூடுபிடித்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. தெற்கில் மொட்டு கட்சிக்கும், தொலைபேசி மற்றும் யானை கட்சிக்கும் இடையில் கடும் போட்டி நிலவுகின்ற அதேவேளை, வடக்கில் வீட்டுக்கும், மீனுக்கும் இடையிலான போட்டி தீவிரமடைந்து வருகின்றது. இப்போட்டிகளுக்கு மத்தியில் கடந்த வாரம் நடைபெற்ற அரசியல் நிகழ்வுகள் சில இங்கு தரப்படுகின்றன.

கொரோனா நிலைமை மோசமடைந்து இருந்தாலும் அதற்குரிய சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகளை எந்த அரசியல் கட்சிகளும் பின்பற்றவில்லையென்பது துயரமானது. சமூக இடைவெளி கடைப்பிடிக்கப்படாமல் தேர்தல் பிரசாரங்கள் நடப்பது, தேர்தல் விதிமுறைகளை மீறுவது குறித்து தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் என்னதான் கூறினாலும் அதனை எவரும் மதிக்காத சூழ்நிலையே இருக்கிறது.

கடந்தவாரம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கிழக்கு, மலையகம், தென் மாகாணங்களுக்கு விஜயம் செய்திருந்தார். அங்குள்ள மக்களின் குறைநிறைகளை கேட்டறிந்தார். சில இடங்களில் மக்களுடன் நின்றபடி உரையாடும் கோட்டா, அதன்போது மக்கள் தெரிவிக்கும் பிரச்சினைக்ளுக்கு உடனடி தீர்வுகளை வழங்கினார். ஜனாதிபதி செல்லும் பல இடங்களில் கொரோனா நிவாரண நிதியத்திற்கு சிலர் தமது தனிப்பட்ட சேமிப்புகளின் ஒரு பகுதியை உதவிகளாக வழங்கி வருவதை காணக்கூடியதாக இருக்கிறது. கடந்த வாரம் ஜனாதிபதி மலையகத்திற்கு சென்றபோதும் அவ்வாறே அம்மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்தார்.

நுவரெலியா மாவட்ட பாடசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகள் மற்றும் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாக ஆய்வு செய்து தீர்வை பெற்றுக்கொடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு நுவரெலியா மற்றும் அருகிலுள்ள மாவட்டங்களில் இருந்து ஆசிரியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணித்தார்.

தலவாக்கலை சுமன இரண்டாம் நிலை பாடசாலையில் 5ஆம் தரத்தில் கல்விகற்கும் ஜே. விதுஷா என்ற மாணவி கொவிட் நிதியத்திற்காக, தான் சேர்த்து வைத்திருந்த காசு உண்டியல் ஒன்றை ஜனாதிபதியிடம் தலவாக்கலையில் வைத்து வழங்கினார்.

அதேவேளை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் கிழக்கு மாகாணத்திற்கு கடந்த வாரம் சென்றிருந்தார்.

## ரணிலின் பேர்கரும் சிலிண்டரும்

கடந்த வாரம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மட்டக்களப்பில் பிரதான பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தியிருந்தார். அந்தக் கூட்டத்தில் அவர் உரையாற்றும் போது, வித்தியாசமான கதை ஒன்றைத் தெரிவித்திருந்தார். அதாவது 'சிங்கள தீவிரவாதிகள் உள்ளனர். தமிழ் தீவிரவாதிகள் உள்ளனர். ஆனால் பேர்கர் தீவிரவாதிகள் பற்றி நான் கேள்விப்பட்டதில்லை. அப்படியான தீவிரவாதிகள் எங்குமே இல்லை' என்று தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றியிருந்த ஒரு புதிய ஐ.தே.க. உறுப்பினர்கள் சிலருக்கு ரணிலின் இந்த பேச்சு விளங்கவில்லை. இதனால் அவர் தலைநகர் திரும்பிய பின்னர் 'சிறிகொத்த முக்கியஸ்தர்' ஒருவரிடம் இது பற்றி அவர்கள் வினவியுள்ளனர்.

'மட்டக்களப்பில் பேர்கர் மக்களின் வாக்குகள் இருக்கின்றன என்பது பற்றி உங்களுக்குத் தெரியாதா? அந்த மக்களை கவர்வதற்காகவே தலைவர் அப்படி பேசினார். மட்டக்களப்பில் கத்தோலிக்க பேர்கர் இணைப்பு என்று தனி ஒரு அமைப்பும் உள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிப்புக்குள்ளான சியோன் தேவாலயத்திற்கும் இந்த அமைப்புடன் தொடர்பு உள்ளது' என்று அவர் கூறியுள்ளார்.

இந்த பேர்கர் கதையின் விளக்கத்தை அறிந்துகொண்ட அந்த புதிய உறுப்பினருக்கு மீண்டும் ஒரு சந்தேகம் எழவும் அது பற்றியும் அந்த முக்கியஸ்தரிடம் கேள்வி ஒன்றைக் கேட்டிருந்தார்.

'அப்பொழுது ஏன் சஜித்தின் கட்சியை கேஸ் சிலிண்டர் கட்சி என்று தலைவர் கூறுகின்றார்?' என வினவியதும் அந்த கேள்விக்கு கட்சி முக்கியஸ்தரால் பதில் அளிக்க முடியவில்லை. 'ஏதாவது நல்ல அர்த்தம் இருக்கும்.. நான் கொஞ்சம் தேடிப் பார்த்துவிட்டு சொல்கிறேனே' என்று கூறிய அந்த முக்கியஸ்தர் அங்கிருந்து மெல்ல நழுவிச் சென்றுவிட்டதாக தகவல்.

## பிரதமர் அன்பளிப்பாக வழங்கிய மடிக்கணினி

கடந்த வாரம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மொனராகலைக்கு விஜயம் செய்து அங்கு சஷிந்திர ராஜபக்ஷ ஏற்பாடு செய்திருந்த கூட்டங்களில் பங்குபற்றியிருந்தார். இந்த கூட்டங்களின் இறுதிக் கூட்டம் 'மெதகம'வில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், பிரதமர் அங்கு சென்று கொண்டிருந்த போது வழியில் இரு சிறுமிகள் அவரது வாகனத்தை நோக்கி ஓடி வந்துள்ளனர். அவர்களைக் கண்டதும் வாகனத்தை நிறுத்துமாறு கோரிய பிரதமர் தம்மை நோக்கி வந்த சிறுமிகளை சந்தித்து என்ன விடயம் என்று கேட்டிருக்கின்றார்.

அதற்கு அவர்கள் கோரிக்கை ஒன்று அடங்கிய சிறு கடிதம் ஒன்றை பிரதமரிடம் கையளித்து, 'மாமா நாங்கள் இந்த கடிதத்தினைக் கொடுக்கவே ஓடோடி வந்தோம். இதனை வாசித்து எங்களுக்கு உதவி செய்யுங்கள்' என்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுள்ளனர். கணினி வசதியின்மையினால் இணைய வகுப்புகளில் கலந்துகொள்ள முடியவில்லை என்றும், தங்களுக்கு கணினிகளைப் பெற்றுத் தர உதவுமாறும் அவர்கள் அந்த கடிதத்தில் பிரதமரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

கடிதத்தை வாசித்து மனமுருகிய பிரதமர் இரண்டு மடிக்கணினிகளை அடுத்தநாளே அந்த சிறுமிகளுக்கு அன்பளிப்பாக வழங்கி மகிழ்ந்தார்.

## பசிலை அதிரச் செய்த மின்கட்டணம்

கொழும்பு நெலும் மாவத்தையில் அமைந்துள்ள மொட்டு கட்சி காரியாலயத்திலிருந்து இருந்து தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் பசில் ராஜபக்ஷ கடந்த வாரம் அங்கு பணியாற்றும் இளைஞர்களுடன் சமகால விடயங்கள் தொடர்பில் சுவாரஸ்யமாக கலந்துரையாடிக்கொண்டிருந்தார். அவ்வேளை கொரோனா கால மின்கட்டணம் தொடர்பாகவும் பேச்சுகள் எழுந்தன.

அப்பொழுது பசில் எங்கள் வீட்டுக்கும் மின் பட்டியல் வந்தது. பட்டியலைப் பார்த்துவிட்டு நான் அதிர்ந்தே விட்டேன். பின்னர் கணக்குப் போட்டுப் பார்த்தேன், முடியாத பட்சத்தில் மின்சார சபைக்கும் கதைத்துப் பார்த்தேன். நல்லவேளை அரசாங்கம் இந்த விடயத்தில் தலையிட்டுள்ளது. இல்லாவிட்டால் பெருந்தொகையை செலுத்த வேண்டியிருக்கும் என்று குறிப்பிட்டார். அப்பொழுது பசிலின் கருத்தைக் கேட்டுக் கொண்டிருந்த இளைஞர்களால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

“நல்லவேளை, இல்லாவிட்டால் நீங்களும் அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்து பேஸ்புக் பதிவு போட்டிருப்பீர்கள்'' என்று அங்கிருந்த துடிப்பான இளைஞர் ஒருவர் கூறவும் அனைவரும் பலமாக சிரித்தே விட்டனர்.

## ரணிலுடன் சவாரி சென்ற ஊடகவியலாளர்கள்

'தமிழன்' சகோதரப் பத்திரிகைகளை சேர்ந்த ஊடகவியலாளர்கள் ரணில் விக்கிரமசிங்கவின் நேர்காணல் ஒன்றைப் பெறுவதற்காக ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஒருங்கிணைப்பு செயலாளரை கடந்த வாரம் தொடர்பு கொண்டனர். எனினும், ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பலவற்றில் பங்குபற்றியிருந்தமையினால் நேர்காணலுக்கான நேரத்தை ஒதுக்க முடியாத நிலையே காணப்பட்டது. ஆனாலும் கடும் வேலைப்பளுவுக்கு மத்தியில் ரணில் நேர்காணலுக்கு விருப்பம் தெரிவித்திருந்தார்.

அத்துடன், குறிப்பிட்ட இடத்திற்கு வரும்படி ஊடகவியலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது. இதன்படி எமது சகோதரப் பத்திரிகைகளை சேர்ந்த ஊடகவியலாளர்கள் அவரின் இல்லத்திற்கு சென்ற போதும் அந்த நேர்காணல் அங்கு நடைபெறவில்லை. மாறாக அவரின் மோட்டார் வாகனத்திலேயே நடைபெற்றிருந்தது.

ரணில் அன்றைய தினம் கூட்டம் ஒன்றில் கலந்துகொள்வதற்காக இரத்தினபுரிக்கு செல்ல ஏற்பாடாகியிருந்த நிலையில் அதேசமயம் நேர்காணலையும் வழங்க வேண்டிய இக்கட்டான நிலை அவருக்கு ஏற்பட்டிருந்தது.

ஆனால், இரண்டு விவகாரங்களையும் சரியான முறையில் கையாண்ட அவர் இறுதியில் ஊடகவியலாளர்களை தமது வாகனத்தில் ஏற்றிக்கொண்டு இரத்தினபுரி செல்லும் வழியில் நேர்காணலை வழங்கியிருந்தார். ரணிலின் வாகனத்தைப் பின் தொடர்ந்த அலுவலக வாகனம் ஏஹேலியகொடையில் நேர்காணல் நிறைவுற்ற பின்னர் ரணிலின் வாகனத்திலிருந்து இறங்கிய ஊடகவியலாளர்களை ஏற்றிக்கொண்டு கொழும்புக்கு பத்திரமாக திரும்பியது.

இதைவிட முக்கியமான விடயம் கடந்த வாரம் 'சிரச' தொலைக்காட்சிக்கு அரசியல் பேட்டி ஒன்றை வழங்குவதற்காக மஹாராஜா நிறுவனத்தின் தலைமையகத்திற்கு சென்றிருந்தார் ரணில். அரசியல் காரணங்களினால் நீண்ட நாட்கள் ரணிலுக்கும் இந்த தொலைக்காட்சி நிறுவனத்திற்குமிடையில் பெரும் கருத்து முரண்பாடுகள் இருந்தன. இருந்தாலும் ரணில் அந்த பழைய பகைமையை மறந்துவிட்டு மஹாராஜா நிறுவனத்திற்கு சென்றார். அதேபோல் ரணிலை கீழே வந்து வரவேற்று அழைத்துச் சென்றார் மஹாராஜா நிறுவனத்தின் தலைவர் கிளி என்று அழைக்கப்படும் ராஜமஹேந்திரன். அரசியல் வேறு நட்பு வேறு, கருத்துகள், கொள்கைகள் ரீதியாக முரண்பாடுகள் இருந்தாலும் நட்பு என்பது அதற்கு அப்பாற்பட்டது என்றே இந்த இருவரின் சந்திப்புக்குப் பின்னர் பலரும் பேசிக்கொண்டனர்.

## சஜித்தின் தேர்தல் மேடைக்கு வந்த பிறந்தநாள் கேக்

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ கடந்த வாரம் மாத்தளை மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டங்கள் பலவற்றில் பங்குபற்றியிருந்தார். அங்கு ஒரு கூட்டத்தில் வசந்த அலுவிஹாரேயின் குடும்பத்தினர் யாரும் எதிர்பார்க்காத வேளையில் தேர்தல் மேடைக்கு பிறந்தநாள் கேக் ஒன்றினை எடுத்து வந்திருந்தனர்.

'இன்று வசந்தவின் பிறந்தநாள்' என்று ரஞ்சித் சஜித்திடம் முணுமுணுக்கவும், உடனடியாக அவருக்கு தனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்ட சஜித் மேடையில் கேக் வெட்டி அனைவருக்கும் வழங்க ஏற்பாடு செய்தார். அத்துடன் கேக் துண்டுகளை ஒவ்வொருவருக்கும் ஊட்டி மகிழ்ந்தார்.

'பாருங்கள் எங்களது தேர்தல் மேடையின் ஒற்றுமையை. இது மற்றவர்களுக்கும் சிறந்த உதாரணம். மொட்டுக் கட்சியினர் விருப்பு வாக்குகளுக்காக ஆளாளுக்கு அடிபிடிப்படுகின்றனர். எமது வேட்பாளர்களோ கேக் வெட்டி ஊட்டி மகிழ்ந்து ஒற்றுமையாக இருக்கின்றனர்' என்று சஜித் குறிப்பிட்டார்.

ஆதலால் தானே ஐக்கிய மக்கள் சக்தி என்று கட்சிக்கு பெயர் சூட்டினோம் என்று அவருக்கு அருகில் இருந்த வேட்பாளர் சஜித்திடம் கூறவும், அதனைக் கேட்டு மகிழ்வுற்ற அவர் 'கட்சியின் பெயரைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள் பெயருக்கு ஏற்றாற்போல் வேலை செய்யுங்கள்' என்று மேடையில் நின்றவர்களுக்கு அறிவுரை கூறினார்.

## சம்பந்தனின் கோட்டையில் விக்கி

கடந்த வாரம் திருகோணமலையில் தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்தார் முன்னாள் வடக்கு முதலமைச்சர். திருகோணமலையில் சம்பந்தனின் குலதெய்வ கோயிலான காளி கோவிலில் பூஜைகளில் பங்கேற்ற பின்னர் பிரசாரத்தை ஆரம்பித்த விக்கி, தேர்தல் மேடைகளில் சம்பந்தனை கடுமையாக தாக்கிப் பேசினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பல உறுப்பினர்கள் விக்கியின் இந்த பேச்சை கண்டித்து பின்னர் கருத்துகளை வெளியிட்டிருந்தனர்.



ஆர். சிவராஜா
mesivaraj@yahoo.com

# சீத்துவக்கேடு 30



காரைக்கவி
கந்தையா பத்மானந்தன்

நான் உந்த சித்திரைக் கஞ்சியைப் பற்றிச் சொல்லேக்கை எனக்கு உந்த வடிச்ச குத்தரிசிக் கஞ்சியை பற்றி ஞாபகம் வந்தது. எங்கட வீட்டில நாங்கள் எப்பவும் மொட்டைக் கறுப்பன் குத்தரிசிதான் சமைக்கிறது. நாங்கள் எப்பவும் மொட்டைக் கறுப்பன் நெல்லுத்தான் விதைப்பம் நெல்லு மணி கறுப்பா இருக்கும்.

எங்கடை வயலிலை விளைஞ்சிருக்கிற மொட்டைக்கறுப்பன் நெல்லு மணியளைப் பாத்துப்போட்டு மலர் என்னை மாதிரியே இருக்கெண்டு பகிடி பண்ணுவாள். சிலநேரம் ஆசையா மொட்டைக் கறுப்பன் எண்டுதான் என்னைக் கூப்பிடுவாள்.

வேற சிலர் பச்சைப் பெருமாள், சீனட்டி, பெரியகருப்பன், சின்னக்கறுப்பன், விரால்வகிறன், கொக்குவெள்ளை, காடைக்கழுத்தன், சித்திரைக்காலி, மொறுங்கன், முருங்கைக்காயன், இளங்கலையன், முல்லை நெல், மணல்வாரி எண்டு விதைப்பினம். இதுகள் எல்லாம் கொஞ்சம் நாள் கூடின பயிர்கள் விளைச்சல் குறைவு. ஆனா அரிசி நல்ல உருசை.

ஆனால், ஆக்கள் கொஞ்ச நாளிலை கூடின விளைச்சல் தாற எக்ஸ் – 4, ஐ.ஆர் – 8, பி.ஜி – 11 எண்டு தொடங்கி இப்ப எல்லாரும் ஆட்டக்காரிக்குப் பின்னால திரியினம். அரிசியில ஒரு சத்தும் கிடையாது எண்டு அப்பு சொன்னார்.

உதைக் கேட்ட உடனை ஆச்சி எப்பவும் ஆட்டக்காரிக்கு பின்னால திரிஞ்சா கரைச்சல் தானே. சத்து எல்லாம் இல்லாமல் போகும் எண்டவும், அதெண்டால் உண்மைதானே நீ ஆட்டக்காரிக்கு பின்னால திரிஞ்சதாலதானே எனக்கு எப்பவும் கரைச்சலா இருக்கு. இப்ப சத்து எல்லாம் கேட்டு சக்கையாப் போய் கிடக்கிறன் எண்டு அப்பு பகிடி விடுவார். .

உடன ஆச்சி, இந்த ஆட்டக்காரி வேணும் எண்டு நீ எத்தினை ஆட்டம் ஆடி இருப்பாய். என்ரை அப்புவிட்டை எத்தினை நாள் பேச்சு வாங்கி அலவாங்கு விளுங்கினவன் மாதிரி அலமலந்து கொண்டு திரிஞ்சனி. எனக்கு எவ்வளவு சீத்துவக் கேடா இருந்தது எண்டவும் வழக்கம் போல அப்பு கப்சிப் ஆயிடுவார்.

உந்த பழைய நெல் ரகங்கள் ஒவ்வொண்டுக்கும் ஒவ்வொரு மருத்துவக் குணம் இருக்கெண்டு பழைய வாகடங்களிலை இருக்கெண்டு அப்பு சொல்லுவார். அதேமாதிரி புது ரக நெற்பயிர்கள் கொஞ்ச உயரமே வளரும் அதோட அதுகளின்ரை வைக்கலிலை சத்துக் குறைவு எண்டதால மாடுகளுக்கு குறிப்பா பால் மாடுகளுக்கு எந்தப் பிரயோசனம் இல்லை அதுகள் கொஞ்சமாத்தான் பால் கறக்கும் எண்டுவார.

ஆனால், பாரம்பரிய நெல் ரகங்கள் நல்ல நீளமாக வளரும் அதோட வைக்கலில சத்தும் கூட எண்டதால மாட்டுக்கு நல்லம். பசுவுக்கு போட்டால் நல்லா பால் கறக்கும். அதோட வயலிலை போட்டுக் கொளுத்தினால் இல்லாட்டில் தாட்டால் நல்ல பசளை எண்டு சொல்லுவார்.

பாரம்பரிய நெல் அரிசியைச் சாப்பிட்டா பல வருத்தங்கள் இல்லாமல் போகும். எண்டு சித்த மருத்துவம் சொல்லுது. ஒவ்வொரு அரிசி வகைக்கும் ஏத்த மாதிரி நரம்பு, உடல் வலுவாகும். ஆண்மை கூடும். சுகப்பிரசவம் ஆகும். தாய்ப்பால் ஊறும், மாதவிடாய், இடுப்பு வலி சரியாகும். நீரிழிவு, மலச்சிக்கல், சரியாகும். மூலம், மலச்சிக்கல் போன்றவை சரியாகும். மூளை, நரம்பு, இரத்தம், சிறுநீரகம் சரியாகும். மூட்டுவலி, முழங்கால் வலி சரியாகும். எலும்பு சரியாகும். பக்கவாதத்திற்கு நல்லது, கால்வலி சரியாகும. பல், இதயம் வலுவாகும். இழந்த சக்தியை மீட்டுத் தரும்.

இரத்தம் சுத்தமாகும், தோல் நோய் சரியாகும். குடல் சுத்தமாகும், இரத்த சோகை நீங்கும். அழகு தரும், எதிர்ப்புச் சக்தி கூடும், பெண்களுக்கு அழகு கூடி இடை மெலியும். இடுப்பு வலுவாகும். ஆண்களுக்கு விந்து சக்தி கூடும் எண்டு சித்த மருத்துவத்தில வடிவா விளக்கி இருக்குது எண்டுவார். பொதுவாக உந்த எல்லா அரிசியளும் கெதியில சமிக்கும். அதோட மலச்சிக்கலை இல்லாமல் பண்ணுறதோட நரம்புகளையும் நல்லா பலப்படுத்தும் எண்டு சொல்லுவார்.


ஆச்சி உதைக் கேட்டுப் போட்டு கிட்டத்தட்ட ரெண்டு இலட்சம் பாரம்பரிய நெல் இனங்கள் முந்தி மன்னர்கள் காலத்தில் இருந்தது எண்டுதான் எங்கேயோ வாசிச்ச ஞாபகம் இருக்கெண்டவும், அப்பு ஓமோம் நீ சொல்லுறது சரி. ஆனால், இப்ப நூற்றிஅறுபத்தேழு பாரம்பரிய நெல் இனங்களின்ரை விபரங்கள்தான் பதிவில இருக்கெண்டார்.


வடிச்ச கஞ்சியுக்குள்ளை அளவா உப்பு போட்டு கொஞ்சம் தேங்காய்ப்பால் விட்டு, இல்லாட்டில் தேங்காய்ப் பூ போட்டு குடிக்க இல்லாட்டில் தேங்காய்ச் சொட்டைக் கடிச்சுக் கொண்டு குடிக்க தேவாமிர்தம் மாதிரி இருக்கும். வயிறு நிறைய இந்த புழுங்கல் அரிசி கஞ்சி குடிச்சால் பிறகு ஒண்டும் தின்னத் தேவையில்லை. அதில நிறையச் சத்து இருக்கெண்டு ஆச்சி சொல்லுவா.

சிலர் காலமையில வேற ஒரு சாப்பாடும் வைக்காம பால் கஞ்சி இல்லாட்டில் சக்கரைக் கஞ்சி காச்சிக் குடிப்பினம். சிவப்பு பச்சை அரிசியோட வறுத்த உடைச்ச பயத்தம்பருப்பு போட்டு அவிச்சு தேங்காய்ப் பாலும் விட்டால் பால் கஞ்சி வந்திடும் விடுகிற பாலிலை சக்கரையை இடிச்சு கலந்தால் சக்கரைக் கஞ்சி றெடி ஆகிடும்...

***(தொடரும்)***









# லண்டனில் கின்னஸ் சாதனை நிகழ்த்திய இலங்கைச் சிறுமி காஷினி சிவேந்திரன்

## எட்டு வயதில் அபார திறமை



காஷினி தனது முதலாவது கின்னஸ் சாதனைக்காக கிடைக்கப்பெற்ற சான்றிதழுடன் காணப்படுகின்றார்

**“ஒரு நிமிடத்தில் 200 தடவைகள் தனது முழங்கால் பகுதியில் வளையமொன்றை தொடர்ச்சியாக சுழலச் செய்து சாதனை”**

இலங்கையை பிறப்பிடமாகக் கொண்டவரும் லண்டனை வசிப்பிடமாகக்கொண்டவருமான எட்டு வயதான செல்வி காஷினி சிவேந்திரன் ‘கின்னஸ்’ சாதனையொன்றை நிகழ்த்தியுள்ளார். வளையமொன்றை முழங்கால் அளவில் ஒரு நிமிட நேரம் இடைவிடாமல் சுழலச் செய்தே இவர் இந்த கின்னஸ் சாதனையை நிழ்த்தியுள்ளார். ஹு லா ஹுப்பிங் **(Hula hooping)** என அழைக்கப்படுகின்ற இந்தச் சாதனையின் போது இவர் ஒரு நிமிடத்தில் 200 தடவைகளுக்கு மேல் வளையத்தை இடைவிடாமல் சுழலச் செய்துள்ளார்.

**“திரட்டப்பட்ட 10 ஆயிரத்து 300 பவுண் நிதியை கொரோனாவால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான நிவாரண நிதியாக வழங்கினார்”**

இதற்கு முன்னர் ஒரு நிமிடத்தில் 194 தடவைகள் சுழற்றியதே கின்னஸ் சாதனையாக காணப்பட்டது. அந்த சாதனையையே செல்வி காஷினி சிவேந்திரன் முறியடித்துள்ளார்.

இச்சாதனையை இவர் நிகழ்த்தியதன் மூலம் இவருக்குக் கிடைக்கப்பெற்ற 10 ஆயிரத்து 300 பவுண் நிதியை கொரோனாவினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் நலன்காப்பு நிதிக்காக அவர் கொடுத்துள்ளார்.

காஷினியுடைய தாயார் திருமதி ரூபா நிவேதிதா சிவேந்திரன் இலங்கை கண்டி உயர்தர பாடசாலையின் பழைய மாணவியாவார். காஷினியின் தந்தை நவரட்ணராஜா சிவேந்திரன் கொழும்பு இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவார். செல்வி காஷினி சிவேந்திரன் லண்டன் ‘புரோக் சைட்’ **(Brook Side)** ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்று வருகின்றார்.

இதற்கு முன்னரும் 2018ஆம் ஆண்டு வுலா ஹோப்பிங் **(Hula hooping))** இடை பகுதியில் சுழற்றும் சாதனையில் வெற்றிபெற்று கின்னஸ் சாதனையை இவர் நிகழ்த்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இதன் மற்றுமொரு சாதனையாகத்தான் தற்போது முழங்கால் அளவில் வளையத்தை சுழலவிட்டு சாதனையை நிகழ்த்தியுள்ளார். எட்டு வயதுடைய காஷினியின் சாதனையை லண்டன் மேயர் சாதிக்கான் மற்றும் ‘ஹேரோ’ **(Harrow)**, மேயரான கரினா மரிக்கார் ஆகியோர் பாராட்டி சான்றிதழ் வழங்கி போர்வை அணிவித்துப் பாராட்டினார்கள்.

இவருடைய சாதனையை பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை சமூகமும் பெருமையுடன் கொண்டாடியது. இங்கிலாந்து ஆட்சி மாட்சிமை பொருந்திய மகாராணி அவர்கள் காஷினியை கடிதம் மூலம் பாராட்டியமை குறிப்பிடத்தக்கது.

கொரோனா தொற்று இங்கிலாந்து உட்பட உலக நாடுகள் பலவற்றிலும் பரவியதால் சாதாரண மக்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டு அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு இங்கிலாந்திலுள்ள பாடசாலைகள் 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் மூடப்பட்டிருந்தன.

இதன் காரணமாக காஷினியும் அவருடைய பாடசாலை மாணவர்களும் வீடுகளில் முடங்கியிருந்தனர். எனினும், கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக நிதி திரட்டும் நோக்கில் செல்வி காஷினி தனது இரண்டாவது கின்னஸ் சாதனையை இவ்வாறு நிறைவேற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவரது இச்சாதனையை பாடசாலையும் பாடசாலை சமூகமும் பாராட்டியது. அவரது சாதனையின் பின்னர் லண்டன் **BBC** வானொலி மூலம் காஷினியினது நேர்காணல் நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஜுமோக் **(Jumoke)** எனும் நிகழ்ச்சியில் ஞாயிறு காலை நேர்காணலில் காஷினியின் பேட்டி ஒலிபரப்பப்பட்டது. சிறுவர் சங்கத்தின் சிரேஷ்ட நிர்வாகி ‘மார்க் ரசல்’ **(Mark Russel)** காஷினியுடன் இந்த நேர்காணலில் இணைந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

**- அபிதாக் -**



காஷினியின் சாதனையை லண்டன் மேயர் சாதிக்கான் மற்றும் ‘ஹேரோ’ (Harrow), மேயரான கரினா மரிக்கார் ஆகியோர் பாராட்டி சான்றிதழ் வழங்கியபோது...

# தூறல்கள்...

## உரிமையற்ற உறவு

உனை மறந்து விட்டதாய்
உனக்கொரு செய்தி
அனுப்பி இருக்கிறேன்...
அதில் நீ மகிழ்ச்சி அடையக்
கூடும்...
மணவாழ்விற்காய் தயாராகி
கொண்டிருப்பதாகவும்
அதனோடு ஒரு செய்தி
வரும்...
அதற்கு நீ மணவாழ்த்தோடு
மன்னிப்பும் கேட்கக்
கூடும்..
அன்பே...
உன் மீது எப்போதும்
நான் சிறு வெறுப்பு கூட
கொண்டிருப்பதில்லை...
உன் மன்னிப்புகளை கூட
எதிர்பார்த்ததில்லை..
ஏனெனில், மன்னிக்க
கோரும் தவறுகள்
எதுவும் நம்மிடையே
நிகழவில்லை..
உனதான நேசம்
வேரற்று போனாலும்...
நினைவுகள் இன்னும்
உயிரற்று போகவில்லை...
நீ இல்லை என மறுப்பது
போல....
நமக்குள் எதுவுமே
இல்லை தான்...
இருந்தும் தண்டவாளங்கள்
ஒன்றாய் தானே
பயணிக்கின்றன...
உனது பாதை வேறான போதும்
எனது பாதை வேறான போதும்
நாம் இவ்வுலகில் தான்
வாழ்ந்து கொண்டிருக்கிறோம்
இல்லையா..!!
அதனால் என்றாவது
புன்னகைகளை மட்டும்
பகிர்ந்து கொள்ளும்
உறவாகவாவது இருந்து
கொள்வோம்...
இப் பேரண்டத்தின் நேசம்
தீர்ந்து போகும் வரை...

ஃபௌமி

## முதுமை



நாற்பது வயதை தாண்டி விட்டேன்
கருமையை மறைத்து முன்னேறும் நரை
கவலையின்றி தலை கோதும் விரல்கள்!

முகம் தெரியாதோர்
அம்மா என்னும் போது
முறைத்து கடந்து போகாத விழிகள்!

பள்ளித் தோழி
இளமையோடு இன்னும்
எதிரில் வந்தாலும்
எதிரியாய் உணராத என்
எண்ணங்கள்!

கணவனின் நரைகள்
ஐந்து ஆறு என்பதற்கும்
பொறாமைக் கொள்ளாத
என் குணங்கள்!

நரைக்கு விளம்பரங்கள்
இருந்தும் கோபத்தைக் கொட்டாமல்
புன்னகையோடு கடந்து செல்லும் என் இதழ்கள்!

இதை எல்லாம் தாண்டி
கண்ணாடி முன் நின்று
மட்டும் புலம்புகின்றேன்
தினமும் முதுமை வரவேற்கின்றதே என்று...!

பா.ஷாருலதா
காமினிபுர, ஹட்டன்

## மானங்கெட்ட மனது

காரணமில்லாமல்
மறுதலித்துச் சென்றவர்கள்
திரும்ப வந்து எனை
அழைக்கும் போது. .

எந்த வித நிராகரிப்புமின்றி
மீண்டும் அவர்கள்
கரம் கோர்க்கும்
என் நேசத்தின் வேர்களை
தயவு செய்து யாராவது
அறுத்து எறிந்து விடுங்கள்..

என் மனம் கொஞ்சமேனும்
மானத்தோடு வாழட்டும்..

## காற்று

கண்களில் புலப்படாத கடவுள் நீ
நிலத்துக்கும் தேவை நீ
நீருக்கும் தேவை நீ
அனலுக்கும் தேவை நீ
அண்டவெளியிலும் தேவை நீ
அருவமாயினும் உணர முடிகின்ற ஸ்பரிசம் நீ
ஒவ்வோர் உயிருக்கும் உரிமையாய் நீ
சாந்தமான தென்றல் நீ
சினம் கொண்டால் சூறாவளி நீ
அனுமதி இன்றி வரும் காதல் நீ
மொழியில்லா இசையும் நீ
கடைசி வரை நான் கொள்ளும் காதல் நீ
என் சுவாசக்காற்றே நிலைப்பாய்
என்னுள் நீயே...!

## மாயை

என் நிழல் நீயென
நினைத்தேன்
இப்போது தான் புரிந்தது
நான் நிஜமே இல்லையென்று...!

## ஏமாற்றம்

அது நமக்கில்லை என
ஆகும் போது..
இனி ஒரு போதும்
பார்க்கவே முடியாது என
ஆகும் போது..
இறுதியாய் ஒரே ஒரு முறை
ஆசைத்தீர பார்த்துக் கொள்ள..
நேசத்தின் பானத்தை
ஆசைத் தீரப் பருகிக் கொள்ள
நம் மனம் ஏங்கும்..
ஆனால் அந்த இறுதி தான்
இறுதி வரை...
கிடைக்காமலே போய் விடுகிறது.

## என்னருகில் நீ

உன் விழியின் அசைவுக்கான
காரணத்தை என்னால் அறிய முடிகிறது
உன் மௌனத்தின் அர்த்தங்களை
என்னால் புரிந்து கொள்ள முடிகிறது
நீ என் அருகில் இல்லாவிட்டாலும் உன்
ஸ்பரிசத்தை என்னால் உணர முடிகிறது
உன் நினைவுகளை மட்டுமே என்
இதயத்தில் சேகரிக்க முடிகிறது
எப்படி உன்னால் மட்டும் என்னை
உயிரோடு கொல்ல முடிகிறது

-நேசு-
கொழும்பு-07

## எனக்கான நிமிடங்கள்...

நீ பேசிக் கொண்டே
இருப்பதை நான் கேட்பதுமில்லை
அதற்காக நீ பேசாமல் இருக்கையில்
விட்டு விடுவதுமில்லை

ஏனென்றால் நான் உன்னிடம்
ரசிப்பது நீ எனக்காக
செய்யும் செயல்களை அல்ல
எனக்காக செலவிடும்
நிமிடங்களை தான்...!

-என்.மீரா
கொழும்பு-09

## என் மனப்போராட்டம்

அனைவரும் உறங்கி விட்ட
இராப் பொழுதில்...
சுற்றும் முற்றும் மயான அமைதி !
நான் மட்டும் உறக்கம் இன்றியே ...
என் நீங்காக் காதலன்
தலையணையோடு
வெகு நேரமாய் உறங்கிடும்
முயற்சியில் தோற்றவளாய்..
மனதிற்குள் ஆயிரமாயிரம்
குழப்பங்கள்
என்..எதிர்காலம் பற்றிய
யோசனையில் மூழ்கிக் கிடந்ததேன்..!
இதற்கிடையில் இறந்த கால
நினைவுகளும் அந் நினைவுகளில்
நான் சந்தித்த சந்தர்ப்பவாதிகளும்,
எனக்கேற்பட்ட பிரச்சினைகள்
மட்டுமன்றி அவர்கள் எனக்களித்த
பிரிவுகள் என
இவை அனைத்தும்..
இடையிடையே என்னை
எச்சரிக்க மறக்கவில்லை..!
இதுவரை காலமும் என்
ஆசைகளெல்லாம் நிராசையானதால்
அத்தனையும் அழித்து விடும்
எண்ணம் தோன்றிய போதும்
நடப்பது எதுவானாலும் அதை
ஏற்றுக்கொள்ளும் தைரியத்தோடு
மனதிற்குள் எழுகின்ற
சிந்தனைகளின் போராட்டத்திற்கு
முற்றுப்புள்ளி இட்டவளாய்..
கண்ணயர்ந்தேன் !

ருகையா நஜீப்
மாவனல்லை



# இவ்வார ராசி பலன்கள் (26.07.2020 - 01.08.2020)



வித்வ கலாபூஷணம்
ஜோதிட திலகம்
சிவஸ்ரீ
வெங்கட சுப்ரமணிய
குருக்கள்

### மேஷம்

சுப பலன் உண்டாகும். தாய் வழி உறவுகளால் ஆதாயம் உண்டு. புத்தி சாதுர்யமும், வாக்கு வன்மையும் அதிகரிக்கும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். பணவரவு அதிகமாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் இடமாற்றம் பதவி உயர்வு கிடைக்கப் பெறுவர். தொழில், வியாபாரத்தில் வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். வாகனங்கள் மூலம் இலாபம் கிடைக்கும். சரக்குகளை வெளியூர்களுக்கு அனுப்பும்போது கவனம் தேவை. குடும்ப உறுப்பினர்களுக்குத் தேவையான பொருட்களை வாங்குவீர்கள். விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும்போது அதிக எச்சரிக்கை தேவை. பெண்கள் எந்த ஒரு வேலையையும் மனதிருப்தியுடன் செய்வர். கலைத்துறையினர் காரியங்களில் நிதானமாக செயற்படுவது நல்லது. மாணவர்கள் கல்வியில் தேர்ச்சி பெறுவர்.

**வழிபாடு:** முருகனுக்கு தீபம் ஏற்றி வணங்கி வர காரிய வெற்றி உண்டாகும்.

### ரிஷபம்

எதிலும் சாதகமான பலன் கிடைக்கும். செயல்களில் கடுமையான முயற்சிகள் தேவை. சகோதரர்களால் ஆதாயம் உண்டு. எதிர்பாராத செலவு உண்டாகும். பூர்வீக சொத்துகள் மூலம் வரும் வருமானம் தாமதப்படும். திருமணம் தொடர்பான முயற்சிகளில் சாதகமான நிலை இருக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத தடை ஏற்பட்டு நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது. அலுவலகம் தொடர்பான பணிகள் தாமதப்படும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. வாழ்க்கை துணையுடன் இருந்த மனஸ்தாபங்கள் விலகும். பெண்கள் அண்டை அயலாரை அனுசரித்து செல்வது நல்லது. கலைத்துறையினருக்கு வளர்ச்சியில் இருந்த முட்டுக்கட்டைகள் நீங்கும். கல்விக்குத் தேவையான உதவிகள் கிடைக்கும்.

**வழிபாடு:** மகாலட்சுமியை தீபம் ஏற்றி வழிபட்டு வர செல்வம் சேரும்.

### மிதுனம்

எல்லாவகையிலும் நன்மை உண்டாகும். மற்றவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்ற எண்ணம் உண்டாகும். விட்டுச் சென்ற நண்பர் மீண்டும் வந்து சேர்வார். எதிர்பாராத செலவு ஏற்படும். பணவரவு இருக்கும். வாக்கு வன்மையால் காரிய அனுகூலம் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் அதிக முதலீடு செய்யும் முன் யோசிப்பது நல்லது. பழைய பாக்கிகள் சிறிது தாமதத்திற்கு பின் வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். குடும்பத்தினருடன் திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். விருந்தினர்கள் வருகையால் செலவு கூடும். அக்கம் பக்கத்தினரை அனுசரித்து செல்வது நல்லது. வாகனங்களில் செல்லும் போதும், நெடுந்தூர பயணங்களின் போதும் கவனமாக இருப்பது நல்லது. கலைத்துறையினருக்கு முக்கிய நபர்களின் உதவி கிடைக்கும். மாணவர்கள் எந்த காரியத்தையும் யோசித்து செய்வது நல்லது.

**வழிபாடு:** பெருமாளை துளசியால் அர்ச்சனை செய்து வணங்க கஷ்டங்கள் குறையும்.

### கடகம்

காரிய அனுகூலம் உண்டாகும். எடுத்த காரியத்தை திறமையாக செய்து முடிக்க தேவையான உதவிகள் கிடைக்கும். எந்தப் பிரச்சினையையும் எதிர்கொள்ளும் தைரியம் உண்டாகும். வழக்குகளில் இருந்த மந்தநிலை மாறும். மனதை கவலையடையச் செய்த பிரச்சினைகளில் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்பட்டு சாதகமான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரம் முன்னேற்ற பாதையில் செல்லும். எதிர்பார்த்த பண உதவியும் கிடைக்கும். வேலை தேடிக்கொண்டு இருப்பவர்களுக்கு உத்தியோக வாய்ப்புகள் வரும். முக்கிய நபர்களின் உதவியும் கிடைக்கும். மேலிடம் அனுசரணையாக இருக்கும். கலைத்துறையினருக்கு முன்னேற்றம் சீரான பாதையில் இருக்கும். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான சிக்கல்கள் குறையும்.

**வழிபாடு:** அங்காளம்மனை தீபம் ஏற்றி வணங்க மன கவலை தீரும்.

### சிம்மம்

எல்லாவகையிலும் நல்ல பலன்கள் உண்டாகும். எதிர்பாராத சம் பவங்களால் இழுபறியாக நின்ற காரியங்கள் நல்ல முடிவுக்கு வரும். தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் சற்று கூடுதலாக உழைக்கவேண்டியிருக்கும். கடன் பிரச்சினைகள் குறையும். வரவேண்டிய பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். எதை பற்றியும் கவலைப்படாமல் நினைத்த காரியத்தை செய்வதில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். கலைத்துறையினருக்கு விடாமுயற்சியுடன் மனதில் தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான பிரச்னைகள் குறையும். தேவையான உதவி கிடைக்கும்.

**வழிபாடு:** நவக்கிரகத்தில் சூரியனை வழிபட்டு வர இன்னல்கள் தீரும்.

### கன்னி

காரிய வெற்றி கிடைக்கும். மற்றவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் நாட்டம் செல்லும். கௌரவம் அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் தங்களது தொழில் விரிவாக்கம் செய்யும் முயற்சியில் ஈடுபடுவர். அதற்குத் தேவையான பண உதவியும் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தங்களது திறமையால் அலுவலகப் பணியை சிறப்பாகச் செய்வார்கள். ஆன்மீக பணிகளில் நாட்டம் அதிகரிக்கும். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். வெளித் தொடர்புகளில் எச்சரிக்கை தேவை. பெண்கள் எண்ணப்படி காரியங்களை செய்துமுடிப்பர். கலைத்துறையினருக்கு நல்ல திருப்பங்கள் ஏற்படும். மனதில் சந்தோஷம் உண்டாகும். மாணவர்கள் திட்டமிட்டு செயலாற்றுவது முன்னேற்றத்திற்கு உதவும்.

**வழிபாடு:** நவகிரகத்தில் புதனை தீபம் ஏற்றி வணங்கி வர மனதில் தைரியம் உண்டாகும்.

### துலாம்

திறமையான செயல்களால் புகழும், அந்தஸ்தும் உயரும். தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் கூடுதலாக பணியாற்ற வேண்டும். பணவரவு இருந்தாலும் கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக செயற்படுவது நல்லது. புதிய பதவிகள் தொடர்பான விடயங்கள் தாமதப்பட்டாலும் பொறுப்புகள் அதிகரிக்கும். பெண்கள் பேச்சின் இனிமை, சாதுர்யம் இவற்றால் எடுத்த காரியங்களில் சாதகமான பலன்பெறுவர். கலைத்துறையினருக்கு சிறப்பான காலகட்ட மாகும். பழைய பாக்கிகள் வசூலாகும். நண்பர் களால் தேவையான உதவி கிடைக்கும். மாணவர் கள், ஆசிரியர்களிடம் நன்மதிப்பை பெறுவர். புத்தகங்களை கவனமாக வைத்துக் கொள்வது நல்லது.

**வழிபாடு:** அம்மனை வணங்க எல்லா இன்னல்களும் தீரும்

### விருச்சிகம்

எல்லா நலன்களும் உண்டாகும். பயணம் மூலம் இலாபம் கிடைக்கும். புதிய நபர்கள் நட்பு உண்டாகும். அரசாங்கம் தொடர்பான காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். மற்றவர்கள் பிரச்சினைகளில் வாதாடி வெற்றி பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். வியாபாரம் விரிவாக்கம் செய்ய தேவையான பண உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நிலுவையில் இருந்த பணம் வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். நிலம், வீடு மூலம் லாபம் கிடைக்கும். பெண்களுக்கு புதிய நபர்கள் அறிமுகமும் அவர்களால் உதவியும் கிடைக்கும். கலைத்துறையினருக்கு பேச்சின் இனிமை சாதுர்யம் இவற்றால் எடுத்த காரியம் கைகூடும். மாணவர்களுக்கு போட்டிகள் விலகும்.

**வழிபாடு:** மாரியம்மனை தீபம் ஏற்றி வழிபட எல்லா கஷ்டங்களும் நீங்கும்.

### தனுசு

எடுக்கும் முயற்சிகள் வெற்றி கரமாக நடந்து முடியும். பிடி வாதத்தை தவிர்ப்பது நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் மெத்தன போக்கு காணப்படும். பணவரவு திருப்தியாக இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்கவேண்டி இருக்கும். சக ஊழியர்களுடன் கடுமையாக பேசாமல் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. உறவினர்கள் நண்பர்களுடன் இருந்த பகை நீங்கும். பெண்களுக்கு மற்றவர்கள் செயல்களால் திடீர் கோபம் உண்டாகலாம். கலைத்துறையினருக்கு உடன் பணிபுரிபவர்களுடன் வீண் வாக்குவாதம் ஏற்படலாம். மாணவர்கள் கல்வியில் காணப்பட்ட மெத்தனப்போக்கு நீங்கி சுறுசுறுப்பாக பாடங்களை படிப்பர்.

**வழிபாடு:** குருவுக்கு தீபம் ஏற்றி வணங்க எல்லா நன்மைகளும் உண்டாகும்

### மகரம்

தடைப்பட்ட காரியங்கள் சாதக மாக நடந்துமுடியும். தேவையற்ற பிரச்சினைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. தொழில், வியாபாரம் தொடர்பான அலைச்சல்கள் அதிகரிக்கும். வாடிக்கையாளர்களிடம் பேசும்போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. தொழில் முன்னேற்றம் தொடர்பான கவலை ஏற்பட்டு நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சின்ன விடயத்திற்காக கூட அலையவேண்டியிருக்கும். சக ஊழியர்கள் ஆதரவாக இருப்பார்கள். எதிர்பார்த்த பணம் கிடைக்கும். குடும்பத்திலிருந்த தேவையற்ற குழப்பங்கள் சரியாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன், மனைவிக்குள் கருத்து வேற்றுமை ஏற்படலாம். கலைத்துறையினருக்கு எதையும் சாதிக்கும் திறமை அதிகமாகும். மாணவர்கள் நிதானத்தைக் கடைப்பிடிப்பது வெற்றிக்கு உதவும்.

**வழிபாடு:** விநாயகரை வழிபடுவதால் எல்லா காரியங்களும் நன்றாக நடக்கும்.

### கும்பம்

நீண்டநாள் கஷ்டங்கள் நீங்கும். மற்றவர்களுக்காக வாதாடி வெற்றிபெறுவீர்கள். செலவுகள் அதிகரிக்கும். தொழில், வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். தேவையான பண உதவி கிடைப்பதிலும், புதிய ஓர்டர்கள் கிடைப்பதிலும் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் இருப் பவர்களுக்கு உழைப்பு அதிகமாகும். இட மாற்றம் ஏற்படலாம். குடும்பத்தில் திடீர் பிரச்சினைகள் ஏற்படலாம். கவனம் தேவை. ஆயுதங்கள், நெருப்புகள் பயன்படுத்தும்போது அதிக கவனம் தேவை. கணவன், மனைவிக்கிடையே வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. பூர்வீக சொத்துகள் மூலம் வரவேண்டியவை தாமதப்படும். கலைத்துறையினர் சோம்பேறித் தனத்தை விட்டுவிட்டு நன்கு உழைப்பது வெற்றிக்கு வழிவகுக்கும். மாணவர்கள் புத்திக்கூர்மையுடன் செயற்படுவது எதிர்கால முன்னேற்றத்திற்கு உதவும்.

**வழிபாடு:** ஆஞ்சநேயரை வழிபட்டால் எதிர்ப்புகள் அகலும்.

### மீனம்

எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டாகும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப் படும். சொத்துகள் சார்ந்த பிரச்சினைகளில் இருந்த சுணக்க நிலை மாறும். தொழில், வியாபாரம், லாபகரமாக நடக்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமான பலன் தரும். பழைய பாக்கிகள் வசூலாகும். நிதி நிலைமை உயரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் செயல் திறமை மூலம் கடின பணிகளையும் எளிதாக செய்துமுடிப்பர். வீட்டில் சுப காரியம் நடக்கும். திருமண முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும். பெண்களின் செயல்களுக்கு குடும்பத்தினரின் ஒத்துழைப்பு இருக்கும். கலைத்துறையினர் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு சில திட்டங்களை செயற்படுத்துவர்

**வழிபாடு:** முருகனை வழிபட எல்லா நன்மைகளும் உண்டாகும்.

**கடந்த வார ராசிபலன் பகுதியில் திகதி தவறாக பிரசுரமாகி விட்டது. தவறுக்கு வருந்துகிறோம்**



# 51 நாட்கள் நடைபெறவுள்ள ஐ.பி.எல்.

## நவம்பர் 8 இல் இறுதிப்போட்டி:

## ஒகஸ்ட் 20இல் அணிகள் ஐ.அ.இ. பயணம்

கடந்த மார்ச் மாதம் நடைபெறவிருந்த கிரிக்கெட் திருவிழாக்களில் ஒன்றான இந்தியன் பிரிமியர் லீக் தொடர் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கோடிகளால் புரளும் இவ்வருடத்திற்கான ஐ.பி.எல். தொடரை எப்படியாவது நடத்தி முடிக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை காணப்பட்டது.

இந்நிலையில், இவ்வருடம் ஒக்டோபரில் நடைபெறவிருந்த ஐ.சி.சி. இருபதுக்கு இருபது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் அதே கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக அடுத்த வருடத்துக்கு பிற்போடப்பட்டது. இந்தச் சம்பவம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு சாதகமாக மாறியது.

ஆனால், இந்தியாவில் நாளுக்குநாள் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்து வருவதன் காரணமாக சொந்த மண்ணில் ஐ.பி.எல். தொடரை நடத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடத்த முடிவெடுக்கப்பட்டது.

இந்நிலையில், ஐக்கிய அரபு இராச்சியத்தில் எதிர்வரும் செப்டெம்பர் 19ஆம் திகதி ஐ.பி.எல். தொடர் ஆரம்பமாகவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அத்துடன், மாபெரும் இறுதிப்போட்டி நவம்பர் 8ஆம் திகதி நடைபெறவுள்ளதாவும் தகவல் வெளியாகியுள்ளது.

மொத்தமாக 51 நாட்கள் போட்டிகள் நடைபெறவுள்ளன.

மேலும், கொரோனா வைரஸ் தாக்கம் காணப்படுவதன் காரணமாக தனிமைப் படுத்தல் சட்டங்களை எதிர்நோக்கவுள்ளதன் அடிப்படையில் அடுத்த மாதம் (ஒகஸ்ட்) 20ஆம் திகதி ஐ.பி.எல். தொடரில் பங்கேற்கும் அணிகள் ஐக்கிய அரபு இராச்சியம் பயணிக்கவுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. உறுதிப்படுத்தப்பட்ட இறுதித் தொடர் அட்டவணை இன்னும் ஓரிரு நாட்களில் வெளியிடப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




# 2020 டோக்கியோ ஒலிம்பிக் கவுண்டவுன் ஆரம்பமானது

அடுத்த வருடம் ஜப்பான் டோக்கியோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் தொடருக்கான நாள் கணிப்பிடும் கடிகாரம் சரியாக ஒரு வருடம் உள்ள நிலையில், டோக்கியோ நகரில் செயற்பட ஆரம்பித்தது.

ஆரம்பமாகவிருந்த டோக்கியோ ஒலிம்பிக் 2020 கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக 2021ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்ட நிலையில், 2021ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளின் புதிய அட்டவணை கடந்த வாரம் வெளியிடப்பட்டது.

அதனடிப்படையில் அடுத்தவருடம் ஜூலை 23ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 8ஆம் திகதி வரை ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் '2020 டோக்கியோ ஒலிம்பிக்' என்ற பெயரிலேயே அடுத்த வருடம் ஒலிம்பிக் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வியாழக்கிழமை ஒலிம்பிக் தொடர் ஆரம்பமாகுவதற்கு சரியாக ஒரு வருடம் உள்ள நிலையில், ஜப்பான் டோக்கியோவில் அமைந்துள்ள கடிகாரத்தில் போட்டிக்கான 365 நாட்கள் கணிப்பீடு ஆரம்பமானது. ஒலிம்பிக் போட்டி திட்டமிட்டபடி ஆரம்பமாகியிருந்தால் இந்நேரம் டோக்கியோ நகரம் விழாக்கோலம் பூண்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.



## ஊக்கமருந்து சோதனையில் சிக்கிய கெமி அடிகோயா:

# வெள்ளி வென்ற இந்தியாவுக்கு தங்கப்பதக்கம்!

ஆசிய விளையாட்டுப் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற இந்திய தடகள அணியின் பதக்கம் தங்கப்பதக்கமாக உயர்த்தப்பட்டுள்ளதாக உலக தடகள சம்மேளனம் அறிவித்துள்ளது.

கடந்த 2018ஆம் ஆண்டு இந்தோனேஷிய தலைநகர் ஜகர்த்தாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் 4×400 மீற்றர் கலப்பு (ஆடவர், மகளிர்) ஓட்டத்தில் மொஹமட் அனஸ் யஹ்யா, எம்.ஆர் புவம்மா, ஹிமா தாஸ், ஆரோக்ய ராஜீவ் ஆகியோர் அடங்கிய இந்திய அணி வெள்ளிப்பதக்கம் வென்றது.

4×400 மீற்றர் கலப்பு ஓட்டத்தில் தங்கப்பதக்கத்தை பஹ்ரைன் அணி கைப்பற்றியிருந்தது. இந்நிலையில், தங்கப்பதக்கம் வென்ற பஹ்ரைன் அணியில் இடம்பெற்றிருந்த வீராங்கனையான கெமி அடிகோயா ஊக்கமருந்து சோதனையில் சிக்கியதையடுத்து அவருக்கு நான்கு ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டது. அத்துடன், தங்கப்பதக்கத்தை கைப்பற்றிய பஹ்ரைன் அணி தகுதி இழந்ததாக அறிவிக்கப்பட்டது.

இதனடிப்படையில் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற இந்திய அணி தங்கப்பதக்கம் வென்றதாக தரமுயர்த்தி உலக தடகள சம்மேளனம் அறிவித்துள்ளது. மேலும் ஊக்கமருந்து சோதனையில் சிக்கிய கெமி அடிகோயா பெண்களுக்கான 400 மீற்றர் தடை ஓட்டத்தில் வென்ற தங்கப்பதக்கமும் பறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# நியூஸிலாந்து வீரர்களுக்கு ஐ.பி.எல். தொடரில் விளையாட அனுமதி

இவ்வருடம் மார்ச் மாதம் நடைபெறவிருந்த 13ஆவது இந்தியன் பிரிமியர் லீக் தொடர் கொரோனாவின் கோரத்தாண்டவம் காரணமாக நடைபெறுமா என்ற கேள்வி நிலவிவந்த நிலையில், ஐ.சி.சி. இருபதுக்கு இருபது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் பிற்போடப்பட்ட நிலையில், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஐக்கிய அரபு இராச்சியத்தில் தொடரை நடத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வருடம் நடைபெறவுள்ள இந்தியன் பிரிமியர் லீக் தொடரில் விளையாடுவதற்காக நியூஸிலாந்து கிரிக்கெட் அணியைச் சேர்ந்த ஆறு வீரர்கள் ஒப்பந்தம் செய்துள்ளனர். ஜேம்ஸ் நேஷம் (கிங்ஸ் லெவன் பஞ்சாப்), லுக்கி பெர்குசன் (கொல்கத்தா நைட் ரைடர்ஸ்), மிட்செல் மெக்லெனகன் (மும்பை இந்தியன்ஸ்), ட்ரென்ட் போல்ட் (மும்பை இந்தியன்ஸ்), கேன் வில்லியம்சன் (சன்ரைசர்ஸ் ஹைதராபாத்), மிட்செல் சேன்ட்னெர் (சென்னை சுப்பர் கிங்ஸ்) ஆகிய வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

கொரோனா வைரஸுக்கு மத்தியில் நியூஸிலாந்து வீரர்களுக்கு விளையாட அனுமதி வழங்கப்படுமா என்ற கேள்விக்கு நியூஸிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளதாவது, "ஐ.பி.எல். தொடரில் விளையாடப்போகும் வீரர்களுக்கான அனுமதியை நியூஸிலாந்து கிரிக்கெட் சபை தாராளமாக வழங்கும். ஆனால், தொடரில் பங்கேற்பது குறித்து வீரர்கள்தான் முடிவு செய்யவேண்டும். போட்டி தொடர்பாக எங்களுக்கு கிடைக்கும் தகவல்களை நாம் வீரர்களுக்கு வழங்குவோம்'' - எனத் தெரிவித்துள்ளது.



# 15 ஆண்டுகளின் பின்னர் களமிறங்கும் மைக் டைசன்

அமெரிக்காவில் செப்டெம்பர் 12ஆம் திகதி நடைபெறும் கண்காட்சி குத்துச்சண்டை போட்டியில் குத்துச்சண்டை ஜாம்பவான் மைக் டைசன் 15 ஆண்டுகளின் பின்னர் தனது 54ஆவது வயதில் மீண்டும் களத்துக்கு திரும்பவுள்ளார். அவர் மற்றுமொரு உலக சம்பியன் ரோய் ஜோன்ஸ் ஜூனியரை எதிர்கொள்கிறார்.

கடந்த 2005ஆம் ஆண்டு குத்துச்சண்டை போட்டியிலிருந்து மைக் டைசன் ஓய்வுபெற்றார். 1986ஆம் ஆண்டு உலக ஹெவிவெயிட், குத்துச்சண்டை போட்டியில் மைக் டைசன் சம்பியன் பட்டம் வென்றார். 58 தொழில்முறை போட்டிகளில் பங்கேற்றுள்ள மைக் டைசன் 50 போட்டிகளில் வெற்றி பெற்றார். தற்போது 15 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் களமிறங்கும் மைக் டைசன், ரோய் ஜோன்ஸ் ஜூனியரை சந்திக்கிறார். ரோய் ஜோன்ஸ் ஜூனியருக்கு 51 வயதாகிறது. இவர் கடந்த 2018ஆம் ஆண்டு குத்துச்சண்டையிலிருந்து ஓய்வுபெற்றார்.

கலிபோர்னியாவில் கார்சன் நகரிலுள்ள டிக்னிட்டி ஹெல்த் ஸ்போர்ட்ஸ் பார்க் மைதானத்தில் இந்தப் போட்டி நடைபெறுகிறது. ஓய்வுக்குப் பிறகு 15 வருடங்களின் பின்னர் மைக் டைசன் பங்கேற்கும் முதல் போட்டி இதுவென்பதால் குத்துச்சண்டை இரசிகர்களிடத்தில் பலத்த எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

# சொந்த மண்ணில் இறுதிப்போட்டியில் அபார வெற்றி..

# 30 ஆண்டுகளுக்குப் பின்னர் மகுடம் சூடியது லிவர்பூல்



இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் இங்லீஷ் பிரிமியர் லீக் காற்பந்து தொடரில் அசத்திய லிவர்பூல் கழகம் கிண்ணம் வென்று சாதனை



படைத்தது. ஏற்கனவே சம்பியன் பட்டத்தை உறுதிசெய்த லிவர்பூல் கழகம் சொந்த மண்ணில் தனது இறுதி லீக் போட்டியில் வெள்ளிக்கிழமை செல்சி அணியை எதிர்கொண்டது.

இதில் அபாரமாக ஆடிய லிவர்பூல் 5-3 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. 37 போட்டிகளில் விளையாடிய லிவர்பூல் கழகம் 31 வெற்றி, 3 சமநிலை, 3 தோல்வி என 96 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பெற்றது. இதனையடுத்து லிவர்பூல் கழகம் சம்பியனாக அறிவிக்கப்பட்டது.

இது லிவர்பூல் அணி கைப்பற்றிய 19ஆவது கிண்ணமாகும். அதிக முறை பிரிமியர் லீக் கிண்ணத்தை கைப்பற்றிய கழகங்களுக்கான பட்டியலில் லிவர்பூல் கழகம் இரண்டாவது இடத்தில் நீடிக்கிறது. முதலிடத்தில் 20 கிண்ணங்களை கைப்பற்றிய மென்செஸ்டர் யுனைடெட் கழகம் காணப்படுகிறது.

மேலும், பிரிமியர் லீக் வரலாற்றில் லிவர்பூல் கழகம் 30 ஆண்டுகளுக்குப் பின்னர் கிண்ணத்தை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இறுதியாக 1989-90களில் நடைபெற்ற தொடரிலேயே சம்பியன் பட்டம் வென்றிருந்தது. இதேவேளை, கடந்த ஆண்டு ஐரோப்பிய சுப்பர் லீக் மற்றும் 'பிபா' கிளப் உலகக் கிண்ணத்தில் லிவர்பூல் சம்பியன் பட்டம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொக்கெட் பேனா

## நீதிபதிகள் மக்களே

மக்கள் நீதிமன்றம் ஒன்று உருவாக்கப்படவேண்டும். அதில் மக்கள் நீதிபதிகளாக இருக்கவேண்டும். உண்மையான பிரஜைகள் யாரும் இதை மறுக்கமாட்டார்கள். அவ்வாறானதொரு நீதிமன்றம் ஏன் அவசியம்? அவ்வாறானதொரு கட்டமைப்பின் தேவை என்ன? திருட்டை ஒழிக்க இதுவே வழி. பொதுவாக நீதிமன்றங்களுக்கு சான்று கட்டாயமானது. அதனடிப்படையிலேயே தீர்ப்புகளும் தண்டனைகளும் வழங்கப்படுகின்றன. எம்மில் பலருக்கும் ஒரு கேள்வி உண்டு. நம் கண்ணறிய பாரியளவில் கொள்ளையடித்த கொள்ளைக்காரர்களுக்குத் தண்டனை வழங்கப்படுவதே இல்லை. இது என்ன அநியாயம் என்றும் அடிக்கடி நாம் புலம்புவதுண்டு. ஏன் தற்போதுள்ள குற்றவியல் சட்டம் அமுல்படுத்தப்படுவதில்லையா? அவை அமுல்படுத்தப்பட்டாலும் அதிகாரம் படைத்த அரசியல்வாதிகள் குற்றம் செய்திருந்தால் அவர்களுக்கு தண்டனை வழங்கப்படுவது அரிதாகவே உள்ளது.

அப்படியானால், எம்மால் வேடிக்கை பார்ப்பதைத் தவிர வேறுவழியில்லையா? நான் நினைக்கின்றேன், புதிய சட்டமொன்றை அமுல்படுத்தினால் நல்லதென்று. திருட்டு அல்லது கொள்ளை தொடர்பாக மக்கள் நீதிமன்றம் ஒன்று உருவாக்கப்படவேண்டும். அத்தோடு, அதிகாரத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் திருட்டையும் கொள்ளைகளையும் மக்கள் நீதிமன்றத்தில் விசாரிக்க அனுமதியளிக்கவேண்டும். அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொள்ளயடிக்க முடியுமா? அப்படியான வாய்ப்புகள் உள்ளனவா? காணிக் கொள்ளை பற்றி நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்? தண்ணீர் கொள்ளை, மருந்து கொள்ளை, பஸ் டிக்கட் கொள்ளை, பயிர்களின் விதை கொள்ளை இவை அனைத்தும் திருடுவதற்கான அடிப்படைகளாக அடையாளம் கண்டு அதனூடாக பலவருடங்களாக ருசிகண்டு வருகின்றனர். போதைப்பொருள் விற்பனையாளர்களை ஊக்குவித்து அதனூடாக கிடைக்கும் பணம், சொத்துக்குவிப்பு என்பவையும் கொள்ளைகளே. இவ்வாறான கொள்ளைகளையும் திருட்டுவகைகளையும் அடுக்கிக்கொண்டே போகலாம்.

தினம் தினம் இவற்றைக் காணும் நானும் நீங்களும் கண்டும் காணாததுபோலவே இருக்கின்றோம். காரணம், சட்ட ரீதியான பொறிமுறைகளில் எமக்கு நம்பிக்கை இருப்பதில்லை. நாளுக்குநாள் அமைச்சர்களினதும், அரச அலுவலர்களினதும் கைவண்ணம் நடந்தவண்ணமே உள்ளன. நாட்டில் ஒவ்வொரு துறைக்கும் பல சட்டங்கள் இருந்தும் இவர்கள் செய்துவரும் திருட்டையும் கொள்ளையையும் எம்மால் நிரூபிக்க முடிவதில்லையே. ஏனென்றால், சான்று சாட்சியின்றி திறமையாக களவுசெய்யும் கைதேர்ந்த கள்வர்கள் இவர்கள். உண்மையில் சாட்சி இருந்தால் குற்றவியல் சட்டத்தின் வாசகங்களுக்கமைய கடுமையான தண்டனை வழங்கமுடியும். சில வழக்குப் பதிவுகளில் தெளிவின்மை, அதிகாரிகளின் பொறுப்பற்ற தன்மை போன்ற காரணிகளே மகா திருடர்கள், தலைவர்களாக முடிசூடியுள்ளமைக்கான காரணம். இன்று சட்டம் சரியான முறையில் அனைவருக்கும் சமமாக அமுல்படுத்தப்படாமையால் திருடர்கள் இராஜவாழ்க்கையையும் சுகபோகங்களையும் அனுபவித்து வருகின்றனர்.

காரணம், சில அதிகாரிகளின் கவனமின்மை, அரசியல் அழுத்தம் மற்றும் திருடியதற்கான சாட்சிகள் சரியாகக் கிடைப்பதில்லை. ஏன் இப்படியென்று கேட்டால், பதில் இவ்வாறு கிடைக்கும். சிலநேரங்களில் குற்றத்துடன் தொடர்புடைய சாட்சிகள் தானாகவே காணாமல்போகின்றன. அப்படியில்லையென்றால் அவை தானாக ஒளிந்துகொள்கின்றதெனவும் சிலநேரங்களில் சாட்சிகள் காணாமலாக்கப்படுகின்றன என்றும் சர்வசாதாரணமாக பதில் வழங்கப்படுகின்றன. இதனால் ஏற்படும் பாதகம் பொதுமக்களையே வந்து சேர்கின்றது. அவ்வாறு பாதிப்புக்குள்ளான நியாயம் தேடும் சிலர் தம் பணத்தை சட்டத்தரணிகளுக்கும், தொடர் வழக்குகளுக்காகவும் செலவிடுகின்றனர். நீதிப்பொறிமுறையின் தாமதம் காரணமாகவும் களவை நிரூபிக்க முடியாதுள்ளது. ஆகவேதான் மக்கள் நீதிமன்றம் ஒன்றின் அவசியத்தை உணர்ந்தேன்.

மக்கள் நீதிமன்றத்திற்கு இடம், கட்டிடம் மற்றும் சாட்சி சான்று தேடி அலையவேண்டியதில்லை. கீழ்க்காணும் விடயங்களை சாட்சியாகக்கொண்டால், நடைமுறையில் சுதந்திரமாக சுற்றித்திரியும் பல திருடர்களையும் கொள்ளையர்களையும் கையும் களவுமாக பிடிக்கமுடியும். அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், அரச அலுவலர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் குறுகிய காலத்தில் சொகுசு வாழ்க்கையை அனுபவிப்பவர்களாக இருக்கலாம். அத்துடன், அவர்கள் பெரிய வியாபாரங்கள் ஆரம்பித்தவர்களாக இருக்கலாம். சிலநேரங்களில் குறிப்பிட்ட நபர்களது கால் பெருவிரலை தன்னால் பார்க்கமுடியாத அளவில் குறுகிய காலத்தில் உடல் பெருத்துப்போய் இருக்கலாம். நவீன அதிசொகுசு பொருட்களைப் பயன்படுத்தல், தமது பிள்ளைகளை கொழும்பிலுள்ள வசதியான பாடசாலைகளில் அல்லது சர்வதேச பாடசாலைகளுக்கு அனுப்பலாம், கல்வி கற்காது பதவி, பட்டம் பெறலாம், அதிசொகுசு வாகனத்தில் பெண்களுடன் வீதி விதிகளையெல்லாம் மீறி அதிவேகமாக வாகனத்தைச் செலுத்தல் ஆகியன மக்கள் நீதிமன்றத்திற்கான தெளிவான சான்றாகவும் சாட்சியாகவும் அமைகின்றன. இந்த சொகுசு வாழ்க்கை எப்படி வந்தது என்பதை ஆராய்ந்தால் பல கேள்விகளுக்குப் பதில் கிடைக்கப்படுவதுடன், களவு, கொள்ளைகளுக்கான மிகத் தரமான சான்று சாட்சிகளையும் கைப்பற்ற முடியும்.

திருட்டைக் கண்டவுடன் அந்த இடத்திலே மக்கள் நீதிமன்றம் தாபிக்கப்படவேண்டும், அதில் மக்கள் நீதிபதிகளாக இருக்கவேண்டுமென்பது மக்களின் விருப்பம். எனினும், அவ்வாறான நீதிமன்றத்தை நிச்சயம் நம் தேசத்தில் எதிர்பார்க்க முடியாது. பொதுவாக நானோ நீங்களோ கடனுடன் கடன் வாங்கி சொத்தொன்றை வாங்கிய இரண்டு மாதத்திற்குள் வருமான வரி கடிதம் நம்வீட்டு கதவைத் தட்டும். ஒன்றோடொன்று தொடர்புடைய மிகச் சிறந்த அரச கட்டமைப்புகள் இருந்தும் மகா திருடர்களுக்கு மட்டும் ஏன் இச்சட்டங்கள் பிரயோகிக்கப்படுவதில்லை? என் பார்வையில் திருடன் ஒருகாலமும் திருடனைக் காட்டிக்கொடுக்கவும், கைதுசெய்து தண்டனை வழங்கவும் மாட்டான். நாட்டின் திருட்டை ஒழிப்பது காவல்துறையின் அல்லது சட்டத்துறையின் பொறுப்பு என்ற எண்ணம் எம்மில் மாறும்வரை இவ்வாறான திருடர்களும் கொள்ளைக்காரர்களும் இருந்துகொண்டேதான் இருப்பர். நம்மில் பலர் வெறும் பார்வையாளர்களாகவே உள்ளனர். உண்மையான பிரஜை என்போர் நீதிக்காகவும் அநீதிக்கு எதிராகவும் குரல் கொடுப்பவர். மக்களெல்லாம் நீதிபதிகளாக மாறவேண்டும் அதில் மக்களே பெரும் சாட்சிகளாக இருக்கவேண்டும்.

# அப்பத்தா...

நக்கல் நையாண்டி: என்ன அப்பத்தா எப்படி சுகம்? நல்லா இருக்கீங்களா?

அப்பத்தா: நல்ல சுகம், நல்ல சுகம் நையாண்டி. நீ எப்படி சுகம். எலக்சன் எல்லாம் எப்படிய்யா போவுது?

நை: நல்லாவே போகுது அப்பத்தா. நாங்க நினைச்சதை விட நல்லாவே போகுது.

அப்: சந்தோஷம் சந்தோஷம். என்ன நடக்கிறது என்ன விஷேசம்.

நை: விஷேசம்தான். எலக்சன் நெருங்கிடுச்சு. இன்னும் பத்து நாள்தான் இருக்கு. அதுதான் விஷேசம்.

அப்: இந்த முறை ஓட்டு போடுறவங்க எண்ணிக்கை ரொம்ப குறையும்போல இருக்கே. இந்த கொரோனா வேற வந்திருக்கு.

நை: அப்படி ஒரு வித்தியாசம் தெரியல அப்பத்தா. எல்லாமே சுகாதார விதிமுறைகள்படிதான் நடக்குது.

அப்: ஒவ்வொரு தேர்தல் மீட்டிங்லயும் இருக்குற ஜனத்த பார்த்தா சுகாதார விதிமுறைகள்படிதான் நடக்குதானு ஒரு சந்தேகம்தான். சுகாதார விதிமுறைகள்படி நடந்தால் சந்தோஷம்தான். இல்லையினா மீண்டும் நாடு லொக்டவுன் ஆயிருமே.

நை: அப்படி எதுவும் நடக்காது அப்பத்தா. நம்ம ஜனாதிபதியோட தலைமைத்துவம் கொரோனாவை சிறந்த முறையில் கட்டுப்படுத்தும்.

அப்: நீங்க இப்ப இப்படிதான் சொல்லுவீங்க. ஏன்னா எலக்சன் நடக்கணுமே.

நை: அப்பத்தா இது ஜனநாயக நாடு. ஜனநாயக முறைப்படி எப்பவோ எலக்சன் நடந்துருக்கணும். ஆனா இந்த கொரோனா தொற்றாலதான் கொஞ்சம் தள்ளிப் போச்சு. இப்படியே நாட்களை நகர்த்த முடியாதே. நாட்டுக்கு நல்லதொரு அரசாங்கம் அமையணும். மக்கள் சேவகர்கள் நாடாளுமன்றத்துல அங்கம் வகிக்கணும். நாம்தான் அவங்களை தெரிவுசெய்யணும்.

அப்: என்னய்யா சொன்ன. மக்கள் சேவகர்களா?

நை: ஆமா அப்பத்தா. அரசியல் யாப்பு திருத்தச்சட்டங்களை மாற்றி அமைக்கணும். நாட்டு மக்கள் நல்லா இருக்கணும்னா எலக்சன் நடக்கத்தானே வேணும். அதுவும் 2/3 பெரும்பான்மை பலத்தோடு அரசாங்கத்த அமைக்கணும்.

அப்: அதெப்படி இவ்வளவு உறுதியா சொல்ற?

நை: அப்பத்தா, கடந்த முறை என்ன நடந்துச்சுனு தெரியும்தானே?

அப்: என்ன நடந்துச்சு? கடந்த நான்கரை வருசத்துல ஜனாதிபதி ஒரு பக்கமும் அரசாங்கம் ஒரு பக்கமும் இருந்தாங்க. ரெண்டு பேருமே நாட்டுக்கு சொல்லிக்கொள்ளும் அளவு பெருசா ஒண்ணுமே செய்யல. இவரு செய்றது அவருக்கு புடிக்கல. அவரு செய்றது இவருக்கு புடிக்கல. கடைசியில எல்லாமே அச்சாறு போலாகிடுச்சு.

அப்: அதுனா உண்மைதான்.

நை: இந்த முறையாச்சும் நம்ம தமிழ் பேசும் சிறுபான்மை மக்கள் சிந்தித்து வாக்களிக்கணும். அப்போதுதான் நம்ம சமூகத்தோட உரிமைகளை வென்றெடுக்க முடியும்.

அப்: பாப்போம் பாப்போம். இந்த அரசாங்கமாவது நம்ம ஜனங்களுக்கு ஏதாவது விடிவுகாலத்தை ஏற்படுத்திக்கொடுப்பாங்கலானு.

நை: நிச்சயமாக நடக்கும் அப்பத்தா. நல்ல பல திட்டங்களை முன்னெடுப்பாங்க.

அப்: நாடு நல்லாயிருந்தா நாட்டோட குடிகள் எல்லோருக்கும் சந்தோசம்தான் நையாண்டி.

நை: நாடு நல்லா இருக்கணும். நம்ம ஜனங்களும் நல்லா இருக்கணும்னா இந்த முறையாவது சிந்தித்து செயற்படுவோம். பரம்பரை பரம்பரையாக இந்த கட்சிக்குதான் ஓட்டு போட்டேனு மீண்டும் மீண்டும் நாட்டை பாதாள கிணத்துக்குள்ள தள்ளிவிட்டிடாம இந்த முறையாவது ஒழுங்கான ஒரு நாடாளுமன்றத்தை தெரிவுசெய்வோம்.

அப்: அதுவும் சரிதான். நம்ம சிந்தன செயற்பட வேண்டிய காலம்தான் இது. நல்லதே நடக்கட்டும் நையாண்டி.

நை: சரி அப்பத்தா. எனக்கும் கொஞ்சம் தேர்தல் வேலை கிடக்கு. பிறகு சந்திப்போமே...

**ஏ.ஜே.ராஜ்**

# காட்டு ஆச்சரியங்கள்!

2006 இல் "அப்போகலிப்டோ" (Apocalypto) என்கிற ஆங்கில திரைப்படத்தில், படத்தின் நாயகன் ஒரு கும்பலிடமிருந்து தப்பித்து ஓர் அடர் வனத்திற்குள் ஓட அவரை எதிரிகளின் கும்பல் துரத்திக்கொண்டே போகின்றது.

எதிரிகளை வீழ்த்த, கதாநாயகன் காட்டிலுள்ள ஒரு தவளையைப் பிடிப்பார். சிறு ஈட்டிபோல இருக்கும் நான்கைந்து மர முட்களைத் தவளையின் முதுகில் குத்தி எடுத்து வைத்துக்கொள்வார். மூங்கில் குச்சியைப் பயன்படுத்தி அந்த முள்ளை எதிரியின் உடலில் செலுத்துவார்.

எதிரி இறந்துவிடுவதாகக் காட்சி அமைக்கப்பட்டிருக்கும். அந்த முள்ளிலிருந்தது தவளையின் விஷம். அந்தத் தவளையின் பெயர் விஷ டார்ட் தவளை (Poison Dart Frog) இது திரைப்படக் காட்சிதானே என்று அலட்சியப்படுத்திவிடாதீர்கள்.

நிஜமே அதுதான்! பாம்பைக் கண்டு மருளுகிறோம். ஆனால், சிறிய தவளைகள் அவற்றைவிடப் பொல்லாதவை. ஒரு கிராம் விஷம் பத்துப் பேரைக் கொல்லும். நம்ப முடியாமல் இருக்கிறதா? ஒரு குண்டூசியின் தலை அளவு விடம் ஒருவரைக் கொல்லப் போதுமானது. பயங்கரந்தான்.



கறுப்பு, சிவப்பு, மஞ்சள் பச்சை, தோடம்பழ நிறம், வெள்ளி நிறம், நீலம் எனப் பல வண்ணங்களில் காணப்படுவதால் மழைக் காடுகளின் ஆபரணம் என இவ்வகைத் தவளைகள் அழைக்கப்படுகின்றன. பார்க்க அழகாக இருக்கிறதென்று தொட்டுவிட முடியாது.



காரணம், அவற்றின் முதுகுப் பகுதியில் வியர்வை போன்ற விஷம் ஒன்றை அவை எப்போதும் வைத்திருக்கின்றன. உலகில் இருக்கிற தவளை இனத்தில் அதி தீவிர விஷம் கொண்ட தவளை வகை கொலம்பியாவின் அடர்ந்த ஈர நிலக்காடுகளில் வசிக்கும் இவைதாம். மஞ்சள் டார்ட் தவளையின் ஒரு கிராம் விஷம் 10 மனிதர்களை கொல்லக்கூடியது. தவளை தனக்கு ஆபத்து என்று உணர்ந்தால், தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத் தோலிலிருந்து விஷத்தை வெளியேற்றுகிறது.

'அல்கலாய்ட்' என்ற விஷம் தவளையின் தோல் முழுவதும் பரவியிருக்கிறது. இந்த விஷம் நரம்பு மண்டலத்தின் செயல்களை முழுமையாகச் செயலிழக்கச் செய்துவிடும். கடைசியில் உயிருக்கே உலை வைத்துவிடும். உள்ளூர் பழங்குடி மக்கள் இதன் நஞ்சைச் சேகரித்து வேட்டைக்குப் பயன்படுத்துகின்றனர். ஓராண்டு வரை விஷத்தைச் சேமித்து வைத்திருப்பார்கள்.

# ஊர்வலம்

# ஸ்ரீபுரம் தங்கக்கோயில்

உலகப் பிரசித்திபெற்ற ஸ்ரீபுரம் தங்கக்கோயில் இந்தியாவில் வேலூர் நகரத்தில் மாலைக்கொடி எனும் இடத்தில் அமைந்துள்ளது. மஹாலட்சுமிக்காக எழுப்பப்பட்டிருக்கும் இந்தக் கோயில் முழுதும் தங்கமுலாம் பூசப்பட்டதாக காட்சியளிக்கிறது.

### தங்கக் கோயிலின் சிறப்பம்சம்

நட்சத்திர வடிவில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் கோயில் முழுவதும் தங்க நிறத்தில் ஜொலிக்க, திருப்பதி திருமலை தேவஸ்தானத்திலிருந்து வரவழைக்கப்பட்ட கொல்லர்கள் மூலம் கோயிலின் மைய கோபுரம் தங்கத்தால் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோயிலை கட்ட 600 கோடி ரூபா செலவானதாக சொல்லப் படுகிறது. 1,500 கிலோ தங்கம் பயன்படுத்தப்பட்டது என்றும் 55,000 சதுர அடி பரப்பளவுக்கு தங்கக்கோயில் கட்டப்பட்டுள்ளது என்றும் சொல்லப்படுகிறது. தங்கக்கோயிலை சுற்றி 10 அடி அகலத்திற்கு தண்ணீர் நிரப்பப்பட்டுள்ளது. கோயிலுக்குள் நுழைந்தவுடன் ஒரு தனி மண்டபமும், அதன் எதிரே செயற்கை நீர் ஊற்றுக்களும் உள்ளன. மண்டபத்தின் பின்னால் மனிதனின் 18 வகையான குணங்களைத் தாண்டி இறைவனிடம் செல்வதை உணர்த்தும் வகை யில் 18 நுழைவாயில்கள் அமைக்கப் பட்டுள்ளன.

ஸ்ரீசக்கரத்திலுள்ள நட்சத்திர அமைப்பில் இந்த லட்சுமிநாராயணி கோயில் உள்ளது. அந்த நட்சத் திரத்தின் நடுவில் வட்ட வடிவில் கோயில் உள்ளது. மேலேயிருந்து கோயிலை பார்த்தால் ஸ்ரீசக்கரம் போன்றே தெரியும்படி கோயிலை அமைத்துள்ளனர்.

இந்த அம்மன் எதிரே 27 அடி உயரத்தில் ஐம்பொன்னாலான 10 அடுக்குகொண்ட ஆயிரம் திரிகள் ஏற்றக்கூடிய விளக்கு உள்ளது. கோயிலை சுற்றிலும் புல்வெளியும், அதன் நடுவே சுதை யாலான துர்க்கையும், லட்சுமியும், சரஸ்வதியும், மாரியம்மன் சிலை களும் அமைக்கப்பட்டுள்ளன. கோயிலுக் குள்ளே செயற்கையான மலைகளும், குளங்களும், நீர்வீழ்ச்சிகளும் அழகாக அமைக்கப்பட்டுள்ளன.

நவீன விளக்குகள், பழங்கால மாட கல் விளக்குகள் அமைக்கப் பட்டுள்ளன. இவை இரவை பகல் போல மாற்றுகின்றன. கோயிலுக்குள்ளே ஏராளமான மரங்கள் பச்சைப்பசேலென அருமையாக காட்சியளிக்கின்றன.

கோயிலுக்குள் பக்தர்கள் நடந்து செல்லும் வழியெங்கும் சிவப்பு கம்பளம் விரிக்கப்பட்டுள்ளது.

கோயிலில் நுழைந்து, வெளியே வரும் வரை உள்ள பகுதி முழுவதும் இயற்கை எழில் சூழ, மிகவும் அமைதியாக அமைந்துள்ளது. இந்தக் கோயிலில் உலகின் மிகப்பெரிய வீணையும், 10,008 திருவிளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. இது ஆசியாவிலேயே மிகப்பெரிய பொற் கோயிலாகும். பாதுகாப்பு மற்றும் பராமரிப்புக்காக கைப்பேசி, கெமரா மற்றும் ஏனைய பொதிகளை யும் வாசலிலேயே ஒப்படைத்துவிட்டுச் செல்ல வேண்டும். திருப்பதிக்கு லட்டு போல் இங்கும் ஓர் இலவச பிரசாதம் தருகின்றனர். சற்று மைசூர் பாகு போல் உள்ளது.

### தரிசன நேரம்

காலை 7 மணிமுதல் இரவு 8 மணிவரை தொடர்ச்சியாக கோயில் திறந்திருக்கும்.

### திருவிழாக்கள்

பௌர்ணமியன்று பூஜைகள், வருடப்பிறப்பு விழா, ஸ்ரீசக்தி அம்மாள் பிறந்தநாள் விழா, சரஸ்வதி யாகம், தமிழ்ப் புத்தாண்டு விழா, மே 8இல் சக்தி அம்மாள் ஞானம் பெற்ற தின விழா, வரலட்சுமி பூஜை, ஸ்ரீபுரம் ஆண்டு விழா, நவராத்திரி விழா, தீபாவளி சிறப்பு வழிபாடு முதலியன கொண்டாடப்படுகிறது.



**எழுத்தாளர்களே! 'தமிழன்' பத்திரிகையின் ஊர்வலம் பக்கத்துக்கு உங்கள் ஊர்களைப் பற்றியதான சுவாரஸ்யமான தகவல்களை ஒரு பத்தியாக எழுதி எங்களோடு பகிர்ந்துகொள்ள உங்களுக்கும் களம் அமைத்துக் கொடுக்கிறான் 'தமிழன்'. நீங்கள் அனுப்பும் பத்தி 300 - 400 சொற்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். உங்களது பத்தியை தட்டச்சு (டைப்) செய்து அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி : thamilanweekly@gmail.com மேலதிக தொடர்புகளுக்கு : 0115886187**

# நறுக்கென்று நாலு சொல்...

தமிழ்மணி தேசத்தின் கண் (மானா மக்கீன்)

## கழுத்தறுப்பு கால்டுவல் பாதிரியாருக்கும்!

முதுகில் குத்துவதும் கழுத்தறுப்புச் செய்வதும் நம்மவருக்கு கை வந்த கலைகள்

இருநூற்றாறு [206] அகவைப் பூர்த்தியாளர் அயர்லாந்து பாதிரியார் கிராபோர்ட் கால்டுவல் சுவாமியார் தமிழ்நாட்டில் வாழ்ந்து, தமிழின் உயர்வை வெளிச்சமிட பதினைந்து ஆண்டுகள் உழைத்தபோது நடந்தது. அவருக்கும்!

"திராவிட மொழிக் குடும்பத்தின் மூத்த மொழி தமிழே. அதுதான் அனைத்து திராவிட மொழிகளுக்கும் தாய்" என அப்பெரியார் "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்னும் ஆய்வுநூலில் ஆதாரங்களுடன் கூறியிருக்கிறார்.

அதை அவர் குறிப்பிட முன்பு எந்த தமிழ் அறிஞராலும் எடுத்துக்காட்ட இயலவில்லை. அவர் பதினெட்டு மொழிப் புலமை கொண்டிருந்ததால் சாத்தியமாயிற்று.

எவ்வாறாயினும், அக்கால ஆங்கில அரசின் அடிவருடிகளாக, உயர் பதவிகளிலிருந்த தமிழர் சிலர்; "ஆய்வு நூல் வெளியானால் தமிழுக்கு தனிப் புகழ் கிடைத்து விடும். அதற்கு இடம் வழங்கி விடாதீர்கள்" எனப் பெரும் தமிழ்த் தொண்டு ஒன்றை ஆங்கிலேயப் பெரிய இடங்களில் செய்தனர்.

அதனால் அவர் வாழ்ந்த வரைக்கும் இது வெளி வர முடியாமல் ஓர் எழுதப்படாத தடை விதிக்கப்பட்டது. அப்பெரியார் 1891ல் மறைந்து 102 ஆண்டுகளுக்குப் பிறகு [1913] கையெழுத்துப் படிகளைத் தேடிக் கண்டுபிடித்து வெளியிட்டார்கள்.

## தண்ணி அடிங்க வெறும் வயித்துல

பெரிசா எதுவும் நினைச்சிடாதீங்க! நறுக்குன்னு நான் சொல்ல வர்றது பச்சைத் தண்ணிய! உடலுக்கு மிகவும் இன்றியமையாதது, தண்ணீர். வெறும் வயிற்றில் குடிப்பதால் உடலின் எதிர்ப்பு மண்டலமானது வலுவடைந்து நோய்கள் தாக்காதவாறு பாதுகாக்கும். கிடைக்கும் நன்மையில் முதன்மையானது குடல் சுத்தம்.

தண்ணீர் குடித்ததும் இயற்கைக் கடமையைச் செய்ய பணிக்கப்படுவீர்கள். இதனால் உடலிலுள்ள கழிவுகள் முற்றிலும் வெளியேறிவிடும்.

மேலும், தண்ணீரானது உடலின் மூலைமுடுக்குகளில் தங்கியுள்ள நச்சுகளை சிறுநீர் மூலமாக வெளியேற்றிவிடும். இதனால் உடலானது நச்சுகளின்றி சுத்தமாக இருக்கும். பெரும்பாலானோருக்கு உடலில் நீர்ச்சத்து குறைவாக இருப்பதால் தலைவலி அடிக்கடி ஏற்படும். அத்தகையோர் காலையில் வெறும் வயிற்றில் தண்ணீர் குடித்து வந்தால் உடலில் நீர்ச்சத்தானது அதிகரித்து தலைவலியும் குறையும். காலையில் சாப்பிடாமல் அலுவலகத்திற்குச் செல்பவர்கள் தினமும் காலையில் வெறும் வயிற்றில் தண்ணீர் குடித்து வந்தால் அல்சர் ஏற்படாமல் தடுக்கலாம். அத்தோடு, தேவையற்ற கொழுப்புகளும் கரைந்து வெளியேறி உடல் எடை குறைய உதவியாக இருக்கும். குடலானது சுத்தமாக இல்லாவிட்டால் முகத்தில் பருக்கள் வர ஆரம்பிக்கும். இப்படி பருக்கள் வந்தால் முகத்தின் அழகு போயே போய் வீடும்.

தொடரும்...

# சீப்பு வாங்கலையோ?



முன்னொரு காலத்தில் சீனாவில் ஒரு பெரிய வியாபாரி தனக்குப் பின் வியாபாரத்தை தன் மூன்று மகன்களில் யார் வசம் ஒப்படைப்பது என்று தீர்மானிக்க அவர்களுக்கு ஒரு போட்டி வைத்தான். யார் அதிகளவு சீப்புகளை புத்த மடாலயத்திற்கு விற்கிறார்களோ அவன்தான் தன் வியாபாரத்தை நிர்வகிக்கத் தகுதியானவன் என்று அறிவித்தான். மொட்டை அடித்துள்ள பௌத்த பிக்குகளிடம் சீப்பு வியாபாரமா என்று மகன்கள் மூவரும் ஆரம்பத்தில் திகைத்தனர். ஒரு சீப்பைக் கூட விற்கமுடியாதே என்று நினைத்தனர். ஆனால், பின் மூவரும் முயற்சி எடுப்பது என்று முடிவுசெய்தனர்.

அவர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்த சில நாட்கள் அவகாசம் கொடுத்த அந்த வியாபாரி, அது முடிந்தவுடன் மகன்களை அழைத்து அவர்கள் எந்தளவு வெற்றிபெற்றிருக்கிறார்கள் என்று கேட்டான். ஒரு மகன், "நான் இரண்டு சீப்புகள் புத்த மடாலயத்திற்கு விற்றேன்" என்று சொன்னான், வியாபாரி கேட்டான். "எப்படி?" இந்த சீப்பை முதுகு சொறியவும் உபயோகிக்கலாம் என்று "பௌத்த பிக்குகளிடம் சொல்லிப் பார்த்தேன். இரண்டு பௌத்த பிக்குகளுக்கு அது சரியென்றுபட்டது. அதனால் அவர்கள் இருவரும் இரண்டு சீப்புகள் வாங்கினார்கள்" என்றான்.

இன்னொரு மகன், "நான் பத்து சீப்புகள் விற்பனைசெய்தேன்" என்றான். வியாபாரி ஆச்சரியத்துடன் கேட்டான். "எப்படி?" "வழியெல்லாம் காற்று அதிகமாக உள்ளதால் மலை மேல் உள்ள அந்தப் புத்த மடாலயத்திற்குப் போகிறவர்கள் தலைமுடியெல்லாம் பெரும்பாலும் கலைந்துவிடுகிறது. அப்படிக் கலைந்த தலைமுடியுடன் புத்தரை தரிசிக்க பக்தர்கள் செல்வது புத்தருக்குச் செய்யும் அவமரியாதையாகத் தோன்றுகிறது என்று புத்த மடாலயத்தில் சொன்னேன். ஒரு பெரிய கண்ணாடியும் சில சீப்புகளும் வைத்தால் அவர்கள் தங்கள் தலைமுடியைச் சரிசெய்து கொண்டு புத்தரை தரிசிக்கச் செல்வது நன்றாக இருக்கும் என்ற ஆலோசனையும் சொன்னேன். ஒப்புக்கொண்டு பத்து சீப்புகள் வாங்கினார்கள்" என்றான். வியாபாரி அந்த மகனைப் பாராட்டினான்.

மூன்றாவது மகன்,"நான் ஆயிரம் சீப்புகள் விற்பனை செய்தேன்" என்றான். வியாபாரி ஆச்சரியத்தின் எல்லைக்கே சென்றான். "எப்படி?" "அந்த புத்த மடாலயத்திற்கு ஏராளமானோர் வந்து பொருளுதவி செய்கிறார்கள். அவர்கள் உதவியை மெச்சி புத்தரின் ஆசிகள் அவர்களை வழிநடத்தும் வண்ணம் அவர்களுக்கு ஏதாவது ஒரு நினைவுப்பரிசு வழங்கினால் அது மேலும் பலர் புத்த மடாலயத்திற்கு உதவி செய்யத் தூண்ட உதவும்" என்றேன். அந்த மடாலயத் தலை




வர் என்ன நினைவுப் பரிசு தரலாம் என்று என்னைf; கேட்டார். நான் புத்தரின் வாசகங்களைப் பதித்துவைத்திருந்த சில சீப்புகளை நீட்டினேன். "அந்த சீப்புகளை தினமும் உபயோகிக்கும் பக்தர்களுக்கு அந்த உபதேசங்களைத் தினமும் காணும் வாய்ப்பும் கிடைக்கும். அந்த உபதேசங்கள் அவர்களைத் தினமும் வழிநடத்துபவையாகவும் இருக்கும் என்று தெரிவித்தேன். அது நல்ல யோசனை என்று நினைத்த மடாலயத் தலைவர் உடனடியாக அப்படி புத்தரின் வாசகங்கள் பதித்த ஆயிரம் சீப்புகள் வாங்க ஒப்புக் கொண்டார் - என்றான்.



அந்த வியாபாரி எந்த மகனிடம் தன் வியாபாரத்தை ஒப்படைத்தார் என்று சொல்ல வேண்டியதில்லை. மொட்டை பிக்குகளிடம் சீப்பு விற்கப்போவது கண்டிப்பாக ஆகாத வேலை என்று நினைப்பதுதான் பொதுவாக நாம் காணக்கூடிய மனோபாவம். சில சமயங்களில் நம்மைக் கொண்டுசேர்க்கும் சூழ்நிலையும் கிட்டத்தட்ட இதேபோலத்தான் இருக்கும். அதிலிருந்து மீள்வதற்கு வழியே இல்லை என்று முதலில் தோன்றும். ஆனால், அதை ஒப்புக்கொண்டு முடங்கி நிற்போமானால் நாம் தோல்வியை ஒப்புக்கொண்டுவிட்டோம் என்று பொருள்.

முயற்சிகளிலும் பலவகை உண்டு என்பதற்கு வியாபாரியின் மூன்று மகன்களின் முயற்சிகளே உதாரணம். ஒரு மகன் பௌத்த பிக்குகளுக்குத் தலை வார சீப்பு பயன்படாவிட்டால் வேறெதற்காவது பயன்படுமா என்று யோசித்ததன் பலனாக இரண்டு சீப்புகள் அவனால் விற்க முடிந்தது. பௌத்த பிக்குகளுக்கு சீப்பு பயன்படாமல் போனாலும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு சீப்பு பயன்படுமா என்று இன்னொரு மகன் யோசித்ததால் அந்த புத்த மடாலயத்தின் முன்புறம் சில சீப்புகள் வைத்து பக்தர்கள் தலைமுடியை முறையாக வாரிக்கொண்டு உள்ளே நுழைய உதவியாக பத்து சீப்புகள் விற்கமுடிந்தது. ஆனால், இந்த இரண்டு மகன்களுடைய முயற்சியாலும் தொடர்ந்து அந்த புத்த மடாலயத்திற்கு சீப்பு விற்க வழியில்லை. அவர்களுடைய விற்பனை ஒருமுறையோடு முடிந்துபோய்விட்டது. மூன்றாம் மகன் கூட இரண்டாம் மகன் போலவே பௌத்த பிக்குகளுக்குப் பயனில்லா விட்டாலும் அவர்களுடன் சம்பந்தப்படும் மற்றவர்களுக்குப் பயன்படுமல்லவா என்கிற சிந்தனையைத்தான் செய்தான். அந்த வெறும் சீப்பை புத்தரின் உபதேசங்களைச் செதுக்கி அதை அவர்கள் விரும்பும் வண்ணம் உயர்த்தி அதை நன்கொடை வழங்கும் பக்தர்களுக்கு புத்தரின் ஆசியாக மாற்றி விற்பனை செய்தான். அவனுடைய வித்தியாசமான சிந்தனை, அதற்காக அவன் எடுத்துக்கொண்ட உழைப்பு எல்லாம் மற்றவர்களை மிஞ்சும் வண்ணம் வெற்றி பெற்றது. மேலும், மற்ற இருவரைப் போல் இவனுடைய விற்பனை ஒரு முறையோடு முடிகிற விற்பனை அல்ல. புத்த மடாலயத்திற்கு நன்கொடைகள் தருகிறவர்கள் அதிகரிக்க அதிகரிக்க இவன் விற்பனையும் அதிகரிக்கும். எனவே, எந்தவொரு கடினமான சூழ்நிலையிலும் மனம் துவண்டு விடாதீர்கள். பார்வையை விரிவுபடுத்துங்கள். புதிய புதிய கோணங்களில் சிந்தியுங்கள்.

## கண்டுபிடியுங்கள்...



**கடந்த வார கண்டுபிடியுங்கள் பகுதிக்கான சரியான விடையை அனுப்பிய மாணவர்கள்...**

**என்.அப்ரின்**
அல்-முனீறா வித்தியாலயம், அட்டாளைச்சேனை.

**கே.ரெஷ்வின்**
யோர்க் சர்வதேச பாடசாலை, வத்தளை.

## சிந்தனைத்துளிகள்

★ சில சிறிய மாற்றங்களால் பெரிய விளைவுகளை ஏற்படுத்த முடியுமா என்று யோசியுங்கள்.

★ பொறுமையுடனும், நம்பிக்கையுடனும், துடிப்புடனும் முயன்றால் அந்தக் கடினமான சூழ்நிலையே நீங்கள் அடையப்போகும் அளப்பரிய வெற்றிகளுக்கு அஸ்திவாரமாக அமையக்கூடும்.

★ முடியாது என்று தோன்றும் ஆரம்ப அபிப்பிராயத்திற்கு அடிபணியாதீர்கள்.

★ வெறுங்கை என்பது மூடத்தனம், உன் விரல்கள் பத்தும் மூலதனம்.


★ வாழ்க்கை நாம் எத்தனை நாட்கள் வாழ்ந்தோம் என்பதைப் பொறுத்ததல்ல, எவ்வளவு உயர்வாக வாழ்கிறோம் என்பதைப் பொறுத்தது.

தமிழன் சிறுவர் உலா

## வியக்கவைக்கும் ஒட்டகச்சிவிங்கி

காட்டின் மிக உயர்ந்த இந்த மிருகமே ஓர் ஆச்சரியந்தான். கழுத்தைத் திருப்பாமல் எந்த விலங்காலும் மனிதனாலும் திரும்பிப் பார்க்கவே முடியாது. ஆனால், இந்த மிருகமோ தன் கண்களை பின்னால் திருப்பி, தனக்குப் பின்னால் நடப்பதை அறிந்துகொள்கின்றது. கழுத்து திருப்பப்படுவதில்லை. அக்காசியா ( h ) என்ற ஆபிரிக்க காடுகளுக்குரிய உயர்ந்த மரத்தின் இலைகளை இது விரும்பி உண்கின்றது. 3 அங்குல நீளமான முட்கள் கிளைகளில் துருத்திக்கொண்டிருக்க, தன் நீண்ட நாக்கால் 50 செ.மீ. நீளமான இந்த இலைகளை இந்த மிருகம் எப்படி உண்கின்றது என்பது வியப்பான விடயந்தான். அந்தளவுக்கு தடித்த நாக்கு! நாக்கின் நிறம் நீல வண்ணத்தில் இருக்கும். தழைகளை சுற்றிவளைத்து உண்ணவும், மூக்கைச் சுத்தப்படுத்தவும் இந்த நீளமான நாக்கு உதவுகின்றது.

காலின் நீளம் ஆறு அடி (182 செ.மீ.) குறுக்குவாட்டாக பாதத்தின் நீளம் ஒரு அடி (30 செ.மீ.) பின்னங்கால்களைவிட முன்னங்கால்கள் பத்து சதவிகிதம் நீளமானவை. எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடிக்குள்ளும் 15 அடிகள் (457 செ.மீ.) உள்ளடக்கம். ஒரு மணிநேரத்துக்கு 10 மைல் தூரத்தை ஒட்டகச்சிவிங்கிகளால் கடக்கமுடியும். மனிதர்களைப்போலவே 7 விலா எலும்புகளைக் கொண்டவை இந்த மிருகங்கள். இவை 4.3 மீற்றர் முதல் 5.7 மீற்றர் வரை (14.1 முதல் 18.7 அடி உயரம் வரை) வளரக்கூடியவை. இதனுடைய கழுத்தின் நீளம் ஆறு அடி. ஒரு வளர்ந்த மிருகத்தின் எடை சுமாராக 828 கிலோ முதல் 1,182 கிலோ வரை இருக்கும். இதயத்தின் எடை 10 கி.கிராம்.




இந்த மிருகத்தின் கர்ப்பகாலம் 14 முதல் 15 மாதங்களாகும். குட்டிகள் 1.8 மீற்றர் உயரமுடையவை என்பது பேராச்சரியம். இதில் விந்தை என்னவென்றால், நின்றபடி குட்டியை ஈன்று விடுகின்றன தாய் மிருகங் கள். பொத்தென தரையில் விழும் குட்டி. இது விழுந்த அதிர்ச்சியிலிருந்து மீள முன்பு, தாய் சிவிங்கி தன் கால்களால் குட்டியை எட்டி உதைக்க ஆரம்பிக்கும். இந்தத் தாய்க்கு நெஞ்சிலே ஈரம் இல்லையா என்று எங்கோ ஒரு குரல் கேட்கிறது. ஆனால், குட்டி தன்னைச் சுதாரித்துக்கொண்டு, சீக்கிரம் எழுந்துவிடவேண்டும் என்பதற்காகவே தாய் இப்படி உதைக்கின்றது. குட்டி சீக்கிரம் எழும்பவில்லை என்றால் காத்து நிற்கும். கழுதைப் புலிக்கோ, சிங்கத்திற்கோ உணவாகிவிடும். பிறந்து சில மணிநேரங்களில் குட்டிகள் ஓடக்கூடியவை.

சிவிங்கியின் உதை என்றால் சாதாரணமானதல்ல. இது முறையாக ஓங்கி உதைத்தால், காட்டுராஜாவான சிங்கமே உயிரிழக்கும். பெரும்பாலும் அதிகாலையிலே இலை குழைகளை, பழங்களை, பூக்களை, படரும் தாவரங்களை உண்ண விரும்பும் ஓர் ஒட்டகச் சிவிங்கி, தினமும் சுமாராக 30 கிலோ உணவை உட்கொள்கின்றது. ஒட்டகத்தைப்போன்றே இது அடிக்கடி நீர் அருந்தாத மிருகம். ஒரு வாரம் நீர் அருந்தாமல் தாக்குப் பிடிக்கும் வல்லமை இதற்குண்டு. ஆபிரிக்காவின் புல்வெளிகளில் அலைந்து திரியும் ஒட்டகச்சிவிங்கிகள் ஒரே இனத்தைச் சேர்ந்தவை அல்ல. அவை நான்கு இனங்களைச் சேர்ந்தவை என புதிய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ஒட்டகச்சிவிங்கியின் வாலிலுள்ள ரோமம் மனிதர்களின் தலைமுடியைவிட 10 மடங்கு அடர்த்தியானது. ஒட்டகச்சிவிங்கியின் தோலிலுள்ள திட்டுகள் நமது கைரேகைகளைப் போலவே இருக்கும். ஓர் ஒட்டகச்சிவிங்கியின் திட்டுகளும் இன்னொரு சிவிங்கியின் திட்டுகளும் ஒருபோதும் ஒன்றாக இருப்பதில்லை. ஒட்டகச்சிவிங்கிகளில் ஆண், பெண் இரண்டுக்கும் கொம்புகள் உள்ளன. ஆனால், பெண் ஒட்டகச்சிவிங்கிகளின் கொம்புகள் சிறியவை. இவற்றின் கொம்புகள் ரோமத்தால் போர்த்தப்பட்டிருக்கும். ஒட்டகச் சிவிங்கிகளுக்கு நான்கு வயிற்று அறைகள் உள்ளன. உணவைச் செரிமானம் செய்ய இந்தக் கூடுதல் வயிற்று அறைகள் உதவுகின்றன. சத்தமிட முடியாத மிருகம் இது என்பது உங்களுக்கு ஆச்சரியத்தைத் தரலாம். இதற்கென சொந்தக் குரல் இல்லை. குரல் நாண் ( c) இருந்தாலும் அவற்றால் சத்தம் போட்டு கத்தமுடியாது. ஒட்டகச்சிவிங்கிகள் தண்ணீர் பருகும் நேரம்தான் அபாயகரமானது. முன்கால்களை அகலப் பரப்பினால்தான் அவற்றால் கழுத்தைக் குனிய முடியும். கழுத்தைச் சாய்த்து நீரைப் பருகும்போது அவற்றால் தங்களைத் தாக்கவரும் விலங்குகளைப் பார்க்க முடியாது.

## தென்னை மரத்து இளநீரு...



தென்னை மரத்து இளநீரு - நல்ல
தேன்போல இனிக்கும் சுவைநீரு
என்றும் எங்கும் கிடைத்திடுமே - தினம்
ஏற்றுக் குடித்தால் நலம் தருமே!

பானத்தில் இளநீர் அரியவகை - எந்த
காலமும் நமக்கு நல்ல துணை
விலையோ ஒன்றும் அதிகமில்லை - இங்கு
இதுபோல் பானம் வேறு இல்லை!

இயற்கை தந்தது இளநீரு - நல்ல
இன்சுவை தந்திடும் இளநீரு
உடலின் வெப்பம் தணித்திடுமே - நம்
உள்ளம் தனிலே நிறைந்திடுமே!

கொத்துக் கொத்தாய் காய்த்திடுமே - நம்
அனைவரின் தாகம் தீர்த்திடுமே!
நாளும் குடிப்போம் இளநீரு - அதில்
ஆயுளும் நீளும் தினம்பாரு!



## நூல்களிலிருந்து...

**நல்வழி**

**சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்**
**நீதி வழுவா நெறிமுறையின் – மேதினியில்**
**இட்டார் பெரியார் இடாதார் இழிகுலத்தார்**
**பட்டாங்கில் உள்ளபடி.**

**விளக்கம்:**

**உண்மை நெறிப்படி கூறுவதாயின், உலகத்தில் பிறந்த மனிதர்களில் இரண்டு வகை ஜாதியினர்தான் உள்ளனர். ஒருவர் அடுத்தவருக்கு கொடுத்து உதவும் நல்ல குணம் படைத்த மேலோர். மற்றொருவர் தன்னிடம் உள்ளவற்றை அடுத்தவருக்கு கொடுத்து உதவாத கீழோர். மேலோர் கண்ட நீதிநெறி நூலில் சொல்லப்பட்ட விடயம் இதுதான். இதை நன்றாக உணர்ந்துகொள்.**

## "ஐந்து பெற்றால், அரசனும் ஆண்டிதான்"

ஆ அப்படியா?

**என்ற பழமொழியில் குறிப்பிட்ட ஐந்து என்பதை பலர், ஐந்து பெண்பிள்ளைகளை பெற்றால் அரசனிடம் உள்ள செல்வங்கள் முழுவதும் அழிந்து ஆண்டியாவார் என்று தவறாக பயன்படுத்துவார்கள்.**

**ஆனால், "ஐந்தும் பெற்றால், அரசனும் ஆண்டிதான்" என்பதில் ஐந்து என்று குறிப்பிடுவது ஆடம்பரமாக வாழும் தாய், பொறுப்பில்லா தகப்பன், ஒழுக்கம் தவறும் மனைவி, துரோகம் செய்யும் உடன்பிறப்புக்கள், பிடிவாதம் பிடிக்கும் பிள்ளை என்பனவாகும். இவை ஐந்தும் பெற்றால் அரசனும் ஆண்டியாவான் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவே உண்மையான அர்த்தமாகும்.**

உங்களது ஆக்கங்களையும், சிறார்களின் பிறந்த தின வாழ்த்துகளையும் (புகைப்படத்துடன்) பகிர்ந்துகொள்ள களம் அமைத்துத் தருகிறது 'தமிழன் பத்திரிகை. உங்களது விபரங்களுடன் எங்களுக்கு அனுப்பிவைக்கலாம்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
**இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு. 07**
**மின்னஞ்சல் முகவரி: thamilansiruvarula@yahoo.com**

# காரிகை களம்



# பூவே பூச்சூடவா

உலகம் முழுவதும் 38 ஆயிரம் கோடிக்கு மேல் பூ வகைகள் உள்ளன. ஆனால் ஆயிரம் கோடிப் பூக்கள் மட்டுமே தற்போதைய நடைமுறையில் உள்ளன. அதிலும் 500 கோடி பூக்களே மருத்துவத்துக்குப் பயன்படுத்தப்படுகின்றன. பெரும்பாலான பூக்கள் நறுமணம் தரும் மணமூட்டிகள் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

### பூக்களைச் சூடும் கால அளவு

**முல்லைப்பூ** - *18 மணி நேரம்*
**அல்லிப்பூ** - *3 நாட்கள் வரை*
**தாழம்பூ** - *5 நாட்கள் வரை*
**ரோஜாப்பூ** - *2 நாட்கள் வரை*
**மல்லிகைப்பூ** - *அரை நாள் மட்டும்*
**செண்பகப்பூ** - *15 நாள்கள் வரை*
**சந்தனப்பூ** - *1 நாட்கள் மட்டும்*

*மகிழம்பூ மற்றும் குருக்கத்திப் பூ – சாப்பிடும்போது மட்டும் சூடிக்கொள்ளலாம்.*

*மந்தாரைப்பூ, பாதிரிப்பூ, மாசிப்பூ – இந்தப் பூக்களின் வாசம் இருக்கும் வரை மட்டும் சூடிக்கொள்ளலாம்.*

### பூக்களின் பயன்கள்

**ரோஜாப்பூ** - *தலைச்சுற்றல், கண் நோய் போன்றவற்றைக் குணப்படுத்தும்.*
**மல்லிகைப்பூ** - *மனஅமைதிக்கு உதவும். கண்களுக்குக் குளிர்ச்சி தரும்.*
**செண்பகப்பூ** - *வாதத்தைக் குணப்படுத்தும். பார்வைத் திறனை மேம்படுத்தும்.*
**பாதிரிப்பூ** - *காது கோளாறுகளைக் குணப்படுத்தும். செரிமானச் சக்தியை மேம்படுத்தும். காய்ச்சல், கண் எரிச்சல் போன்றவற்றைச் சரிசெய்யும்.*
**செம்பருத்திப் பூ** - *தலைமுடி தொடர்பான பிரச்சினைகளை சரிசெய்யும். உடல் உஷ்ணத்தைக் குறைக்கும்.*
**மகிழம்பூ** - *தலை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்கும். பல் வலி, பல் சொத்தை உள்ளிட்ட பல் குறைபாடுகளை நீக்கும்.*
**வில்வப்பூ** - *சுவாசத்தைச் சீராக்கும். காச நோயைக் குணப்படுத்தும்.*
**சித்தகத்திப்பூ** - *தலைவலியைக் குறைக்கும். மூளை சுறுசுறுப்பாக இயங்க உதவும்.*
**தாழம்பூ** - *நறுமணம் வீசுவதோடு சீரான தூக்கத்துக்கு உதவும். உடல் சோர்வை நீக்கும்.*
**தாமரைப்பூ** - *தலை எரிச்சல், தலை சுற்றல் போன்றவற்றைச் சரிசெய்யும். மனஉளைச்சலை நீக்கி மன அமைதிக்கு வழிவகுக்கும். தூக்கமின்மையை நீக்கி, சீரான தூக்கத்தை ஊக்குவிக்கும்.*
**கனகாம்பரம்பூ** - *தலைவலி மற்றும் தலை பாரத்தைச் சரிசெய்யும்.*

*தாழம்பூ, மகிழம்பூ, சந்தனப்பூ, ரோஜாப்பூ செண்பகப்பூ போன்றவை வாதம், கபத்தைக் குறைக்கக்கூடியவை.*

### பூக்களைச் சூடும் முறை

*பூக்களைக் காதின் மேல் மற்றும் கீழ் நுனியின் இடைவெளியில் சூடவேண்டும். உச்சந்தலையிலோ, கழுத்துப் பகுதியிலோ பூக்கள் தொங்கும்படி சூடக்கூடாது. மணமுள்ள பூக்களை வாசனையில்லாத பூக்களுடன் சேர்த்துச் சூடக்கூடாது. அது கூந்தல் வளர்ச்சியைக் குறைக்கும்.*

*ஜாதி மல்லிகைப்பூ, செவ்வந்திப்பூ, குடசப்பாலைப்பூ, பாதிரிப்பூ, மகிழம்பூ, செண்பகப்பூ, சந்தனப்பூ, ரோஜாப்பூ போன்றவற்றைக் கனகாம்பரத்துடன் சேர்த்துச் சூடினால் மிகவும் நல்லது.*

*மந்தாரை, தாமரை, செவ்வரளி, கருங்குவளைப்பூ போன்றவற்றுடன் கற்பூரத்துடன் சேர்த்துச் சூடினால் மனம் அமைதிபெற உதவும்.*

*மல்லிகைப்பூவை குளிப்பதற்கு முன் சூடவேண்டும்.*

*முல்லைப்பூ, வில்வப்பூவை குளித்த பின்பு சூடலாம்.*

*உடலில் எண்ணெய் தேய்க்கும்போது தாழம்பூ சூடலாம்.*

### பூக்களைச் சூடுவதால் ஏற்படும் நன்மைகள்

*பூக்களில் உள்ள பிராண ஆற்றல், மூளைச் செல்களால் ஈர்க்கப்பட்டு, நாளமுள்ள மற்றும் நாளமில்லாச் சுரப்பிகளின் சீரான இயக்கத்துக்கு உதவுகிறது.*

*இந்தப் பிராண ஆற்றலானது மனஅழுத்தத்தைக் குறைத்து, மனஅமைதிக்கு உதவுகிறது.*

*தலையில் பூ வைப்பது, மனமாற்றத்துக்கு உதவும். ஒரு விடயத்தைப் பல கோணங்களில் பார்க்கும் தன்மையைக் கொடுக்கும்.*

*மனஅழுத்தத்தால் ஏற்படும் செல் இழப்பைத் தடுக்கிறது.*

*பூவின் மணமானது உடல் செல்களுக்குப் புத்துணர்வை அளிக்கிறது. மனமாற்றத்துக்கு உதவுகிறது. மனஅழுத்தத்தைக் குறைக்க உதவுகிறது. மகிழ்ச்சியை உண்டாக்குகிறது.*



# கூந்தல் பராமரிப்பு

சரியான பற்கள் கொண்ட சரியான சீப்பை பயன்படுத்துவதென்பது கூந்தல் பராமரிப்பில் மிக முக்கிய பங்கை வகிக்கிறது. தினம் ஒருமுறை தலை வாருவதிலிருந்து, நிமிடத்துக்கொருமுறை வாருவது வரை ஒவ்வொருவருக்கும் அதில் ஒவ்வொரு விருப்பம். தலை வாருவதில் சில விதிமுறைகள் உள்ளன.

- அகலமான பற்கள் கொண்ட சீப்பினால் கீழிருந்து மெதுவாக வாரிவிட வேண்டும்.
- கூந்தலை பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியாக வாரிவிடலாம். அழுக்கான சீப்பை உபயோகிக்கக்கூடாது.
- வாரம் ஒருமுறை உங்கள் சீப்பை சோப் கலந்த வெதுவெதுப்பான தண்ணீரில் கழுவி உபயோகியுங்கள்.
- சீப்பில் ஒரு பல் உடைந்தால்கூட அதை உடனே மாற்றுங்கள்.
- Back combing எனப்படுகிற தலைகீழ் தலைவாருதலைத் தவிருங்கள். அது கூந்தலின் ஆரோக்கியத்துக்கு நல்லதல்ல.
- மென்மையான பற்கள் கொண்ட சீப்பினால் வாருங்கள். இது போன்ற சீப்பு பொடுகுப் பிரச்சினை உள்ள கூந்தலுக்கும் நல்லது. எப்போதுமே கடினமான இறப்பர் அல்லது உலோகத்தினாலான சீப்பை உபயோகிக்காதீர்கள்.
- கூந்தலை அதிக அழுத்தத்துடனும் அடிக்கடியும் வாரவேண்டாம்.
- 6 முதல் 8 வாரங்களுக்கு ஒருமுறை கூந்தலை சிறிது வெட்டலாம்.
- உங்கள் கூந்தலுக்கு ஷெம்பு குளியல் எடுத்து, கண்டிஷனிங் செய்த பிறகு ஈரம் போக டவலால் துடையுங்கள். மென்மையான டவலால் கூந்தலை மிருதுவாக சுற்றித் துடைக்க வேண்டும். அழுத்தித் தேய்த்து அரக்கப் பரக்கத் துடைத்தால் கூந்தல் உடைந்து உதிரும். தலைக்குக் குளித்ததும், கூந்தல் சீக்கிரமே உடைந்துபோகும் நிலையில் மிக பலவீனமாக இருக்கும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
- கூடியவரையில் கூந்தலை உலர்த்த ஹேர் டிரையர் உபயோகிப்பதைத் தவிர்க்கவும். விரல்களால் கூந்தலைக் கோதிவிட்டு, சிக்குகளின்றி, பிரித்துவிட்டு, உலர்த்தவும்.
- எப்போதும் கூந்தலை சுத்தமாக வைத்திருங்கள். தினமும் 2 முறை கூந்தலை வாரிவிடுங்கள். அது மண்டைப் பகுதியின் இரத்த ஓட்டத்தைத் தூண்டிவிடும். தவிர, அது மண்டைப் பகுதியிலுள்ள இறந்த செல்களையும் அகற்றும்.
- கூந்தலை ஒருபோதும் இறுக்கமாகக் கட்டிக்கொள்ளாதீர்கள். அது கூந்தலின் வேர்க்கால்களை பலமிழக்கச் செய்து, உதிர்வுக்குக் காரணமாகிவிடும்.



# முருங்கைக்கீரையின் மகத்துவம்

அளவில் சிறிய குட்டிக்குட்டி முருங்கைக்கீரையில் மனித உடலுக்கு அவசியமான அத்தனை சத்துகளும் அடங்கியிருப்பதாக அனுபவபூர்வமாக நிரூபித்துள்ளார்கள். கீரைகளில் மரத்தில் முளைக்கும் ஒரே கீரை முருங்கை தான்.

மற்ற கீரைகள் எல்லாம் தரையில் வளரக்கூடியவை.

வருடத்தின் எல்லா நாட்களிலும் கிடைக்கக்கூடிய முருங்கைக்கீரையை வாரத்தில் மூன்றே நாட்கள் சமைத்து சாப்பிட்டுப் பாருங்கள். வாழ்க்கை முழுக்க ஆஸ்பத்திரிக்கு போகவேண்டிய அவசியமே வராது.

முருங்கை மரத்தின் இலைகள், பூக்கள், காய்கள், மரப்பட்டை என எல்லாமே மருத்துவக் குணங்கள் கொண்டவை.

முருங்கைக்கீரையின் சாறு இரத்த அழுத்தத்தை சரியான அளவில் வைத்திருக்கவும், மனப்பதற்றத்தைத் தணிக்கவும் வல்லதாம்.

சர்க்கரை நோயாளிகளுக்கு முருங்கையைப் போன்ற மாமருந்து வேறு இல்லை. மனித உடலுக்குத் தேவையான 20 அமினோ அமிலங்களில் 18 அமினோ அமிலங்கள் இந்தக் கீரையில் உள்ளன.

மனித உடலால் தயாரிக்கப்பட முடியாத எட்டு வகை அத்தியாவசிய அமினோ அமிலங்கள் அசைவ உணவுகளில் மட்டுமே கிடைக்கும். ஆனால், அந்த எட்டுவகை அமிலங்களையும் கொண்ட ஒரே சைவ உணவு முருங்கைக்கீரை.

ஒரு கைப்பிடி முருங்கைக்கீரையை ஒரு டீஸ்புன் நெய்யில் வதக்கி, மிளகு மற்றும் சீரகம் பொடித்துப்போட்டு, தினமும் காலையில் சூடான சாதத்தில் பிசைந்து சாப்பிட, ஹீமோகுளோபின் அளவு பல மடங்கு அதிகரிக்கும்.

எனவே, அதிகளவான பயன்களைக்கொண்ட இந்த மலிவான கீரையை பயன்படுத்தி பலன் பல பெறுவோம்.

- அனுஷா , தெஹிவளை

# ரவா பாயாசம்

**தேவையான பொருட்கள்**

ரவை மா – 250 கிராம்
ஏலக்காய் பொடி - 2 தேக்கரண்டி
நெய் - அரை தேக்கரண்டி
சர்க்கரை – 250 கிராம்
முந்திரி பருப்பு (உடைத்தது) - 8 அல்லது 10
உலர்ந்த திராட்சைப் பழங்கள் - 10 அல்லது 12
பால் - அரை கோப்பை
தண்ணீர் - 4 முதல் 5 கோப்பை




***செய்முறை:-***

ஒரு பாத்திரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். 2 நிமிடங்கள் பாத்திரம் சூடானதும் நெய்யை ஊற்றவும். நெய் உருகும் வரை காத்திருக்கவேண்டும். நெய் நன்கு காய்ந்ததும் அதில் முந்திரிப் பருப்பு, உலர்ந்த திராட்சைப் பழங்கள் போட்டு நன்றாக வறுத்துக்கொள்ளவும். வறுத்ததை எடுத்து ஒரு பாத்திரத்தில் வைத்துக்கொள்ளவும். இப்பொழுது அதே பாத்திரத்தில் ரவையை கொட்டி சில நிமிடங்கள் வறுக்கவும். கொஞ்சம் கொஞ்சமாக தண்ணீர் சேர்த்து கட்டியில்லாமல் கிளறிக்கொண்டே இருக்கவேண்டும். பிறகு அதில் பால் சேர்த்து கிளறிக்கொண்டே கட்டியாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மிதமான தீயில் 4 முதல் 5 நிமிடங்கள் சமைக்கவும். இப்பொழுது சர்க்கரையை சேர்த்து சர்க்கரை முழுமையாக கரையும் வரை காத்திருக்கவும். இப்பொழுது வறுத்து வைத்துள்ள முந்திரிப்பருப்பு, உலர்ந்த திராட்சைப் பழங்கள், ஏலக்காய் தூள் சேர்த்து நன்றாக கிளறவும். சில நிமிடங்கள் அப்படியே அடுப்பில் வைத்து இறக்கவும். சூடாக அல்லது ஆறிய பிறகு பரிமாறவும். சுவையான ரவா பாயாசம் தயார்.

# எந்த வடிவமான முகத்திற்கு எந்த வடிவ பொட்டு...



**சதுர முகம்:** இவர்கள் நீளமாக பொட்டுகளை வைக்கக்கூடாது. அகலம் அதிகமுள்ள பொட்டுகளை வைத்துக்கொள்ளலாம். இவர்கள் வைத்துக்கொள்ளும் பொட்டுகள் நீளமானதாகவும், அகலம் குறைந்ததாகவும் இருக்கக்கூடாது. உருண்டை மற்றும் முட்டை வடிவிலான பொட்டுகள் இவர்களுக்கு பொருத்தமாக இருக்கும்.

**வட்ட வடிவ முகம்:** இவர்கள் நீளமான பொட்டுகளை உபயோகிக்கவேண்டும். நீளமான பொட்டு இவர்களது உருண்டை முகத்தை சற்று நீளவாக்காக மாற்றியதுபோல் அழகுதரும். இவர்கள் நெற்றி குறுகலாக இருந்தால், புருவங்களுக்கு மத்தியில் பொட்டு வைக்கவேண்டும்.

**முக்கோண வடிவ முகம்:** இவர்களுக்கு அனேகமாக எல்லாவகைப் பொட்டுகளும் பொருந்தும். நெற்றி அகலமாக இருந்தால், நீளமான பொட்டுகளை பயன்படுத்த வேண்டும். முக்கோண வடிவிலான பொட்டுகளும் இவர்களுக்கு நன்றாக இருக்கும். அகலமான நெற்றியாக இருந்தால், புருவத்திலிருந்து ஒரு சென்டிமீற்றருக்கு மேல் பொட்டுவைக்க வேண்டும்.

**இதய வடிவ முகம்:** இவர்களுக்கு நீண்ட பொட்டுகள் நன்றாக இருக்கும். முகத்தின் வடிவம் மட்டுமன்றி, உடை, சரும நிறம் போன்றவைகளும் பொட்டுடன் சம்பந்தப்பட்டவைதான். அதனால் அவைகளுக்கும் பொருத்தம் ஏற்படும் விதத்தில் பொட்டு வைக்கவேண்டும். கோதுமை நிற சருமப் பெண்களுக்கு எல்லா நிற பொட்டுகளும் பொருத்தமாக இருக்கும்.



# ரசிகர்களுக்கு நன்றி கூறும் அனுஷ்கா

அனுஷ்கா சினிமாவில் அறிமுகமாகி 15 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், ரசிகர்களுக்கு நன்றி கூறியுள்ளார்.

தமிழ், தெலுங்குத் திரையுலகில் முன்னணியிலுள்ள சீனியர் ஹீரோயின்களில் அனுஷ்காவும் ஒருவர். 2005 ஆம் ஆண்டு ஜுலை 22 ஆம் திகதி தெலுங்கில் நாகார்ஜுனின் ஜோடியாக 'சுப்பர்' என்ற படத்தின் மூலம் சினிமாவில் அறிமுகமானார்.

அதன் பின் தமிழ், தெலுங்கு என இரு மொழிகளிலும் பல முன்னணி ஹீரோக்களுடன் பல வெற்றிப் படங்களில் நடித்துள்ளார். அவர் நடித்து வெளிவந்த 'பாகுபலி' படத்தின் மூலம் இந்திய அளவில் ரசிகர்களிடம் பிரபலமடைந்தார்.

அனுஷ்கா சினிமாவில் நடிக்க வந்து 15 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு அவருடைய ரசிகர்கள் டுவிட்டரில் #15YearsofAnushkaShettyREIGN என்ற ஹேஷ்டேக்கை உருவாக்கி இந்திய அளவில் டிரெண்டிங்கில் கொண்டுவந்தனர்.

தன் 15 ஆண்டு திரையுலக வெற்றியை ரசிகர்கள் கொண்டாடியதற்கு அனுஷ்கா நன்றி தெரிவித்துள்ளார்.

"உங்கள் அனைவருக்கும் என்றென்றும் நன்றி. உங்களது அன்புக்கும், ஆதரவுக்கும் நன்றி சொல்ல வார்த்தைகளே இல்லை. எனது இதயத்தின் அடித்தளத்திலிருந்து ஒவ்வொருவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாதுகாப்பாக, கவனமாக இருங்கள். உங்கள் ஒவ்வொருவருக்கும் மேலும் பல சிறப்புகள் அமைய வாழ்த்துகள்" - எனக் குறிப்பிட்டுள்ளார்.



# ஜொலிக்கும் ஐஸ்வர்யா ராஜேஷ்

பின்புலம் இல்லா விட்டாலும், தமிழ் சினிமாவில் முயன்றால் வெற்றிபெறலாம் என்பதற்கு உதாரணமாக இருப்பவர் ஐஸ்வர்யா ராஜேஷ்.

இன்றுவரை, குடும்பப் பாங்கான வேடங்களில் அதிகம் நடித்து வருகிறார். தென்னிந்திய மொழிப்படங்களில், "பிஸி"யாக உள்ள இவர், சமீபத்தில் கவர்ச்சி, போட்டோ ஷூட் நடத்தி, அதை இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

ஐஸ்வர்யா, "தங்கம் எப்போதுமே எனக்கு பிடிக்கும்'' எனக் கூறியுள்ளார். தங்கம் அணியாமலே அவர் ஜொலிக்கும் படங்கள் இணையத்தில் வரவேற்பை பெற்று வருகின்றன.



# பிக்பொஸில் கலந்துகொள்ளும் அதுல்யா ரவி

அதுல்யா ரவிக்கு பெரிய அளவிலான ஹிட் படங்கள் எதுவும் இதுவரை அமையவில்லை. சிறிய கெரக்டர்கள், இரண்டாவது ஹீரோயின் போன்றவைதான் அவருக்கு கிடைக்கின்றன. தற்போது அவர் நடித்துவரும் 'வட்டம்' படத்திலும் ஆண்ட்ரியா, நிக்கி கல்ராணி போன்ற முன்னணி ஹீரோயின்கள் உள்ளனர். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண ரசிகர்களிடையே பிரபலமாவதற்கான நடவடிக்கைகளை அவர் எடுத்துவருகிறார். பிக் பொஸ் நிகழ்ச்சியின் அடுத்த தொடரில், அதுல்யா ரவியும் இடம்பெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதற்கு பின், தமிழில் தனக்கு நல்ல வாய்ப்பு கிடைக்கும் என நம்புகிறார் அதுல்யா.



- தொகுப்பு: சசி

# புதிய தொழில் ஆரம்பிக்கும் ஜெனிலியா

தமிழில் 'போய்ஸ்', 'சந்தோஷ் சுப்பிரமணியம்', 'உத்தமபுத்திரன்', 'வேலாயுதம்' படங்களில் நடித்தவர் ஜெனிலியா. பொலிவூட்டில் 30 இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். பொலிவூட் நடிகர் ரித்தேஷை திருமணம் செய்த பிறகு சினிமாவை விட்டு விலகி குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டார்.




தன் கணவர் மற்றும் இரண்டு குழந்தைகளுடன் மும்பையில் வசித்து வரும் ஜெனிலியா புதிய தொழில் ஒன்றை ஆரம்பித்துள்ளார். காய்கறிகள், கீரைகள் உள்ளிட்ட சைவ உணவுப்பொருட்களை கொண்டு, அசைவ ருசியில் புதிய உணவு தயாரிக்கும் நிறுவனமொன்றை தொடங்கியிருக்கிறார். இதற்கு இமேஜின்மீட் என்று பெயர் வைத்திருக்கிறார். வெஜிடபிள் பிரியாணி மாதிரி எல்லா வகை சைவ உணவையும் அசைவ உணவின் பாணியில் தயாரிக்கிறார். இந்த நிறுவனத்தின் துவக்க விழாவை பிரமாண்டமாக நடத்த முடிவு செய்திருக்கிறார்.






# சூர்யா நடிக்கும் 'வாடிவாசல்'

நடிகர் சூர்யாவின் பிறந்த நாளான 23ஆம் திகதி அவருக்கு வாழ்த்து தெரிவிக்கும் விதமாக 'வாடிவாசல்' படக்குழு சிறப்பு போஸ்டர் ஒன்றை வெளியிட்டுள்ளது.

வெற்றிமாறன் இயக்கத்தில் சூர்யா நடிக்கவுள்ள படம் 'வாடிவாசல்'. வி.கிரியேஷன்ஸ் சார்பாக கலைப்புலி தாணு தயாரிக்கும் இப்படம் ஜல்லிக்கட்டு விளையாட்டை மையமாக வைத்து தயாராகிறது. மெரினா போராட்டம் மூலம் உலகளவில் பிரபலமான ஜல்லிக்கட்டு படத்தில் சூர்யா நடிப்பதால் படத்துக்கு பெரிய எதிர்பார்ப்புள்ளது. வேல்ராஜ் ஒளிப்பதிவு செய்யவுள்ள இப்படத்திற்கு, ஜீ.வி. பிரகாஷ் இசையமைக்கிறார். ஊரடங்கு முடிந்ததும் இதன் படப்பிடிப்பு தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், சூர்யாவின் பிறந்தநாளான கடந்த 23ஆம் திகதி தயாரிப்பாளர் தாணு 'வாடிவாசல்' படத்தின் போஸ்டரை வெளியிட்டு வாழ்த்துத் தெரிவித்தார். அதில் அவர் கூறியிருந்ததாவது: ''இன்று உங்கள் பிறந்தநாள் என்றும் அது சிறந்த நாள். இனிய இந்நன்னாளில் எல்லா நலமும் வளமும் பெற்று, தேக பலம், பாத பலம், ஆயுள் பலம் பெற்று வாழிய பல்லாண்டு" என வாழ்த்தியிருந்தார்.

# 80 வயதுவரை நடிக்க விரும்பும் எமிஜாக்ஷன்



மதராசபட்டினத்தில் அறிமுகமான எமி ஜாக்சன், குறுகிய காலத்திலேயே வேகமாக வளர்ந்து ஷங்கரின் இரண்டு படங்களில் அடுத்தடுத்து நடிக்கும் வாய்ப்பு பெற்றார். வேகமாக வளர்ந்துவரும் நேரத்தில் திருமணம் செய்து கொள்ளாமலேயே தனது ஆண் நண்பருடன் லிவிங் டு கெதராக வாழ்ந்து ஒரு குழந்தைக்கு தாயும் ஆகிவிட்டார். அவர் நடித்து 2 வருடமாகிவிட்டது. மீண்டும் நடிக்க தயாராகிவிட்டதாக கூறுகிறார்.

லண்டனில் வசித்துவரும் அவர் இதுபற்றி கூறியிருப்பதாவது:

நான் இந்தியாவில் இருப்பதை இழக்கிறேன். இந்தியா என்னை ஒரு நடிகையாக மட்டுமல்ல, ஒரு நல்ல மனுஷியாகவும் வளரச் செய்தது. எனது முதல் படமான மதராசபட்டினத்தின் படப்பிடிப்பிற்காக இங்கு வந்தபோது நான் என் பதின்ம பருவத்தில் இருந்தேன். அதற்கடுத்த ஆண்டுகளில், நான் சுயமாக அர்ப்பணிப்புடன் இருக்க கற்றுக் கொண்டேன். நான் இன்னும் கற்றுக் கொள்ளத்தயாராக இருக்கிறேன்.

நான் நடித்த ஒவ்வொரு கதாபாத்திரத்தையும் விரும்புகிறேன். நான் நடித்த ஒவ்வொரு படத்திலும் நான் முழு மனதுடன் பங்கேற்றேன். எனது ஸ்கிரிப்டை, என் கெரக்டரை நம்பினேன். நாயகிக்கு முக்கியத்துவம் உள்ள கதையிலும், வலுவான பெண் வேடங்களில் நடிப்பதிலும் கவனம் செலுத்திவந்தேன். நான் ஒரு நடிகை, கடைசிவரை அதாவது 80 வயது வரை நடிக்கலாம் என்று நம்புகிறேன். என் குழந்தை சுயமாக தன் பணிகளை செய்ய தொடங்கிவிட்டதால் நானும் நடிக்க தயாராகி விட்டேன் - என்கிறார்.

# 'சிந்து சமவெளி' படம் குறித்து ஹரீஷ் கல்யாண்



தமிழில் 'சிந்து சமவெளி' திரைப்படத்தின் மூலம் அறிமுகமான ஹரிஷ் கல்யாண் நடிக்க ஆரம்பித்து பத்து ஆண்டுகளை கடக்கவுள்ள நிலையில், தற்பொழுது சில வெற்றிப் படங்களின் மூலம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துவருகிறார்.

'பிக்பொஸ்' நிகழ்ச்சியின் மூலம் பிரபல்யமாகி 'பியார் பிரேமா காதல்' திரைப்படத்தின் மூலம் தனது வெற்றிப் பயணத்தை தொடங்கியுள்ளார்.

சமீபத்தில் இவரின் நடிப்பில் வெளியான தாராள பிரபு ஹிந்தியில் வெளியான விக்கி டோனர் திரைப்படத்தின் ரீமேக் ஆக அமைந்த நிலையில், தற்போது மற்றுமொரு ரீமேக் படம் ஒன்றிலும் நடித்துவருகிறார்.

தனது அடுத்தடுத்த படங்களை மிகக் கவனமாக தேர்ந்தெடுத்து நடித்துவரும் ஹரிஷ் கல்யாண் சமீபத்தில் கொடுத்துள்ள பேட்டியொன்றில் தனது முதல் படமான 'சிந்து சமவெளி 'படத்தில் நடித்ததைப் பற்றி வெளிப்படையாக பேசியுள்ளார்.

சிந்து சமவெளி படத்தில் நடித்து கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. அதைப்பற்றி நான் யோசிப்பதும் இல்லை, கவலைப்படுவதும் இல்லை என தான் அறிமுகமான சர்ச்சைக்குரிய படமான சிந்து சமவெளி திரைப்படத்தை பற்றி ஓபனாக ஹரிஷ் கல்யாண் பேசியுள்ளார்.

ஹரீஷ் கல்யாண் தற்பொழுது தெலுங்கில் விஜய் தேவரகொண்டா நடிப்பில் வெளியாகி வெற்றிபெற்ற 'பெல்லி சுப்புளு' படத்தின் தமிழ் ரீமேக்கில் நடித்து வருகிறார். இன்னும் பெயரிடப்படாத பெல்லி சுப்புளு தமிழ் ரீமேக் படத்தில் ஹரிஷ் கல்யாணுக்கு ஜோடியாக முதன்முறையாக பிரியா பவானி சங்கர் இணைந்து நடித்துள்ளனர். இதன் படப்பிடிப்பு வேலைகள் முற்றிலும் முடிந்து தற்பொழுது வெளியீட்டுக்காக காத்திருக்கிறது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7